தேம்பாவணி

மகனேர்ந்த படலம்

பதவுரை - விசேடவுரை

— தமிழவேள் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. Jasonn
Tamil
GRADE 11

தேம்பாவணி

மகனேர்ந்த படலம்

S. Jaso

— தமிழவேள் —

வெளியிடுவோர் :

விஜயலட்சுமி புத்தகசாலை
248, காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு—6.

தொலைபேசி 88930

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : ஒக்டோபர் 1974.

விலை : ரு. 4-00

அச்சிட்டோர் :
குமரன் அச்சகம்,
201, டாம் வீதி,
கொழும்பு-12.
தொலைபேசி : 21388

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் வரலாறு

தேம்பாவணி என்னும் நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர் ஆவர். இவர் இத்தாலிய நாட்டினர். இவரது இயற்பெயர் கொன்ஸ்டன்ரைன் யோசப் பெஸ்கி என்பதாம். இளமையில் இயேசுசபையிற்சேர்ந்து சமயப்பணியில் ஈடுபட்டுக் குருத்துவப் பட்டம் பெற்றார். சமயப்பணி செய்வதற்காக 1711இல் தமிழ் நாட்டிற்கு வந்தார். தம் சமயப் பணிக்காகத் தமிழைக் கற்றார். தமிழ் மொழியின் வளம் அவரைக் கவர்ந்தது. அதனால் தமிழ் இலக்கிய இலக்கணங்களை சுப்பிரதீபக்கவிராயரிடம் நன்கு கற்று முத்தமிழிலும் செவ்விய புலமை பெற்றார். தமிழரின் உணவு, உடை, வாழ்க்கைமுறை ஆகியவைகளைக் கைக்கொண்டார்; தமிழரோடு தமிழராக வாழ்ந்தார்.

தமிழ் மொழிமீது உள்ள ஆர்வத்தினால் தமது பெயரைத் தைரியநாதர் எனவும், வீரமா முனிவர் எனவும் ஆக்கினார். தமிழரைப்போலத் தமது உணவு, உடை, வாழ்க்கைமுறை முதலியவைகளை அமைத்தார். ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் உள்ள பல மொழிகளிலும் கலைகளிலும் சிறந்த அறிவு உள்ளவர். தமிழ் மொழியில் பல நூல்களை எழுதினார். தமிழ் மொழி வளம்பெற அவை பெரிதும் உதவின.

தமிழ் எழுத்துகளிற் சில திருத்தங்களை மேற்கொண்டார். ஏ. ஓ. என்னும் எழுத்துக்களின் இப்போதைய வடிவங்கள் இவரின் முயற்சியின் பேறாக அமைந்தனவேயாம். தமிழ் உரைநடை வளம்பெறுதற்கு இவர் வழிகாட்டியாக விளங்கினார். ஐரோப்பியக் கல்வி இலக்கிய மறுமலர்ச்சியைக் கருத்திற்கொண்டு அகராதி நூல்முறையை முதலிலே தமிழ் மொழியிலே அமைத்தனர். தமிழ் மொழியின் புதிய அமைப்புகளைக் கருத்திற்கொண்டு தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலையும் எழுதினார். செய்யுள் நூல்களை ஆக்கித் தமிழ் இலக்கியத்தை வளம்படுத்தினார், தமிழிலே கதை இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டார் எனலாம். தமிழ் இலக்கிய நூல்களை ஐரோப்பிய மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும் வழிகாட்டியவர் இவரே.

ஐரோப்பிய நாட்டவர் தமிழ்மொழிக்குப் பணியாற்றுதற்கு வழிகாட்டியவர் இவரேயாவர். பிறநாட்டுப் பெயர்களைத் தமிழாக்கமாக அமைத்தற்கும் வழிவகுத்தவர் இவரே. இவரது நூல்கள்:- தேம்பாவணி, தொன்னூல் விளக்கம், சதுர அகராதி, திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மானை, வேதவிளக்கம், பரமார்த்த குருவின் கதை, தமிழ்-இலத்தீன் அகராதி, தமிழ்—போர்த்துக்கீச அகராதி, திருக்குறள் (அறம்—பொருள் - இலத்தீன் மொழிபெயர்ப்பு), தமிழ் இலக்கணம் (இலத்தீன் மொழியில்).

இவரின் தொன்னூல் விளக்கம் ஐந்திலக்கணமும் கொண்ட பயன்தரும் நூல். சதுர அகராதி பெயர், பொருள், தொகை, தொடை என நான்கு பிரிவினது. தமிழ் இலத்தீன் அகராதி 9000 சொற்களைக் கொண்டது. இவரது தமிழ்ப் பணியைப் போற்றுமுகமாகத் தமிழகஅரசு இவருக்குச் சிலையை அமைத்துள்ளது. இவரது காலம் கி. பி. 1680-1747 ஆகும்.

இத்தாலி, இலத்தின், ஸ்பானி, கிரேக்கு, ஹீபுரு, தமிழ், சமஸ்கிருதம், இந்துஸ்தானி, தெலுங்கு, பாரசீகம் என்பன இவர் கற்ற மொழிகளாகும். மேலைநாட்டிலே பிறந்து தமிழைக் கற்றுத் தமிழ் மொழி வளம்பெறுதற்கான நல்ல இலக்கிய ஆக்கப்பணிகளைச் செய்தமை உலக வரலாற்றிற் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் வரலாறு

தமிழிலுள்ள சிறந்த பெருங்காவியங்களுள் தேம்பாவணியும் ஒன்று. தேம்பாவணி = தேம்பா + அணி. வாடாத மாலை என்பது இதன் பொருள். சூசைமாமுனிவரின் வரலாற்றைப் பெருங் காவியக் கதையாகக் கொண்டது, சூசையப்பர் - இயேசுநாதர் ஆகியவர்களின் வரலாறுகளும், பழைய ஏற்பாட்டில் வரும் வரலாறுகளும், திருச் சபையின் கருத்துகளும் இதில் விரிவாகக் கூறப்படுகின்றன. விவிலிய வேதத்தின் சுருக்க வரலாறே இந்நூல் எனலாம்.

இந்நூல் சூசையப்பரைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டது. மூன்று காண்டங்களையும் 36 படலங்களையும் 3615 விருத்தப் பாக்களையும் கொண்டது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பாற் பயனும் நல்குவது. பெருங்காவிய இலக்கணம் யாவும் உடையது. சொற்சுவையும், பொருட்சுவையும், அணிநயங்களும் உள்ளது. கம்ப ராமாயணம், சீவக சிந்தாமணி என்னும் காவியங்களுக்கு ஒத்த அமைப்பு உள்ளது. இந்நூல் கிறித்தவச் சமயச் சார்பானது எனினும் சிறந்த இலக்கிய நூலாகும். அடிப்படை வரலாற்றுடன் அதற்கிசைந்த பல சிறு வரலாறுகளும் கதைகளும் இணைந்து பெருங் காவியமாக அமைந்தது.

இயற்கை வளப்பில் இறைவனின் தோற்றம், இல்லற துறவறங்களின் முதன்மை, தொழிலின் மாண்பு, கற்பின் தலைமை, கடவுளின் இலக்கணம், வானோர் உயர்வு, பாவத்தின் கொடுமை, அறத்தின் அருமை ஆகியவை சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. திருமறையின் கோட்பாடுகளும், வரலாறுகளும், தத்துவங்களும், நீதிகளும், வழிபாட்டு முறைகளும் இந்நூலில் அடங்கி உள்ளன.

தமிழ் மரபுமுறை வழுவாமல் இக்காவியம் அமைந்துளது. நாடு -நகரப்படலங்களும், ஐந்திணை நிலங்களின் வருணனைகளும் நிகழ்ச்சிகளின் வருணனைகளும், கதையில் வரும் மக்கட் பெயர்களும் இடப் பெயர்களும் இதற்குச் சான்றாக உள, தொண்ணூறு வகைச் சந்த வேறுபாடுகள் உள்ளன. சிலப்பதிகார வரிப்பாடல் போன்ற சந்தங் களும் உள. 'பார்க்கடல் என்னுள்ளம் பதுமமலர் அரும்ப' (மக. படலம்.) போன்ற பாடல்கள் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

திருவள்ளுவர், கம்பர், இளங்கோ, திருத்தக்கதேவர், சேக்கிழார், மணிவாசகர் போன்ற தமிழ் அறிஞர்களதும், தாந்தே, வெர்ஜில் போன்ற மேலைநாட்டறிஞர்களதும் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. ஸ்பானிய நாட்டுப் பரிசுத்த அக்னிமேரி என்பவர் எழுதிய தேவ சரிதையே இந்நூலின் முதனூலாகும். இந்நூல் மதுரைத் தமிழ்ச்சங் கத்தில் அரங்கேறியது. தமிழறிஞர் பலர் இந்நூலைப் பாராட்டியுள் ளனர்.

'சாரமாந் தேம்பாவணியினைத் தொடினும்
தமிழ்மணம் கமழுமென் கரமே
ஈரமா நெஞ்சில் இடம்பெற நட்டால்
இன்பமாய் வளரு என்வாழ்வே'

எனச் சுத்தானந்த யோகியார் கூறியது மிகப் பொருத்தமேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேம்பாவணி - மகனேர்ந்த படலம்

கவிக்கூற்று

1. இந்நீ ரன்னூர்க் கெண்ணைந்நா ளினிதி லங்கட் போயினபின்
மெந்நீ ருடுத்தீங் கவதரித்து விள்ளா முகையாந் திருமகன்றன்
அந்நீர் முகத்திற் றுகட்டுடைத்து அவனிக் கெங்கும் பயன்பயப்ப
முந்நீ ரெழுந்த விளங்கதிர்போன் மூதூர் வந்த துசொல்வாம்.

(பதவுரை) இந்நீர் அன்னூர்க்கு — இத்தன்மைகளையுடைய சூசையும் மரியும் ஆகியவர்க்கு; எண் ஐ நாள் இனிதில் — நாற்பது நாள்கள் குழந்தையுடன் மகிழ்வாக; அங்கண் போயினபின் — அழகிய பெத்தலகேம் என்னும் ஊர்க்குச் சென்றபின்; மெந்நீர் எடுத்து ஈங்கு அவதரித்து — உடலை எடுத்து இப்புவியிலே பிறந்து; விள்ளா முகையாம் திருமகன்றன் — மலராத மொட்டாகிய திருக்குமாரரது; அம்நீர் முகத்தில் துகள் துடைத்து - அழகியதெய்வ இயல்பு உள்ள இருமுன்னிலையில் பாவங்களை நீக்கி: அவனிக்கு எங்கும் பயன்பயப்ப - புவியின்கண் யாவர்க்கும் பயன் உண்டாகும்படி; முந்நீர் எழுந்த இளங்கதிர்போல் - கடலின்கண் உதித்த காலை ஞாயிறுபோல; மூதூர் வந்தது சொல்வாம் — அவ் ஊரிலிருந்து புறப்பட்டு எருசலேம் என்னும் ஊருக்கு அவர்கள் வந்த வரலாற்றைக் கூறுவாம்.

(விளக்கவுரை) நீர் — நீர்மை - தன்மை. அன்னூர்—அன்ன என்னும் இடைச்சொல்லடியாக வந்த பெயர்ச்சொல். ஈண்டு சூசை, மேரி ஆகியோரைச் சுட்டிநின்றது. இந்நீர் = இ+நீர். இ - அண்மைச்சுட்டு. முற்படலத்திற் சொல்லிய அற்புதநிகழ்ச்சிகளைக் குறித்தது. அவை—மூவரசர்கள்வந்து திருக்குமாரரைத் தொழுதமை; விலங்குகளாற் துன்பம் நேராதபடி அவர் இருந்த குகையைத் தேவதூதன் ஒருவன் காத்து நின்றமை முதலியன. எண்ணைநாள் = எண் + ஐ + நாள்; எட்டு ஐந்து நாள். எட்டு ஐந்து=நாற்பது. மெய் + நீர் = மெய்ந்நீர். இதில் யகரமெய் எதுகை நோக்கித் தொக்குநின்றது. ஈங்கு — சுட்டெழுத்து நீண்டது. உயர்ந்தோர் பிறத்தலை அவதரித்தல் என்பர். அவ — கீழ்; தரித்தல் — தங்குதல். விள்ளுதல் — மலர்தல். திருக்குமாரர் சிறுகுழந்தையாக இருத்தலின் முகையை அவருக்கு உவமையாகக் கூறினர். முகம் — முன்னிலை. துகட்டுடைத்து = துகள் + துடைத்து. துகள் - பாவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனி - பூமி. ஊற்றுநீர், ஆற்று நீர், மழை நீர் ஆகிய மூவகை நீரும் சேர்ந்ததே கடல் ஆதலின் அதனை 'முந்நீர்' என்றார். திருக்குமாரர் குகையிலிருந்து புறப்பட்டுச் சென்றதனால் உலகின் அறியாமை நீங்கி அறிவு பரவுதலின் அவருக்கு 'இளங்கதிர்' உவமை ஆயிற்று. உலகம் படைக்கப்பட்ட காலத்து உள்ள ஊர் ஆதலின் 'மூதூர்' என்றார். மூதூர் = முதுமை + ஊர். வந்தது - தொழிற்பெயர்.

முதல் மகவை நேர்த்தி செய்யும் முறைமை

2\. நிறைநீத் தெகித்தர் பகைமுற்றி நெடுநாள் சிறைசெய்தி யூதர்கடம்
மிறைநீத் துயர்ந்த குலமெல்லாம் விடைத்தா ரென்று விடைத்
[திறையோன்
குறைநீத் தெல்லாத் தலைமகரைக் குலைய வொன்னார் தான்கொன்று
சிறைநீத் தியூத ரமுதொழுகுந் திருநா டமைத்தி யருள்செய்தான்.

(ப-ரை) நிறை நீத்து - நீதி தவறி; எகித்தர் - எகித்து நாட்டவர்; பகை முற்றி - பகைமைகொண்டு; நெடுநாள் சிறைசெய்து - நீண்ட காலம் சிறையில் வைக்கப்பட்டு இருந்த; யூதர்கள்தம் - யூதர்களது; மிறைநீத்து உயர்ந்த குலம் எல்லாம் - குற்றத்தின்நீங்கி யுயர்ந்த குலம் யாவையும்; விடைத்தார் என்று - வருத்தினார்கள் என; இறையோன் விடைத்து - கடவுள் கோபம்கொண்டு; குறைநீத்து எல்லாத் தலைமகரை - ஒன்றும் குறையாமல் எல்லாத் தலைப்பிள்ளைகளையும்; ஒன்னார் குலைய - பகைவர் அஞ்சும்படி; தான் கொன்று - கொல்லுவித்து; யூதர் சிறைநீத்து - யூதர்களது சிறையை நீக்கி; அமுது ஒழுகும் திருநாடு அமைத்தி அருள்செய்தான் - செல்வம் மிக்க அழகிய நாட்டைப் பெறும்படி அமைப்பித்து அருள்செய்தான்.

(வி-ரை) எகித்தர் - எகிப்து நாட்டவர். யூதர் - பண்டு பாலத்தீனத்தில் வாழ்ந்தவர். செய்து + யூதர் = செய்தியூதர். குற்றுகரம் யகரம் வரக் குற்றிகரம் ஆயிற்று. 'யகரம் வரக் குறள்உ திரி இகரமும்' (நன். 93.) யூதர் கடம் = யூதர்கள் + தம். 'குறில்செறியா லள அல்வழிவந்த தகரம் திரிந்தபிற்கேடும்' நன். 229. மிறை - குற்றம். 'அறிவிலான் செய்யும் பெருமிறை தானே தனக்கு' (திருக்குறள் 847). விடைத்தல் - (1) துன்புறுத்தல். 'விடையா வடந்தைசெய்' (கல்லா. 51). (2) பெருங்கோபம் கொள்ளுதல். 'விடைத்துவரு மிலங்கைக் கோன்' (தேவா. 159. 10). தலைமகர் - மூத்த பிள்ளை. திருநாடு - பாலத்தீனம். கடவுளின் ஆசீர்வாதம் பெற்ற நாடாதலின் 'திருநாடு' என்றார். முன்னொருமுறை எகித்திய அரசன் பாலத்தீனரைச் சிறை செய்து வருத்த, கடவுள் கோபமுற்று அவர்களின் தலைப்பிள்ளைகளைக் கொல்லுவித்துப் பாலத்தீனரை விடுவித்தார் எனப் பழைய ஏற்பாடு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குமாரரை நேர்த்திசெய்யப் பெற்ருர் புறப்படல்

௩, முன்ஞட் செய்த வருள்மறவா முறைகொண் டொழுகுந் தன்மை
[யெனப்
பின்ஞட் பெருந்தலைமகரைப் பிறழா மையினேர்ந் தவர்மீட்ப
தன்ஞட் சிறையைத் தீர்த்தபிரா னவர்க்கே வினபா லாலெவர்க்கு
மின்ஞட் சிறைதீர் தனிமகனை இங்கு நேர்தற் கேகலுற்ருர்.

(ப-ரை) முன்ஞள் செய்த அருள் - முற்காலத்திலே கடவுள் தங்களைச் சிறையின் நீக்கிய அருளினை; மறவா முறைகொண்டு ஒழுகும் தன்மை என - மறவாத முறைமையில் ஒழுகுகின்ற நன்றித் தன்மையாகும்படி; பின்ஞள் பெருந்தலை மகரை — அந்நிகழ்ச்சியின் பின்பு தங்கள் குலத்துத் தலைப்பிள்ளைகளை; அந்நாள் சிறையைத் தீர்த்த பிரான் அவர்க்கே - அக்காலத்திலே தம் சிறையை நீக்கிய கடவுளுக்கு; பிறழாமையின் நேர்ந்து - தவருத முறைப்படி ஒப்படைத்து; அவர் மீட்பது ஏவின பாலால் - அவர்களை மீண்டும்பெறுதலைக் கொண்டிருந்த முறைமையிஞல்; எவர்க்கும் சிறைதீர் தனி மகனை — எல்லார்க்கும் உரிய பாபச் சிறையை நீக்கவந்த ஒப்பற்ற திருக்குமாரரை; இங்கு நேர்தற்கு ஏகல் உற்ருர் - எருசலேமில் உள்ள தேவாலயத்தில் நேர்த்தி செய்தற்கு அவரது பெற்ருர் புறப்பட்டனர்.

(வி-ரை) முன்ஞள் = முன் + நாள். இஃது சிறை விடுவித்த காலத்தை உணர்த்திற்று. மறவா என்பது ஈறுகுன்றிய பெயரெச்சம். பின்ஞள் = பின் + நாள். பால் - வேதவிதி. அன்ஞள் = அ + நாள். இன்ஞள் = இ + நாள். எதுகை நோக்கி அன்ஞள், இன்ஞள் எனத் திரிந்தன. திருக்குமாரர் ஆதலின் 'தனிமகன்' என்ருர். இறைவன் எகித்தியரின் தலைப்பிள்ளைகளைக் கொல்வித்துப் பாலத்தீனியரை விடுவித்தமையின் பாலைத்தீனியர் தம் தலைப்பிள்ளைகளை எருசலேம் தேவாலயத்தில் இறைவனிடம் ஒப்புக்கொடுத்தலைத் தம் பரிசுத்த கடமையாகக் கொண்டிருந்தனர். இவ்வாறு செய்தலால் அக்குழந்தைகள் பரிசுத்தமுடையராவர் என விவிலிய வேதம் (லூக்கா அதி. 21—23) விதித்துள்ளது.

௪. பிறையொண் வடிவந் தேய்ந்தொளிரும் பிலிற்றும் அவிச்சப்
[பதத்தாளும்
மறையொண் வடிவம் போர்த்திலங்கி மலர்க்கோலோங்கு
[மாதவனும்
நறையொண் வடிவந் துணர்ப்பதத்தை நண்ணியேற்றி
[யாசிலைக்கேட்
டுறையொண் வடிவங் கொண்முகில்போல் உடல்கொள் இறைவ
[னேந்தினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப-ரை) பிறை ஒண் வடிவம் தேய்த்து ஒளி சூழ் பிலிற்றும் - பிறையாகிய ஒளிவடிவத்தைத் தேய்த்து ஒளி சூழ வீசுகின்ற; அனிச்சம் பதத்தாளும் - அனிச்சம் பூவைப் போற் பாதத்தையுடைய மேரித் தாயும்; மறை ஒண் வடிவம் போர்த்து இலங்கி-வேதமாகிய ஒளிவடிவத்தைக் கொண்டு விளங்குகின்ற; மலர்க்கோல் ஓங்கு மாதவனும் - மலர் போலும் கோலைத்தாங்கிய பெருந்தவத்தினனான சூசை முனிவரும்; நறை ஒண் வடிவம் துணர்ப் பதத்தை நண்ணி - தேனினால் சிறந்த வடிவமும் மலர்போலும் சிறப்பும் உள்ள இறைவனது திருப்பாதங்களை அடைந்து; ஏற்றி ஆசியைக்கேட்டு - துதித்து ஆசிமொழியை வேண்டி; உறை ஒண் வடிவம் கொள் முகில் போல - துளியாகிய நல்ல உருவத்தைக் கொண்ட முகிலைப் போல; உடல் கொள் இறைவன் ஏந்தினர் - திருவுடல் கொண்டு விளங்கிய திருக்குமாரரைத் தாங்கினர்.

(வி-ரை) வடிவம் தேய்த்தல் - வடிவத்திலும் ஒளிமிகுதல். பிலிற்றல் - தெளித்தல். மேரியன்னையின் பாதத்திற்குப் பிறை - அனிச்சம் ஆகியனவும், திருக்குமாரரது திருவுடலுக்கு முகிலும் உவமைகள். 'தேய்த்து' என்பதனால் பிறையிலும் பாதத்திற்கு ஒளிமிகுதி கூறினார். உவமானத்திற்குக் குறைவுதோன்றக் கூறுதல் நிந்தையுவமை. உலகு உய்ய முகில் நீரை வழங்குதல்போல இயேசுபிரான் அருளை வழங்கினார். பரந்த கடல் நீர் ஆவியாய் முகிலாதல்போல எல்லையற்ற பரம்பொருள் ஆனவர் இயேசு என்னும் தூய வடிவத்தைப் பெற்றார். உலகப்பற்றின் நீங்கித் தூய துறவு நெறியில் நின்றமையானும், திருக்குமாரருக்குத் தந்தையாம் பேறு பெற்றமையானும் 'மறையொண் வடிவம்' 'மாதவன்' எனச் சூசையப்பரை ஆசிரியர் சிறப்பித்தார். இறைவனின் பெருங்கருணைச் சிறப்பை அவரது பாதத்திற்கு ஆக்கி 'நறைகொண் வடிவந் துணர் பாதம்' என்றார். 'பதத்தாள்' என்பது குறிப்பு வினையாலணையும் பெயர். பதத்தாளும் மாதவனும் துணர்ப் பதத்தை நண்ணி முகில்போல் உடல்கொள் இறைவனை ஏந்தனர். இறைவன் - திருக்குமாரர்.

தேவகுமாரனின் மகிமை

5\. விண்ணும் மண்ணும்பொதுவற்றுவிதித்தும்அருளாற்புரிந்தளித்தும்
எண்ணும் எள்ளும் நீத்தகுணத் திருமை சேர்ந்தும் எனை ஆள்வான்
கண்ணுங் கையும் அருட்புரியக் கருணைக் கடலோன் புறத்தேகி
மண்ணும் விண்ணும் உவந்ததிலை வகுத்தற் காற்றுப் பாநிலையே.

(ப-ரை) விண்ணும் மண்ணும்பொது அற்ற விதித்தும் - வானுலகும் பூவுலகும் தத்தம் சிறப்புப்பெறப் படைத்துப்; அருளாற் புரிந்து அளித்து - கருணையினால் அவைகளைக் காத்தும்; எண்ணும் எள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்த — புகழ்தலும் இகழ்தலும் இல்லாத இயல்பினுலே: இருமை ஏத்தும் எனை ஆள்வான் - இம்மையிலும் மறுமையிலும் என்னை ஏற்று அருள் செய்பவனுகிய இறைவன்; கையும் கண்ணும் அருள் புரிய - திருக்கரம் திருக்கண் இரண்டினுலும் அருள் செய்தற்காக; கருணைக்கடலோன் புறத்து ஏகி - கருணை நிறைந்த தேவகுமாரனுகத் தம்மை வெளிப்படுத்தி மண்ணும் விண்ணும் உவந்தநிலை வகுத்தற்கு பாநிலை ஆற்று - பூவுலகையும் விண்ணுலகையும் மகிழ்த்து ஆசீர்வதித்த கருணைநிலையை எடுத்துரைப்பதற்குப் பாக்களின் நிலைகள் தகுதியுடையனவல்ல.

(வி-ரை பொதுவறல் — சிறப்பியல்பு பொருந்துதல். விதித்தல் படைத்தல். என்ணுதல், எள்ளுதல் என்னும் தொழிற் பெயர்கள் ஈறு குன்றி எண்ணும்மை பெற்றன. இருமை - ஆகுபெயர். கையினுற் தொட்டும் கண்ணினுல் நோக்கியும் அருள் புரிந்தார் ஆதலின் அவ்வாறு கூறினுர். எனை என்பது ஆசிரியரை. அருள்புரியப் புறத்தேகி உவந்தநிலை ஆற்றற்குப் பாநிலை ஆற்று என இணைக்க. பாநிலை — பால்பகா அஃறிணைப் பெயர். 'வையகமும் வானகமும் ஆற்றலரிது' (திருக்குறள் அதிகாரம் 11) ஆள்வான் என்பது வினையாலணையும் பெயர்.

6. காண்றேய் மலர்மேற் றேன்றுளியோ கதிர்தோய் வளைமேல்
[முத்தணியோ
தேன்றேய் கமலத் தனப்பார்ப்போ சீர்தோய் பொன்மேற்
[றுகிர்ச்செப்போ
மீன்றேய் முடிசூழ் தாய்கரத்தில் வேய்த்தான் முகத்தில் வில்வீசி
வான்றேய் முகில்தோய் சுடரன்ன மனுவின் னுடல்தோய்ந்
[துதித்தபிரான்

(ப-ரை) வான்தோய் முகில் தோய் சுடர் அன்ன மனுவின் உடல் தோய்ந்து உதித்தபிரான் - ஆகாயத்திலுள்ள முகில்கள் மறைக்கும் சூரியனை ஒத்து மக்கள் உருவில் அமைந்து தோன்றிய யேசுபிரான்; மீன் தோய் முடிசூழ் தாய் கரத்தில் வில் வீசி வேய்ந்தான் - நட்சத்திரம் விளங்கும் முடியையுடைய மரித்தாயின் கைகளில் அமர்ந்து தெய்வ ஒளியை வீசி விளங்கினுர். அந்நிலையில் அவர்; கான் தோய் மலர் மேல் தேன் துளியோ - நீரோடையில் மலர்ந்த மலரின்கண் உள்ள தேனே; கதிர்தோய் வளைமேல் முத்து அணியோ - ஒளி பொருந்திய சங்கில் உள்ள முத்து நிரையோ; தேன் தோய் கமலத்து அனப் பார்ப்போ - தேன் உள்ள தாமரை மலர்மேல் உள்ள அன்னப்பறவையின் குஞ்சோ; சீர்தோய் பொன்மேல் துகிர்ச்செப்போ - சிறப்பு உள்ள பொற்தட்டத்தின் மேல் வைத்த பவளச் செப்போ!

(வி-ரை) உலக மக்கட் குலத்தவரின் அஞ்ஞான அகவிருள் நீங்கத் தோன்றிய திருக்குமாரருக்கு, புறவிருள் அகற்றும் சூரியனை உவமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். திருக்குமாரரைத் தந்து உலகிற்குத் தாயாகும் பேறுபெற்ற பெருமை தோன்ற 'மீன்தோய் முடிசூழ்தாய்' என்றார். மேரியன்னை யின் கைகளில் அமர்ந்திருந்த திருக்குமாரரின் பெருமை தோன்ற 'மலர்மேற் தேன் துளியோ, வளைமேல் முத்து அணியோ, கமலத்து அனப் பார்ப்போ, பொன்போற் துகிர்ச்செப்போ' என உருவகங் களாகக் கூறினர். இவ்வாறு பலவாறு உருவகித்துக் கூறுதல் பல படப்புனைவணி ஆகும். மேரியன்னைக்கு மலர் - வளை - கமலம் - பொன் ஆகியனவும், திருக்குமாரருக்குத் தேன் -முத்து - அனப்பார்ப்பு - துகிர்ச் செப்பு ஆகியனவும் உவமைகள். ஓகாரம் ஐயப்பொருளது. வில் ஒளி. வளை - சங்கு. வேய்தல் - மலர்தல் (கல்லாடம் 20-5).

சூரியன் உதித்தல்

7. வேய்ந்தா னன்னு னெனவானின் விழிபோல் வேய்ந்தா
[னொளிவேந்தன்
ஆய்ந்தான் கண்டா னீத்தகடல் ஆற்று வின்பக் கடலினிதிற்
தோய்ந்தான் மலர்த்தாள் கதிர்க்கையாற் றொழுதான் றொழாமற்
[றவர்கண்டு
காய்ந்தா னென்னக் கதிர்ச்சரங்கள் கடுகி வீசிக் கடுத்தனனே.

(ப-ரை) அன்னன் வேய்ந்தான் என - முன் சொல்லிய தன்மையாக அவதரித்த நாதன் புறப்பட்டுத் தோன்றினன் என்று; வானின் விழிபோல் வேய்ந்தான் ஒளிவேந்தன் - ஆகாயத்தின் கண் போல அமைந்தவனும் ஒளிக்கு அரசனும் ஆகிய சூரியன்; ஆய்ந்தான் கண்டான் — ஆராய்ந்து நாதரைக் கண்டான்; நீத்த கடல் ஆற்று இன்பக் கடல்-தான் அப்பொழுது விட்டுநீங்கிய கடலினும் பெரிதாகிய பேரின்பக் கடலிலே; இனிதில் தோய்ந்தான் - நன்றாக மூழ்கி மகிழ்ந்தான்; மலர்த்தாள் கதிர்க்கையாற் தொழுதான் - அவரது மலர் போன்ற பாதங்களைத் தனது மலர்களாகிய கைகளை இணைத்து வணங்கினன்; தொழா மற்று அவர் கண்டு — அவரைத் தொழாத ஏனையவரைக் கண்டு; காய்ந்தான் என்ன - கோபித்தான் போல; கதிர் சரங்கள் கடுகி வீசி கடுத்தனன் - (சிறிது நேரம் சென்றபின்) தன் கதிர்களாகிய அம்புகளை விரைந்து பரப்பி எழுந்தனன்.

(வி-ரை) ஆய்ந்தான் என்பது முற்றெச்சம். விழிபோல் வேய்ந் தான், காய்ந்தானென்ன என்பன உவமைகள். போல், இன், என்ன - உவமை உருபுகள். இன்பக்கடல், கதிர்க்கை, கதிர்சரம் - உருவகங்கள். சரம் - அம்பு. காய்தல் -கோபித்தல். அவர்கள் செல்லும்போது சூரியன் உதித்து மேலெழுந்ததை இப்பாடல் கூறுகிறது. 'தொழா மற்றவர் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்ச்சரங்கள் கடுகிவீசிக் காய்ந்தான்' என்பது தற்குறிப்பேற்ற அணி, வேய்தல் – (1) மலர்தல் (2) பதிதல். அவர்க்கண்டு – இரண்டாம் வேற்றுமைத் தொகை.

8. பைந்தார் பூண்ட பிறன்மனையாள் பற்றிச் சென்ற கண்மறுத்த
செந்தார் நல்லோர் மாட்சியெனச் சிறுவனேகத் தீண்டியதீ
வெந்தார் வெய்யோன் புழுங்கியதன் வில்லைச் சுருங்கிப் புதுமகளிர்
தந்தார் மறைவி னின்றதெனத் தண்கார் மறைவுற்றொளித்தனனே

(ப–ரை) பைந்தார் பூண்ட பிறன்மனையாள் பற்றிச் சென்ற கண் மறுத்த – பசிய மாலையை அணிந்த பிறரின் பெண்களை விரும்பிச் சென்ற கண்களைத் தடுத்த; செந்தார் நல்லோர் மாட்சி என – செம்மையான மாலையை அணிந்த நன்மக்களது நல்லியல்பைப் போலவும்; புதுமகளிர் தம்தார் மறைவின் நின்றது என – புதிதான மணம் செய்த கன்னியர் தம் மாலைகளின் மறைவில் நின்ற தன்மையைப் போலவும்; சிறுவன் நோகத் தீண்டிய தீ வெம்தார் வெய்யோன் – தேவனுகிய சிறுகுழந்தை வருந்தும்படி தீண்டிய தீப்போலும் வெம்மைக் கதிர்களையுடைய சூரியன்; புழுங்கிய தன் வில்லைச் சுருங்கி – வருத்திய தன் கதிர்களைச் சுருக்கி; தண்கார் மறைவுற்று ஒளித்தனன் – குளிர்ந்த கரிய மேகத்தின்பின் மறைந்து சென்றான்.

(வி–ரை) பிறன்மனை ... பற்றிச் சென்ற கண்மறுத்த ... நல்லோர் மாட்சியென, புதுமகளிர் தந்தார் மறைவின் நின்றதென,........ வெய் யோன் தண்கார் மறைவுற்று' – உவமையணி. சிறுவனேகத் தீண்டிய வெந்தார் வெய்யோன் புழுங்கியதன் வில்லைச் சுருங்கி........ தண்கார் மறைவுற்றொளித்தனன் – தற்குறிப்பேற்ற அணி. என – உவமை உருபு. சிறுவனேக – சிறுவன் + நோக. பைந்தார், செந்தார், தண்கார், புதுமகளிர் – பண்புத்தொகைகள். மாட்சி – பண்புப் பெயர். வில் – ஒளி. பிறன் – பிற என்னும் இடைச்சொல் அடியாகவந்த படர்க்கை ஒருமை ஆண்பாற் பெயர். 'வெய்யோன் மறைவுற்று ஒளித்தனன்' என்பதனுல் சூரியனுக்குக் குறைவும் திருக்குமாரருக்கு உயர்வும் உணர்த்தினர்.

அவர்கள் செல்லும்போது இயற்கை துணையாதல்

9. சுடுத்த பருதி கதிர்ச்சரங்கள் காத்த வட்டத் திளமுகிலோ
டடுத்த தென்றல் சாரையிட் டணைய வீசி நறும்பைம் பூ
வுடுத்த வண்ணத் துள்ளுளபே ருவகை பொதித்த முகத்துலகந்
தொடுத்த வுவப்பி னின்பொழியாத் தோன்றிற் றன்றோர்
[விழாவணியே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப — ரை) கடுத்த பருதி கதிர்ச்சரங்கள் காத்த - காய்கின்ற சூரியனின் கதிர்களாகிய அம்புகளைத் தடுத்த; வட்டத்து இளமுகிலொடு - வட்டமான வெண்மையுள்ள முகிலொடு; தென்றல் சாமரையிட்டு அனைய வீசி - தென்றற் காற்றானது சாமரை வீசியதுபோல மெல்லென வீச; நறும்பைம்பூ உடுத்த வண்ணத்து - நல்ல மணம் உள்ள பூக்களை உடைகளாகப் பொருந்திய நிறத்துடனும்; உள் உள பேர் உவகை பொறித்த முகத்து - உள்ளத்தில் உள்ள பெரிய மகிழ்ச்சி பொருத்திய தோற்றத்துடனும்; உலகம் தொடுத்த உவப்பின் - உலகின்கண் பொருந்திய மகிழ்ச்சியினாலே; இன்பு ஒழியா - இன்பம் நீங்காத; ஓர் விழா அணி அன்று தோன்றிற்று - ஒப்பற்ற விழாவின் அலங்காரம் அவர்கள் நடந்து சென்ற நேரத்தில் உண்டாகியது.

(வி — ரை) இளமுகில் - வெண்முகில். வெம்மையான சூரிய கதிர்கள் தேவ மகவின்மீது படாமல் குடைபோல வெண்முகில் மேலே விளங்கின ஆதலின் 'வட்டத்திளமுகில்' என்றார். வெம்மையைத் தணித்தற்காகத் தென்றலும் வீசியது. தென்றலுக்குச் சாமரை உவமை. அனைய - உவமை உருபு. பட்டு என்பது பட என்றாற்போல, வீசி என்பதனை வீச எனக்கொள்க. வண்ணம் — நிறம். உலகம் - ஆகுபெயர். முகிலொடு தென்றல் வீச பூ உடுத்த வண்ணத்துடனும் உவகை முகத்துடனும் உலகம் தொடுத்த உவப்பினின் இன்பு நீங்காத விழா அணி தோன்றிற்று. இயற்கையின் தோற்றங்கள் யாவும் ஒரு விழாவை அவர்களுக்கு நினைவுறுத்தின. விழாவணி - உருவகம்.

10\. சிரைவாய்க் கனியாழ் தும்பிசெயச் சிகிகளாடு நாடகமும்
இரைவாய்க் குயில்க ளின்குரலும் இணர்வாய்ப் பொழில்கள் [பெய்நறவும்
கரைவாய்ப் பொய்கை மலர்க்கலத்திற் கனித்தேந் தீபதீந் தேன் [மணமும்
விரைவாய்த் தடத்தார்த் தெதிரெதிரே விருந்து செய்யப் [போயினரால்.

(ப—ரை) தும்பி சிரைவாய் கனி யாழ் செய - வண்டுகள் நரம்பு கனிடத்துக் கனிகின்ற யாழ்போல ஒலிக்க; சிகிகள் ஆடு நாடகமும் - மயில்கள் ஆடுகின்ற நடனங்களும்; இரைவாய் குயில்கள் தீம் குரலும் - கூவும் வாயினையுடைய குயில்களின் இனிய ஓசையும்; இணர்வாய் பொழில்கள் பெய் நறவும் - மகரந்தம் உள்ள பூக்கள் சோலையின் கண் சொரிகின்ற தேனும்; பொய்கை கரைவாய் மலர்க்கலத்தில் - குளங்களின் கரைகளில் பூக்களாகிய கலன்களிலே; கனிந்து ஏந்திய தீம்தேன் மணமும் - முதிர்ந்து நிறைந்த இனிய தேன்களுடன் கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசனையும், விரைவாய் நடந்து ஆர்த்து - விரைந்து வழிகள்தோறும் நிறைந்த; எதிர் எதிரே விருந்துசெய - நேர் நேரே விருந்தாக உதவ அவர்கள் சென்றனர்.

(வி-ரை) இரை — நரம்பு. வாய் - (1) வாய் என்னும் உறுப்பு. (2) ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உருபு. தும்பி — வண்டு. மிகி — மயில். குயில் கடும் குரல் = குயில்கள் + தீங்குரல். இணர் — மகரந்தம். நடம் - வழி. விரைவாய் - விரைந்து. ஆர்தல் — நிறைதல். விருந்து - உபசரணை (உபசரித்தல்). தீம் - இனிமை. மலர்க்கலம் - உருவகம். யாழுக்குத் தும்பி உவமை. ஆல் — அசை. பெய் நறவு - வினைத்தொகை.

தேவர்கள் வந்து சூழுதல்

11\. பில்கித் தீந்தேன் துளி சுரக்கும் பிணையற்றிரளோர் மாரியென
நக்கித் தீஞ்சொற் பாவிசைகள் நயப்பிற் பாடி மின்னினிறத்
தொல்கித் தீண்டிற் கண்களிய வொளிசெய் தையா யிரத்திரட்டி
மல்கிக் காத்தவும் பரலால் வந்தா ரன்றோ ரெண்ணிலரே.

(ப-ரை) தீம்தேன் பில்கி துளிசுரக்கும் பிணையல் திரள் - இனிய தேன் நிறைந்து அதனைத் துளியாகச்சொரியும் மாலைகளை; ஓர் மாரி என நல்கி - ஒப்பற்ற மழையைப்போல தொங்கவிட்டு; தீம்சொல் பா இசைகள் நயப்பில் பாடி — இனிய சொற்களுடன் கூடிய பாக்களை இசையுடன் விரும்பும்படி பாடி; மின்னின் நிறத்து ஒல்கி - மின்னலின் தன்மைபோலத் தோன்றி; தீண்டில கண்களிய ஒளி செய்து - தொடுதலினாலே கண்கள் மகிழும்படி ஒளியைச் செய்த; ஐயாயிரத்து இரட்டி மல்கிக்காத்த உம்பர் அலால் - பதினாயிரமாக நிறைந்து அம்மூவர்களைக் காத்துச்சென்ற தேவர்களேயன்றி; அன்று ஓர் எண்ணிலர் வந்தார் - அந்த நேரத்தில் எண்ணில்லாத வேறு தேவர்களும் வந்தனர்.

(வி-ரை) அவர்கள் வழிநடந்தபோது அவர்களைக் காத்தற்காகப் பதினாயிரம் தேவர்களும் வேறு எண்ணில்லாத தேவர்களும் மாலைகளைச் சூடி இனிய கீதங்களைப் பாடிக்கொண்டு மின்னலின் அழகிய தோற்றத்துடன் கண்கள் உவகையுறும்படி அவர்களைச் சூழ்ந்து சென்றனர். பில்குதல் - நிறைதல். பிணையல் - மாலை. திரள் - தொகுதி. பாவிசை = பா + இசை. நயப்பில் - வேற்றுமை உருபு மயக்கம்; இல் - ஒடு. நிறம் - தன்மை. ஒல்குதல் - தோன்றுதல். ஐயாயிரத்து இரட்டி - பதினாயிரம். மல்குதல் - நிறைதல். உம்பர் - தேவர். பில்கி, நல்கி, பாடி, ஒல்கி, செய்து, மல்கி, உம்பர் எண்ணிலர் வந்தார். அலால் - அல்லால் — அன்றி; குறிப்புவினை வினையெச்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12\. கற்பே யணியென் றோப்பிமதுக் கரையாந் தண்டார் மாதர்கடம்
பொற்பே கணவர் தமக்கல்லாற் புறத்துப் பயனே பயவாய்போல்
வெற்பே யெழுஞ்செஞ் சுடர் நாண விண்ணோர் புடையின்
[பொய்த்துற்ற
பற்பே ருருவிம் மூவரலாற் பலருங் காணத் தோன்றினரே.

(ப-ரை) கற்பே அணி என்று ஓப்பி - உயர்ந்த அணிகலன் என அதனைக்கொண்டு; மதுக்கரையாம் தண்தார் மாதர்கள் - தேன் பொருந்திய குளிர்ந்த மாலைகள் அணிந்த பெண்கள்; தம் பொற்பே கணவர் தமக்கு அல்லால் - தம் அழகை தம் நாயகர்க்கு அல்லாமல்; புறத்து பயனே பயவாய்போல - பிறருக்குப் பயன்படாமல் காத்தல் போல; வெற்பே எழுஞ்சுடர் நாண - கிழக்கு மலைத்தொடரிலிருந்து எழுகின்ற சூரியன் நாணும்படி; விண்ணோர் புடையின் மொய்த்து - தேவர்கள் பக்கங்களிலே சூழ்ந்த; உற்ற பல்பேர் உரு இம்மூவர் அலால் - மிக்க புகழமைந்த பல உருவமுடன் இம்மூவரேயன்றி; பலரும் காணத் தோன்றினர் - வேறு எவரும் காணாதபடி சென்றனர்.

(வி-ரை) அம்மூவரையும் சூழ்ந்து சென்ற தேவர்கள் அம்மூவரும் காணும்படியும் பிறர் காணாதபடியும் தோன்றினர். தம் அழகைத் தம் கணவர் காணவும் பிறர் காணாமலும் காத்துக் கொள்ளும் நன் மகளிரை அத்தேவர்க்கு உவமையாகக்கூறினார். மூவராவார் - தந்தை, தாய், தனயன். தண்டார் = தண் + தார். மாதர்கடம் = மாதர்கள் + தம். அத்தேவர்களின் அழகு சூரியனின் அழகிலும் சிறந்தது என்பார் 'எழுஞ்சுடர் நாண' என்றார். சுடர் - சூரியன். பற்பேர் = பல் + பேர். விண்ணோர் தோன்றினர் என்க, 'விண்ணோர் புடையின் மொய்த்து ...... பலருங்காணத் தோன்றினரே' எனக் கூறியமை அதிசய அணி.

அவர்கள் சோலையினூடு செல்லுதல்

13\. குரவநீள் வேலி கோலும் குடங்கையுட் டுஞ்சித் தன்னைக்
கரவநீள் பசும்பூ நெற்றிக் கரும்புக ணிறுவி யூக்கி
விரவநீள் தலையின் வாழை விடுங்கனி நக்கித் தீங்காண்
பரவநீள் பல்பூங் காவும் படுநெறி போயி னாரே.

(ப-ரை) குரவநீள் வேலி கோலும் - சேர்ந்து மரங்களின் நீண்ட வேலிகளினால் அமைந்த; குடங்கையுள் துஞ்சி - வளைந்த இடத்தினுள் துயின்று; தன்னை கரவ நீள் பசும்பூ நெற்றிக் கரும்புகள் - தங்களை மறைத்து நீண்ட பசிய பூக்களை நெற்றியாகவுள்ள கரும்புகள்; நிறுவி ஊக்கி - தலையெடுத்து ஏங்கி; விரவ நீள் தலையின் வாழை விடும் கனி

நக்கி—கலந்து உயர்ந்த தலையினையுடை வாழையின் பழங்களைச் சுவைத்து; நிம் கான் பரவ — இனிய வாசனையை வீச; பல் பூங்காவும் படுநெறி போயினர் ஏ — பலவாகிய பூக்களையுடைய சோலைகள் உள்ள வழியிலே சென்றனர்.

(வி—ரை) குரவம் - பேரீந்து. குடங்கை — உள்ளங்கை. கரும்பு கணிறுவி = கரும்புகள் + நிறுவி. கான் — வாசனை. படுதல் - தோன் தல். நெறி — வழி. படுநெறி — வினைத்தொகை. பூங்கா படுநெறியும் என உம்மையைக் கொள்க. குடங்கையுட்டுஞ்சி=குடங்கையுள் + துஞ்சி. குடங்கை = குடங்கு + கை. (குடங்குதல் — வளைதல்). துஞ்சுதல் — பாதுகாப்பாக நிற்றல். நக்குதல் என்பது கரும்பும் வாழையும் நெருங்கி நின்றன என்பதை உணர்த்திற்று. துஞ்சி, ஊக்கி, நக்கி, பரவ. போயினர். கான் - வாசனை.

14\. சண்பகப் பூம்பந் தொத்த தனையனை யேந்திப் போய்த்தம்
பண்பகத் தனைய நீழல் படர்ந்துகான் படரப் பூத்து
விண்பகப் பாய்ந்த கொம்பர் விட்டுகண் டுலவ யூகம்
ஒண்பகற் றகைத்த மேகத் துறைமருட் டிடும் வீழ் தேனே.

(ப—ரை) சண்பகப் பூம்பந்து ஒத்த தனயனை - சண்பகப் பூத் தொகுதியைப் போலப் பொன்னிறமான அழகிய திருக்குமாரரை; ஏந்திப் போய் — கையிலே ஏந்திக்கொண்டு; தம் பண்பு அகத்து அனைய நீழல் படர்ந்து — தமது பண்பு உள்ளம் போலக் குளிர்ந்த நீழலிலே நடந்து; கான் படர - காட்டிலே செல்ல; பூத்து விண்பகப் பாய்ந்த கொம்பர் விட்டு கண்டு யூகம் உலவ — பூக்களுடன் ஆகாயம் பிளக்கும்படி உயர்ந்த கொம்பர்களிலே ஒன்றைவிட்டு ஒன்றைத் தாவிக் குரங்கு உலாவ; வீழ்தேன் ஒண் பகல் தகைத்த மேகத்து உறை வீழ் தேன் மருட்டிடும் - வீழ்கின்ற தேன் துளிகளானவை சூரியனை மறைத்த கருமேகங்கள் தரும் மழைத்துளிகளை ஒத்திருந்தன.

(வி-ரை) தனயன் - மகன். பண்பகம் = பண்பு + அகம். அகம் - உள்ளம். கான் - காடு. பக - வினையெச்சப்; பகு + அ. பகுதல் - பிரிதல். யூகம் - கருங்குரங்கு. ஒண்பகல் = ஒண்மை + பகல். பகல் -சூரியன். இஃது ஆகு பெயர். தகைத்தல் - மறைத்தல். உறை - நீர்த்துளி. மருட்டல் - ஒத்தல். 'மருள புரைய' (தொல்காப்.) இடு- துணைவினை. வீழ் தேன் — வினைத்தொகை. விட்டுகண்டு - ஒன்றைவிட்டு இன்னொன்றைப் பற்றி. பெற்றோர் திருக்குமாரனுடன் காட்டிலே சென்றபோது குரங்குகள் கொப்புகள் தோறும் தாவ அதனால் வீழுகின்ற தேன்துளிகள் மழைத்துளிகளை நிகர்த்தன. அவர்களது உள்ளப் பண்புக்குச் சோலைநிழல் உவமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை வளம் காணல்

15. மலைத்தளி இருபால் மல்கி மகரயா ழிசைகள் செய்ய
விலைத்தளி ரிருபூஞ் சோலை யிடத்திலிட் டேகிப் பின்னர்
கலைத்திரி பாகக் கோலிக் கதிர்மணி யருவி யார்ப்பச்
சிலைத்திரி சிகிக ளாடுந் திகிரியி னலத்தைக் கண்டார்.

(ப-ரை) மலைத்து அளி இருபால் மல்கி - மொய்த்து இரு பக்கங்களிலும் வண்டுகள் நிறைந்து; மகர யாழிசைகள் செய்ய - மகர யாழிசையைப் போல இசைபாட; இலைத்தளிர் இரு பூஞ்சோலை இடத்தில் இட்டு ஏகிப் - இலையாகிய தளிர்களையுடைய பெரிய பொலிவுள்ள சோலையிலே தங்கிச் சென்று; பின்னர் - பின்பு; கலைத் திரிபு ஆகக் கோலிக் கதிர் மணி அருவி ஆர்ப்ப - ஆடையின் தன்மையைப் போல வளைந்து ஒளியுள்ள மணிகளையுடைய அருவிகள் ஒலிக்க; இலைத்து இரி சிகிகள் ஆடும் திகிரியின் நலத்தைக் கண்டார் - ஒலித்துத் திரிகின்ற மயில்கள் ஆடுகின்ற மலையின் சிறப்பைக் கண்டனர்.

(வி-ரை) மலைத்தளி = மலைத்து + அளி. மலைத்தல் - மொய்த்தல். அளி - வண்டு. மல்குதல் - நிறைதல். மகரயாழ் - மீன் வடிவமாக அமைந்த யாழ். மகரம் - மீன். செய்ய விலை = செய்ய + இலை. இலைத்தளிர் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. தளிர் - மென்மையான இலை. இட்டு ஏகல் - தங்கிச் செல்லல். கலை - ஆடை. திரிபு-வேறுபடுதல். கோலுதல் - வளைதல். சிலைத்திரி = சிலைத்து + இரி. சிலைத்தல் - ஒலித்தல். இரிதல் - ஓடுதல். சிகி - மயில். திகிரி - மலை. திகிரியில் சிகிகள் ஆடும் நலத்தை எனவும் கொள்க. அவர்கள் சோலையினூடு சென்றபோது வண்டுகள் ஒலிக்கவும் அருவிகள் ஒலிக்கவும் மயில்களாடும் மலை வளத்தைக் கண்டனர்.

16. கண்டுளி யுளத்தி லோங்கக் களித்தப்பூங் கொடியோன் சொல்லும்
தண்டுளி முகிழ்சூழ் வெற்பைத் தருமறை வடிவாய் நோக்காய்
பண்டுளி யனைத்து மெஞ்சாப் பசிசினந் துயிர்கள் யாவு
முண்டுளி யுயிரைத் தந்த வுயர்மலை வனப்பி தென்றான்.

(ப-ரை) கண்டுளி உளத்தில் ஓங்கக் களித்த பூங்கொடியோன் - (அவைகளைச்) கண்டவிடத்து மனதில் மிக்க மகிழ்ச்சியுற்ற பொலிவான தருமக் கொடியையுடையவராகிய சூசையப்பர்; சொல்லும் - தண் துளி முகிழ்சூழ் வெற்பை - புகழ்ந்து சொல்லுகின்ற குளிர்ந்த துளிகளையுடைய முகில்கள் சூழ்ந்த மலையை; தரு மறை வடிவாய் நோக்காய் - தக்கவேத வடிவமாகப் பார்ப்பாயாக; பண்டுளி அனைத்தும் எஞ்சாப் பசி சினந்து - பண்டைக்காலத்து அனைத்தும் எஞ்சாதபடி பசியானது கோபித்து; உயிர்கள் யாவும் உண்டுளி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள் யாவையும் உண்ட போது; உயிரைத் தந்த உயர் மலை வனப்பு இது என்றான் - உயிர்களைக் காத்த உயர்ந்த மலைக்காட்சி இதுவாம் என்று சொன்னார்.

(வி-ரை) கண்டுளி என்பதில் உளி - வினையெச்சவிகுதி. எதுகை நோக்கி உழி என்பது உளி எனத் திரிந்தது. பூ - பொலிவு. தண்டுளி = தண்மை + துளி. தருபறை - வினைத்தொகை. நோக்காய் - முன்னிலை ஒருமை வினைமுற்று. பண்டுளி என்பதில் உளி இடப்பொருள் உருபு. எஞ்சா - எஞ்சாதபடி. உண்டுளி - வினையெச்சம். மலை வனப்பு என்பதனை வனப்பு மலை எனவும், வடிவாய் என்பதனை வடிவை உடையவளே எனவும் கூறலாம். கடல் உலகை அழித்தபோது உயிர்கள் அனைத்தும் தங்குதற்கு இடமாக இருந்தமையின் அச்சிறப்பு நோக்கி "உயர் மலை" என்றார்.

17. கோலடி கோடி யாய கொடுமையால் வருட மூன்றும்
மேலடி மழையு மின்றி மெலிந்துல கெஞ்சி நிற்பக்
காலடி தன்மைத் தோர்கார் காணத்தன் கோட்டிற்றந்தே
யாலடி நிழற்றும் பொச்சை யன்றுயிர் தந்த தென்றான்.

(ப-ரை) கோல் அடி கோடி ஆய கொடுமையால் - அரசின் நீதி வளைந்து அதனால் வந்த கொடுமையினால்; வருடம் மூன்றும் மேல் அடி மழையும் இன்றி - மூன்று ஆண்டுகள் ஆகாயம் தரும் மழை இல்லாது; உலகு மெலிந்து எஞ்சி நிற்ப - உலகமானது வருந்திக் குற்றுயிராக நிற்க; கால் அடி தன்மைத்து ஓர் கார் காணத் தன் கோட்டில் தந்து - காலின் பாதம் அளவான மேகத்தைத் தன் உச்சியிற் தோற்றுவித்து; ஆல் அடி நிழற்றும் பொச்சை - ஆலமர நிழலையுடைய இம்மலை; அன்று உயிர் தந்தது என்றான் - அக்காலத்தில் உயிர்களைக் காத்தது என்று கூறினான்.

(வி-ரை) கோல் - அரசு; அடி - மூலம் (நீதி). ஆய - பெயரெச்சம். மேல் - ஆகாயம். அடி(த்தல்) - தரு(தல்). கார் - மேகம். கோடு - உச்சி. பொச்சை - மலை. அன்று உயிர் வாழ நீரை உதவிய சிறப்பினால் 'ஓர் கார்' என்றார். ஓர் - ஒப்பற்ற. மேல், கார் - ஆகு பெயர்கள். சிறுமேகம் என்பார் 'காலடித்தன்மை.......கார்' என்றார்.

18. நூல்வழிப் புகழே போன்று தொடிப்பினிற் பரந்த மேகம்
வேல்வழி யொளியே போன்று மின்னியார்த் திறைவ னன்பின்
பால்வழிப் படனே போன்று பகலிரா வனவிற் றூவிக்
கோல்வழிப் படமே போன்று கூவெலாஞ் சேழ்ந்த தென்றான்.

(ப-ரை) நூல்வழி புகழே போன்று - நூலின் வழியாகப் புகழ் பரவுதல் போல; தொடிப்பினில் பரந்த மேகம் - சிறிது நேரத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்பக்கமும் பரவிய மேகமானது; வேல் வழி ஒளியே போன்று — வேலின் வழியாக ஒளி பரவுதல் போல; மின்னி ஆர்த்து - மின்னி இடித்து; இறைவன் அன்பின்பின் பால் வழி பயனே போன்று - இறைவனின் கருணையின் வழி வரும் பயனைப் போல; பகல் இரா அளவில் தூவி - பகலும் இரவும் நிறையப் பெய்து; கோல் வழி படமே போன்று - தூரிகையினால் எழுதிய சித்திரத்தைப் போல; கூ எலாம் செழித்தது என்றான் - உலகம் முழுவதும் செழித்தது என்று கூறினார்.

(வி-ரை) மேகம் பரவி மின்னி ஆர்த்துப் பகலிரா தூவியமையால் பூமி ஒளி பெற்றது. மலைக்கு நாலும், மேகம் பரந்தமைக்குப் புகழ் பரந்தமையும், மேகமின்னலுக்கு வேலின் ஒளியும், இறைவனின் கருணைக்கு மழையும், உலகின் அழகுத் தோற்றத்திற்குச் சித்திரத்தின் அழகுத் தோற்றமும் உவமைகள். இவை தொழில், வண்ணம், பயன் ஆகியவை பற்றி வந்த உவமைகள். நொடிப்பு - சிறிது நேரம், இஃது தொழிலாகு பெயர். பால் - இடம், பகலிரா - உம்மைத்தொகை. கோல் — தூரிகை, கூ-பூமி. செழித்தது-ஒளிபெற்றது. செழ்-திறம்.

19. ஊனிலைக் குழவி தோன்றி யுலகெலா மளிக்கு மன்பின்
பானிலை யிடமூன் றாற்றுப் பரிசுடை யிவனைக் காட்டக்
கானிலை தோன்றி யக்கார் கடலிலை பயந்த தென்று
மீனிலை முடிதாட் சேர்த்தி மெய்யனைத் தொழுதாடாயே.

(ப-ரை) ஊன் குழவி தோன்றி - உடலொடு பொருந்திய குழந்தையாக நின்று; உலகு எலாம் அளிக்கும் அன்பின் - உலகம் முழுவதையும் காக்கும் கருணையாள்; பால் நிலை இடம் மூன்று ஆற்று - பகுப்பினால் நிலைத்துள்ள மூன்று உலகங்களும் ஒப்பாதலில்லாத; பரிசு உடை இவனைக் காட்ட - தன்மையுள்ள இத்திருக்குமாரரைக் காட்டற்காக; கால் நிலை தோன்றி — ஒரு காலடி அளவாகத் தோன்றி; கடல் நிலை பயந்தது என்று - கடலின் தன்மையாக நன்மையைத் தந்தது என்று; மீன் நிலை முடி தாட் சேர்த்து-மீன் பொருந்திய முடியினை அவரது பாதங்களிற் சேர்த்து; மெய்யினைத் தாயே தொழுதாள் - திருக்குமாரரை மேரித்தாய் வணங்கினாள்.

(வி-ரை) ஊன் - உடல். பால் — பகுப்பு. கால் - பாதம், நிலை - நிலைத்த. கானிலை = கால் + நிலை. தொழுதாடாய் = தொழுதாள் + தாய். அங்கு நிகழ்ந்த அற்புத நிகழ்ச்சிகள் திருக்குமாரருக்காக நிகழ்ந்தன என்பதை மேரிஅன்னை உணர்ந்து திருக்குழந்தையாக எண்ணி அவரைவணங்கினார். இடம் மூன்று — மூன்று உலகு. ஆற்றுதல் - ஒப்பாதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. களைகொடு சவரம் வீசுந் தோற்றமே போன்று வேழம்
புளகொடு மதத்திற் சீறிப் புடைத்ததன் செவிகால் வீச
மிளைகொடு படர்ந்த மென்னீள் கொடியின்மே லூஞ்சலாடி
அளகொடு பொலிகூ னார்க்கு மத்திரி யணுகி னாரே.

(ப — ரை) களைகொடு சவரம் வீசும் - களையைக்கொண்டு சாமரையை வீசுகின்ற; தோற்றமே போன்று - காட்சியைப்போல; வேழம் புளகொடு மதத்தில் சீறி - யானையானது மகிழ்ச்சியினால் மதங்கொண்டு; கோபித்து புடைத்த தன் செவிகால் வீச - படர்ந்ததன் செவியினால் காற்று உண்டாகும்படி வீச; மிளைகொடு படர்ந்த மென் நீள் கொடியின் மேல் ஊஞ்சல் ஆடி - மிளைகுகளினோடு படர்ந்த மெல்லிய நீண்ட கொடியின் மேல் ஊஞ்சலாக ஆடி; அளகு ஒடு பொலி கூன் ஆர்க்கும் அத்திரி அணுகினார் - தன் பெடையொடு இருந்து கோட்டான் ஒலிக்கும் மலையை அடைந்தனர்.

(வி — ரை) சவரம் - சாமரை. புளகு - மகிழ்வு. கால் - காற்று. அளகு — பெண் பறவை. கூன் — கோட்டான். அத்திரி - மலை. யானையின் செவி களைக்கும் அதன் அசைவு சாமரை வீசுகைக்கும் உவமை. வேழம் செவிகால் வீச கூன் ஊஞ்சல் ஆடி ஆர்க்கும் மலையை அவர்கள் அடைந்தனர்.

21. நாகநீ ணெற்றி தூங்கு நன்மணி யோடை போன்று
நாகநீ ணெற்றி நாறு நன்மல ரணியாய்ச் சூழ்ந்த
நாகநீ ணெற்றி தோன்றி நயன்தரு மறையிற் சிந்தும்
நாகநீ ணெற்றி மீன்போ னன்மணி யருவி கண்டார்.

(ப - ரை) நாக நீல் நெற்றி தூங்கு நல்மணி ஓடை போன்று - யானையின் கரிய நெற்றியில் தொங்குகின்ற நல்ல மணிகள் பதித்த நெற்றிப்பட்டம் போன்று; நாக நீல் நெற்றி நாறு நல்மலர் - புன்னை மரங்களின் கருப்பச்சையான தளிர்களிலே மணம் வீசும் நல்ல மலர்களை; அணியாய்ச் சூழ்ந்த - அழகாகக் கொண்டுள்ள; நாக நீல் நெற்றி தோன்று மலையின் கரிய உச்சியிலே உண்டாகி; நயன் தரு மறையில் சிந்தும் - பயனைத்தரும் வேதப்போல நீரை வழங்குகின்ற; நீல் நாக நெற்றி மீன்போல் - நீல நிற ஆகாயத்திலுள்ள மீன்களைப் போல; நல்மணி அருவிகண்டார் - நல்மணிகளைக் கொண்டுவரும் சிறு ஆற்றினைக் கண்டனர்.

(வி - ரை) நாகம் - 1. யானை 2. புன்னைமரம் 3. மலை 4. மேலுலகம். நெற்றி - 1. நெற்றி, 2. தளிர். 3. உச்சி. 4. இடம். ஓடை - நெற்றிப்பட்டம். மலைக்கு யானையும் மலைமேலுள்ள புன்னையின் அழகிய மலர்களுக்கு யானையின் முகபடாமும், அருவிக்கு வேத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும், அருவியின் நீர்த்துளிகளுக்கு வேதநூல் மொழிகளும், ஆற்றிற்கு ஆகாயமும், ஆற்றிலுள்ள மணிகளுக்கு விண்ணிலுள்ள மீன்களும் உவமைகள். போன்று சூழ்ந்த நாகம் எனவும், தோன்றிச் சிந்தும் அருவி எனவும் கூட்டுக. மலையின் — ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள். நீனெறி = நீல் + நெறி. நீல் = நீலம். கடைக்குறை. நன்மணி = நல் + மணி.

அவர்கள் முல்லை நிலத்தை அடைதல்

22. நிறைதவிர்ந் துணர்ந்த காமநெறியிற் கைப் பொருளே போன்றும்
முறைதவிர்ந் தடைசீர் போன்றும் முனிகடம் முனிவு போன்றும்
பொறைதவிர்ந் திழிந்தீண் டோடும் புனனல மெதிர் கொண்டாங்கத்
துறைதவிர்ந் திடத்திட் டேகித் துளித்ததேன் முல்லை சேர்ந்தார்.

(ப — ு) நிறை தவிர்த்து உணர்ந்த காம நெறியில் கைப் பொருளே போன்றும் - திண்மை நீங்கிச் சென்ற காமவழியிலே தேடிய பொருள் விரைந்து செல்லுதல் போலவும்; முறைதவிர்ந்து அடை சீர் போன்றும் - அறமுறை தவறி அடைந்த செல்வம் விரைந்து செலவாதல் போன்றும்; முனிகள் தம் முனிவு போன்றும் - தவமுனிவர்களது வெறுப்பு விரைந்து தணிவதாதல் போலவும்; பொறை தவிர்த்து இழிந்து ஈண்டு ஓடும் புனல் நலம் எதிர்கொண்டு — நிற்றலின்றிக் கீழ் நோக்கி விரைந்து ஓடுகின்ற அருவியின் நீர்வளத்தைக் கண்டு; ஆங்கு அத்துறை தவிர்த்து இடத்து இட்டு ஏகி — அங்கே அந்த இடத்தின் நீங்கி அருவி இடப்பக்கம் ஆகும்படி வலப்பக்கமாகச் சென்று; துளித்த தேன் முல்லை சேர்ந்தார் - பொழிகின்ற தேனையுடைய முல்லை நிலத்தை அடைந்தனர்.

(வி — ரை) நிறை - நிலையிற் றிரியாமை. காமம் — அளவின் மிக்க ஆசை. சீர் — செல்வம். முனிகடம் = முனிகள் + தம். புனனலம் = புனல் + நலம். இடத்து இட்டு ஏகல் - வலமாகச் செல்லல். மலையிலிருந்து விரைந்து செல்லும் நீருக்குக் காமநெறியிற் செலவாகும் பொருளும், அறமின்றி வந்த செல்வமும், முனிவர்தம் முனிவும் உவமைகள். பொதுத்தன்மை:- விரைந்து செல்லுதல். அருவி, மலை, கோயில் முதலியவைகளை வலமாக வருதல் முறை. முல்லை சேர்ந்தார் எனவே இதுவரை குறிஞ்சியினூடு சென்றார் எனக. போன்று ஓடும் புனல் எனக.

இரு புறாக்களைக் காணல்.

23. நீழ்கிளர் மலரின் தண்பூ நிழற்கிளர் கொம்பின் புல்லிக்
கேழ்கிளர் பொறித்த யாமைக் கெழுஞ்சிறை வகிர்ந்து பேணி
வாழ்கின ரன்பி னாலு மணிக்கிளர் வனப்பி னாலும்
சூழ்கிளர் காவி லொவ்வாத் துணைப்புற விருந்த தம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப-ரை) நீழ்கிளர் மலரின் தண்பூ நீழல்கிளர்-மிக்க நிறத்தினெடு மலர்ந்த தண்ணிய பூக்களையும் நிழலையும் பொருந்திய; கொம்பிற் புல்லி - கொப்பிலே தங்கி; கேழ்கிளர் பொறித்த மாமைக் கெழுஞ் சிறை வகிர்ந்து பேணி - நிறம் விளங்க அமைந்த கரிய அழகிய சிற குகளைக் கோதிப் பாதுகாத்த; வாழ்கிளர் அன்பினுலும் - வாழ்க் கைக்கு அமைந்த அன்பினுலும்; மணிக்கிளர் வனப்பினுலும் - மணியை ஒத்த அழகினுலும்; சூழ்கிளர் காவில் - சூழ வளர்ந்த சோலையிலே; ஒவ்வாத் துணைப்புறவு இருந்தது - ஒப்பிடற்கு அரிய இரு புறாக்கள் இருந்தன.

(வி - ரை) எதுகைக்காக நீள் என்பது நீழ் ஆயிற்று. கிளர்தல்-மிகுதல், விளங்குதல். பூநிழல் - உம்மைத் தொகை. பொலிவாகிய நிழல் எனினும் அமையும். வாழ் — வாழ்வு. மணிக்கிளர் — மணியை வெல்லுகின்ற. மாமை - கருமை. கா - சோலை. அம்மா — அசைநிலை யிடைச்சொல். புல்லுதல் - தழுவுதல். கொப்பு பூவும் நிழலும் உள்ளது. புறாக்கள் மிக்க அன்பும் அழகும் உள்ளவை. புறவு - பால்பகா அஃறிணைப் பெயர்.

புறாக்களைக் கொல்ல வேடன் வருதல்

24\. உலைவள ரெரிச்செங் கண்ணன் ஊனெயிற் றூற்று வாயான்
கொலைவளர் புலிப்பா லுண்டு கொலையொடு வளர்ந்த வேடன்
இலைவளர் நிழற்பூங் காவி லெய்தியப் பறவை கண்டே
சிலைவளர் கொலையீண்டுள்ளிச் சிலைவளர்த் தணுகிச் சேர்ந்தான்.

(ப-ரை) உலைவளர் எரிச் செங்கண்ணன் - அடுப்பினிடத்து எரி கின்ற நெருப்புப்போலச் சிவந்த கண்களையுடையவனும்; ஊன் எயிற்று ஊற்று வாயான் - மாமிசமானது பற்களின் வழி ஒழுகுகின்ற வாயையு டையவனும்; கொலை வளர் புலிப்பால் உண்டு கொலையொடு வளர்ந்த வேடன் - கொல்லுதலையுடைய புலியின் பாலை அருந்திக் கொலைத் தொழிலையுடைய வேடனானவன்; இலைவளர் நிழல் பூங்காவில் எய்திஅப் பறவை கண்டு - இலைகள் வளர்தலினால் நிழலையுடைய பொலிவான சோலையை அடைந்து அப்பறவைகளைக் கண்டு; சிலை வளர் கொலை ஈண்டு உள்ளி சிலை வளைத்து அணுகிச் சேர்ந்தான் - வில்லினைக்கொண்டு கொல்லுதலை நினைத்து வில்லை வளைத்துக் கிட்டச் சென்றான்.

(வி—ரை) உலை — அடுப்பு. எரி - நெருப்பு. எயிறு - பல். கா — சோலை. சிலை - வில். செங்கண், ஊன் எயிற்று வாய், புலிப்பால் உண்டு, கொலையொடு வளர்ந்த என்பன வேடனின் இரக்கமில் தன்மையை உணர்த்தின. உன்னுதல் - நினைத்தல். செங்கணன், வாயான் - சினை யால் வருபெயர்கள். வளர் எரி, வளர்புலி, வளர்நிழல் என்பன வினைத்தொகைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. ஓர்பகை யிவன்கீ ழுள்ள வுலவிமேற் பருந்து தானும்
கூர்பகை யுகிர்வவ் வாமுற் கொடியகண் ணிரையை வவ்விப்
பேர்பகை யுணர்ந்து சூழப் பிறரெலாந் தமைப்போ லெண்ணிச்
சேர்பகை யுணரா வப்புட் சிறுமைகண் டிளைந்தான் சூசை.

(ப-ரை) ஓர் பகை இவன் - ஒப்பற்ற பகைமையையுடைய வேடன்; பருந்து தானும் மேல் உலவி - பருந்து மேலே வட்டமிட்டு; கூர்பகை உகிர் வவ்வாமுன் - கூரிய தன்மையுள்ள நகங்களால் அகப்படுத்தாமுன்; கொடிய கண் இரையை வவ்வி - கொடிய கண்களின் உணவை நோக்கி; பேர் பகைகொண்டு சூழ - பெரிய பகைமை கொண்டு அவைகளை அணுக; பிறர் எலாம் தமைப்போல் எண்ணி - பிறர் எல்லாரையும் தம்மைப்போல் மதித்து; சேர்பகை உணரா அப்புள் சிறுமை கண்டு - சேர்ந்த பகைமையை அறியாத அப்புளுக்கள் அடைந்த நிலைமையைக் கண்டு; சூசை இளைந்தான் - சூசையப்பர் வருந்தினர்.

(வி-ரை) மேற்பருந்து வவ்வாமுன் இவன் சூழ, அப்புட் சிறுமை கண்டு சூசை இளைந்தான். 'கூர்பகை உகிர்' என்பது பருந்திற்கும், 'பிறரெல்லாம் தமைப்போல் எண்ணல்' என்பது சூசையப்பருக்கும், 'சேர் பகை யுணரா' என்பது பறவைகளுக்கும் அடைகள். வவ்வாமுன் வவ்விச் சூழக்கண்டு இளைந்தான் என்க. இளைதல் - துன்புறல். சிறுமை - துன்பம். கூர் - மிகுதிப் பொருளில் வந்த உரிச்சொல். உகிர் வவ்வல் - மூன்றும் வேற்றுமைத் தொகை.

வேடன் இறந்தல்

26. சிட்டமிட் டெழுதப்பட்ட சிறகொளி செகுப்பப் பாறும்
வட்டமிட் டிழிந்து பாய வருகையில் வேடன் வாளிச்
சட்டமிட் டெய்யச் சர்ப்பந்தனை மிதித் திடுங்கா றீண்டித்
தட்டமிட் டவனு மாய்ந்தான் றவிர்ந்தகோல் பருந்துங் கொய்தே.

(ப-ரை) சிட்டம் இட்டு எழுதப்பட்ட சிறகு ஒளி செகுப்ப - பெருமை அமைந்த சிறகுகள் ஒளியை மறைக்க; பாறும் வட்டம் இட்டு இழிந்து பாய வருகையில் - பருந்து வட்டம் இட்டுக் கீழ் நோக்கிப் பாயும்போது; வேடன் சட்டம் இட்டு வாளி எய்ய - வேடனவன் இலக்கு வைத்து அம்பை எய்ய; சர்ப்பந்தனை கால் மிதித்திடும் - பாம்பைக் கால் மிதித்தத; தீண்டி தட்டம் இட்டு அவனும் மாய்ந்தான் - காலிலே பாம்பு தீண்டி அதனால் நிலத்தில்விழுந்து அவனும் இறந்தான்; தவிர்ந்த கோல் பருந்தும் கொய்தே - விடுபட்ட அம்பும் பருந்தைக் கொன்றது.

(வி-ரை) சிட்டம் - பெருமை. செகுத்தல் - சிறத்தல். பாறு - பருந்து. வாளி - அம்பு. சட்டம் - இலக்கு. தட்டமிடல் - நிலத்தில்விழுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டம் - பாம்பின் நச்சுப்பல் எனலுமாம். கோல் - அம்பு. கொய்ததே என்பது கொய்தே எனத் தொகுத்தல் விகாரமாயிற்று, 'உம்' - எச்ச வும்மை. இச்செய்யுள் அவலச்சுவை உடையது. ஏ - தேற்றம்.

வினையது உண்மை உணர்த்தல்

27. வினையது வினைவு நோக்காய் வினைபிறர்க் குணர்ந்த பாவந்
தனையது கொல்கூற் றுதல் தகவினு குரையிற் கேட்டேம்
பினையது வின்று காணப் பெற்றன மென்று சூதை
யனையது விளம்பிப் போன வணிவளர் முல்லை சொல்வாம்.

(ப-ரை) வினையது வினைவு நோக்காய் - செய்த செயலின் பயனைப் பார்ப்பாயாக; பிறர்க்கு உணர்ந்த பாவம் வினை தனையது கொல் கூற்று ஆதல் - பிறர்க்குச் செய்கின்ற பாவவினை செய்தவனைக் கொல்லும் இயமன் ஆதலை; தகவினர் உரையிற் கேட்டேம் - பெரியோர் அறிவுரைகளிலே கேட்டுள்ளேம்; பினை அது இன்று காணப் பெற்றேம் - பின்பு அதனையே இன்று இங்கு கண்டோம்; என்று அனையது சூதை விளம்பி - என்று அதனைச் சூதையப்பர் சொல்லி; போன சென்ற; அணிவளர் முல்லை சொல்வாம் - அழகு அமைந்த முல்லையின் இயல்பைக் கூறுகின்றோம்.

முல்லை நில வளம்

28. புதுப்பட வேந்துறிப் பொலிதெ ருத்தொறும்
சதுப்பட நகரெலாஞ் சிறந்த தன்மைபோல்
விதுப்பட முகத்துவான் வேந்த னெய்தலான்
மதுப்பட மலர்ந்தன முல்லை வாயெலாம்.

(ப-ரை) புதுப்பட வேந்து உறி - புதிதாக அரசன் நகர்ப் பிரவேசம் செய்யும்போது; பொலி தெருத்தொறும் - பொலிவுள்ள வீதிகள் தோறும்; சதுப்பட நகரெலாம் சிறந்த தன்மைபோல் - அழகு பொருந்த நகர்முழுதும் சிறந்துவிளங்கும் இயல்பைப்போல; விதுப்பட வான் முகத்து வேந்தன் எய்தலால் - அதிசயிக்கும்படி தேவ உலகத்து அரசராகிய திருக்குமாரன் செல்லுதலினாலே; முல்லைவாய் எலாம் மதுப்பட மலர்ந்தன - முல்லை நிலம் முழுவதும் தேன் விளங்கும்படி பூக்கள் பூத்தன.

(வி-ரை) புதுப்பட-புதிதாக. உறி = உறு + இ = உறும்போது. சதுர் - அழகு. விது - அதிசயம். முகம், வாய் - இடத்தை உணர்த்தும் உருபுகள். மது - தேன். படுதல் - தோன்றுதல். தேவ உலக அரச குமாரன் சென்றமையால், பூக்களும் தேனும் நிறைந்து முல்லை நிலம் சிறந்து விளங்கியது. புதிய அரசன் செல்வதனால் நகர் அழகுற விளங்குதல் இதற்கு உவமை ஆயிற்று. தொறும் - இடைச்சொல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. வானகத் தகவினோர் மகிழ வேய்தென
மீனகத் தருவெலா முகைகள் விள்ளலே
கானகத் தவத்தினோன் மணத்திற் காலொடு
தேனகத் தலர்ந்தகோற் சிறப்பு காட்டுமே.

(ப-ரை) வானகத் தகவினோர் மகிழ - தேவ உலகத்திற்கு உரியவரா கிய அந்த மூவரும் மகிழும்படி ; வேய்தென - வேய்ந்தாற்போல ; மீனகத் தரு எலாம் முகைகள் விள்ளல் - விண்மீனைத் தொடும் மரங்கள் யாவும் பூக்களைப் பூத்து விளங்கியமை ; கானகத் தவத்தினோன் - காட்டிலே தவத்தைச் செய்த சூசையப்பரின் ; மணத்தில் காலொடு தேன் அகத்து அலர்ந்த - திருமணத்தின்போது நறுமணத் தோடு தேன் அவ்இடத்தின்கண் தோற்றுவித்த ; கோல் சிறப்பு காட்டும் - அவர் வைத்திருந்த கைத்தடியின் சிறப்புத் தன்மையை நினைவுறுத்தியது.

(வி-ரை) தகவினோர் - சூசையப்பர், மேரியன்னை, திருக்குமாரர். தகவு - பெருமை. விள்ளல் - மலர்தல். ஆரம்பத்தில் சூசையப்பர் துறவுநெறிநின்று தனியிடத்துத் தவஞ்செய்தலில் ஈடுபட்டிருந்தார் ஆத லின் அவரைக் 'கானகத் தவத்தினோன்' எனவும், அவரது திருமணத் தின்போது அவர் வைத்திருந்த தடி புதிய மணத்தை வீசித் தேன் துளிகளைத் தந்தது ஆதலின் 'தேனகத்தலர்ந்த கோல்' எனவும், அவர் கள் சென்றபோது மரங்கள் பூக்களைப் பூத்து அழகாக இருந்தமை அவரின் திருமணத்தின்போது அவரின் கைத்தடி நறுமணமும் தேனும் பொருந்த விளங்கிய தன்மைக்கு ஒப்பானது எனவும் கூறினர். வேயது என்பது வேய்து என இடைக்குறை ஆயிற்று. ஏயதென எனினுமாம்.

30. சென்னியா ரிளமது திருந்தும் பூமலர்
துன்னியார் நறவிய கனிக தோற்றமும்
மின்னியா ருடுமுடி வேய்ந்த நாயகி
கன்னியாய் மகற்பெறு மாட்சி காட்டுமே.

(ப-ரை) சென்னி ஆர் இளமது திருந்தும் பூமலர் - மரங்களின் உச்சிகளிலே நிறைந்த இளந்தேன் பொருந்திய பொலிவாகிய பூக்களும் ; துன்னி ஆர் நறவிய கனிகள் தோற்றமும் - நெருங்கி நிறைந்த இனிய கனிகளும் உள்ள தோற்றமும் ; மின்னி ஆர் உடு முடி வேய்ந்த நாயகி - ஒளிசெய்து நிறைந்த விண்மீன்களை முடியாகப் பொருந்திய மேரியானவர் ; கன்னியாய் மகற்பெறுமாட்சி காட்டும் - கன்னியாகத் திருக்குமாரரைப் பெற்ற சிறப்பை நினைவூட்டியது.

(வி-ரை) சென்னி-தலை. திருந்துதல் - பொருந்துதல். மது - தேன். துன்னுதல் - நெருங்குதல். உடு - விண்மீன். ஆர் - நிறைவு. உரிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல். பூமலர் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை. தோற்றம் – எழுவாய், காட்டும் - பயனிலை. 'நறவிய கனிகள் கன்னியர் மகற்பெறு மாட்சி காட்டும்' என்பது தற்குறிப்பேற்ற உவமை.

31. பருவிலார் மனமென முகில்பரந் துநூற்
கருவிலார் மனமெனக் கருக வந்தரந்
திருவிலார் மனமெனத் தேம்ப மாங்குயில்
மருவிலார் மனமென மஞ்ஞை யாடுமால்.

(ப–ரை) பரு இலார் மனம் என முகில் பரந்து – பருவம் வராத சிறுவரது மனம் அசைதல் போல முகில்கள் பரந்து; நூற்கரு இலார் மனம் என அந்தரம் கருக - நூலறிவு இல்லாதார் மனத்தைப் போல ஆகாயம் இருண்டு; திரு இலார் மனம் என மாங்குயில் தேம்ப - செல்வம் இல்லாதார் மனத்தைப்போல அழகிய குயில்கள் வாட; மருவுஇலார் மனம் என மஞ்ஞை ஆடும் - நட்பு இல்லாத மாற்றரது மனத்தைப்போல மயில்கள் ஆடின.

(வி–ரை) பரு - பருவம். கரு – உண்மை. அந்தரம் - ஆகாயம். தேம்புதல் - வாடுதல். மா – அழகிய. மருவு – மருவுதல். ஆல் - அசை. முகில் பரக்கவும், அந்தரம் கருகவும், மாங்குயில் தேம்பவும் மஞ்ஞை ஆடின. முகில்களின் அசைவுக்குச் சிறுவர்களின் மன அசைவும், முகில் களின் இருண்ட தன்மைக்குக் கல்லாதவரின் அறியாமையும், குயில்களின் வாட்டத்திற்கு வறியவரின் வாட்டமும், மயில்களின் மகிழ்ச்சிக்கு மாற்றாரின் மகிழ்ச்சியும் உவமைகளாயின. இவை வினை பற்றிய உவமைகள். ஒருவரின் தாழ்வுகண்டு அவரின் பகைவர் மகிழ்தலுண்டு.

32. ஏர்முகம் புதைத்தவில் லிவர்செய் தெய்தலாற்
கார்முகம் புதைத்தவெங் கதிரு தித்ததென்
றூர்முகம் புதைத்தவின் பருந்திக் கூய்க்குயில்
சூர்முகம் புதைத்தன தோகை நாணியே.

(ப–ரை) ஏர் முகம் புதைத்த வில் இவர் செய்து எய்தலால் - அழகு பொருந்திய முகத்தினின்று ஒளியை இந்த மூவரும் பரப்பிச் சென்றமையால்; கார்முகம் புதைத்த வெம் கதிர் உதித்தது என்று - கரிய முகில்களுள் மறைந்திருந்த வெம்மையுள்ள சூரியன் வெளிப்பட்டது என்று; முகம் ஆர் புதைத்த இன்பு அருந்திக் குயில் கூய் - அங்கு நிறைந்த இன்பத்தை அனுபவித்துக் குயில்கள் கூவ; தோகை நாணி சூர் முகம் புதைத்தன - மயில்கள் நாணமுற்றுத் தம் அஞ்சாமையுள்ள முகத்தை மறைத்தன.

(வி–ரை) ஏர் - அழகு. வில் - ஒளி கார் - கருமுகில். கூய் என்பது கடைகுறைந்து கூய் என நின்றது. சூர் - அஞ்சாமை. முகம் - (1) முகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) இடப் பொருள் உருபு. (3) இடம். மூவரும் தெய்வ அழகும் ஒளியும் உடையவராதலின் அவர்களைச் சூரியனாக எண்ணி மகிழ்ந்து குயில் கூவியது எனவும், தோகை நாணி முகம் புதைத்தது எனவும் கூறியமை தற்குறிப்பேற்ற அணி. தோகை — பால்பகா அஃறிணைப் பெயர். புதைத்தல் - (1) பொருந்துதல். (2) மறைதல்.

33. பொய்மறுத் திவரெனப் பொலிந்த வோகையால்
ஐ மறுத் திரிமயி லாடிமற் றையு
மைமறுத் துளத் தெழீஇ மகிழ்ந்து பாடவே
கைமறுத் ததிசயித் தலர்ந்த காவெலாம்.

(ப-ரை) பொய் மறுத்து இவர் என பொலிந்த ஓகையால் - சூரியர் என்னும் மயக்கம் நீங்கி இந்த மூவருமே எனத் தெளிந்த மகிழ்ச்சியினால்; ஐ மறுத்து இரி மயில் ஆடி - முன்பு தம் அழகை மறைத்து ஓடிய மயில்கள் திரும்பவந்து ஆட; மற்றையும் மை மறுத்து உளத்து எழீஇ மகிழ்ந்து பாட — மற்றைப்பறவைகள் மயக்கம் விட்டு உள்ளத்து எழுந்த மகிழ்ச்சியினாலே பாட; கைமறுத்து அதிசயித்து கா எலாம் அலர்ந்த — கைவிரித்து அதிசயித்தது போலச் சோலை முழுவதும் பூக்களைப் பூத்தன.

(வி-ரை) பொய் — மயக்கவுணர்வு. ஐ - அழகு. ஓகை - மகிழ்ச்சி. மை — அறியாமை. மற்றை — ஏனையபறவைகள். இவர்கள் சூரியரல்லர் தெய்வப்பண்பினர் எனத் தெளிந்தமையால் மகிழ்ந்து மயில்கள் ஆடின; ஏனைய பறவைகள் பாடின; கா எலாம் அலர்ந்தன. இவைக்கு ஏது கூறுதலின் இஃது ஏதுவணி. அலர்ந்தன என்னும் முற்று அன் சாரியை இன்றி அலர்ந்த என்றாயிற்று. ஆடிப்பாடக் கா அலர்ந்த என்க. மற்றையும் என்பதில் உம் எச்ச உம்மை. இரிதல்—தோற்றோடல்.

34. புல்லிய பொழிற்கிடைப் புறப்பட் டெய்தி
மெல்லிய தோர்வளி விருந்தெ திர்கொளச்
சொல்லிய தூதுபோற் கருங்கி வீசியங்
கல்லிய மலர்மணம் வாரிக் கக்குமால்.

(ப-ரை) புல்லிய பொழிற்கு இடை - சிறிய சோலையின் கண் தோன்றிவந்த; மெல்லியது ஓர் வளி - மென்மையதான ஒப்பற்ற காற்று; விருந்து எதிர்கொள சொல்லிய தூது போல — விருந்து வருதலை முன்பே சொல்லுகின்ற தூதுவர் போல; கருங்கி வீசி - இனிதாக வீசி; அம் கல்லிய மலர் மணம் வாரிக் கக்கும் - அழகும் தேனும் பொருந்திய மலர்களின் மணத்தைப் பெற்று வந்து தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை) புல்லிய - சிறிய, வளி - காற்று. கல்லியம் - தேன். அச் சோலையிலே காற்று மென்மையாகவும், இனியதாகவும், பூமணத்தை யுடையதாகவும், இம் மூவர் வருகையைத் தெரிவிக்கும் தூது போலவும் வீசியது. ஆல் - அசை நிலை. வளி, தூதுக்கு உவமை.

35. சூழிசை மேல்வளி துதைந்தங் காடிய
காழிசை தருத்தழை கனியப் பாடலும்
கேழிசை மூவரை வாழ்த்தக் கின்னர
யாழிசை யின்னரம் புளர லென்பவே.

(ப-ரை) சூழ் இசை மேல் வளி துதைந்து – சூழ்ந்த இனிமையின் கண் காற்றுக் கலத்தலால்; அங்கு ஆடிய காழ் இசை தருத்தழை கனியப்பாடல் – அங்கு அசைகின்ற வைரம் பொருந்திய மரங்களின் இலைகள் இனிதாக ஒலித்ததன்மை; கேழ் இசை மூவரை வாழ்த்த - ஒளி பொருந்திய இந்த மூவரையும் வாழ்த்துதற்காக; கின்னர யாழ் இசை இன் நரம்பு உளரல் என்ப - கின்னரர் தம் யாழிலே உள்ள இனிய நரம்புகளை அசைத்து வாசித்த இயல்பினது எனக் கூறுவர்.

(வி-ரை) துதைதல் - கலத்தல். காழ் - வயிரம். கேழ் — நிறம். கின்னரர் - தேவ இனத்தினருள் ஒருபிரிவினர்; யாழ் வாசிப்போர். சோலையிலே மெல்லிய காற்று வீச மரங்களின் இலைகள் அசைந்து இனிய ஒலியை உண்டாக்கின. இந்த ஓசை இந்த மூவரின் வருகைக்காக மகிழ்ந்து கின்னரர் இசைத்த யாழிசையைப் போல இருந்தது. இஃது தற்குறிப் பேற்ற உவமையணி. உம் - எச்ச உவமை.

36. ஆயரு முலவுதீங் குழலி னார்ப்பெழ
வாயரு முறவினோ டாவு மானுமொன்
றாயரு மறிவென வமர்ந்து நோக்கலி
னாயரு மறந்தகன் றடிது டர்ந்தவே.

(ப-ரை) ஆயரும் உலவு தீம் குழலின் ஆர்ப்பு எழ - இடையர் வைத்திருக்கின்ற இனிய வேய்ங் குழலின் ஓசை ஒலிக்க; ஆய் அரும் உறவினோடு ஆவும் ஆனும் – சொல்லுதற்கு அரிய அன்புடன் எருதுகளும் பசுக்களும்; ஒன்றாய் அரும் அறிவு என அமர்ந்து நோக்கலின் - ஒன்றாகச் சேர்ந்து அரிய அறிவைப்போல விரும்பி நோக்குதலால்; தாயரும் மறந்த கன்று அடி துடர்ந்த - தாய்ப்பசுக்களையும் மறந்து கன்றுகள் இவர்களின் அடியின்பின் தொடர்ந்து சென்றன.

(வி-ரை) ஆயர் - இடையர். ஆர்ப்பு - ஒலி. ஆன் - பசு. ஆ – எருது. இவர்கள் அங்கு சென்றபோது இடையர் வேய்ங்குழல் வாசித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனர்; பசுக்களும் எருதுகளும் கூடி நின்று இவர்களை நோக்கியபடி நின்றன. பசுக்கன்றுகள் தாய்ப்பசுக்களையும் மறந்து இவர்கள் பின் சென்றன. முல்லை நில இயற்கையை உள்ளபடி கூறுதலின் இது தன்மையணி. ஆயர், வேய்ங்குழல் ஒலித்தல், ஆ, ஆன் என்பன முல்லைநிலக் கருப்பொருள்கள். துடர்ந்த என்பது தொடர்ந்த என்பதன் பேச்சு வழக்கு; அன் பெறாது வந்த வினைமுற்று.

37. அம்புகை வில்லென வழுவ ணங்கின
வம்புகைத் துகிலென வலர்ந்த பூத்தரு
வம்புகை முளரிகொண் டடிவ ணங்கின
வம்புகை யொலியென வார்ப்ப வண்டரோ.

(ப-ரை). அம்பு உகைத்த வில் என - அம்பை ஏவிய வில்லைப் போல; அம் புகைத் துகிலென அலர்ந்த பூந்தரு - அழகிய புகைநிற ஆடையைப் போன்ற இலைகளுடன் பூக்களையுடைய மரங்கள்; அடி வணங்கின - இந்த மூவர்களதும் பாதங்களை வணங்கின; அம்பு கை முளரி கொண்டு அடி வணங்கின - நீர் நிலைகள் கையாகிய தாமரைப் பூக்களைக் கொண்டு இவர்களது பாதங்களைத் தொழுதன; அம் புகை ஒலி என வண்டு ஆர்ப்ப - அழகிய கருமுகில் ஒலி என வண்டுகள் ஒலித்தன.

(வி-ரை) (1) அம்புகை = அம்பு + உகை. (2) அம்புகை = அம் + புகை. புகை - புகைநிறம். (3) அம்புகை = அம்பு + கை. அம்பு - நீர். முளரி - தாமரை. (4) புகை - மழை மேகம், இஃது பண்பாகுபெயர் - பூந்தரு - பொலிவாகிய தரு எனக் கொள்ளின் பண்புத்தொகை. கைமுளரி - உருவகம். என - உவமை உருபு. மரங்களின் இலைகள் அடர்ந்து கரும் பச்சையாக இருந்தமையின் அத்தோற்றத்தைப் புகைத்துகில் என்றார்.

38. தழீயின கலன்பொருந் தளர்நு கப்பெனக்
குழீயின மலர்பொருக் கொடிக ளூசல்கொண்
டெழீயின கனிபொரு வளையிபங் கள்மேல்
விழீயின விணைபொரு விளங்குமுல் லையே.

(ப-ரை) தழீயின கலன் பொருந் தளர் நுசுப்பு என - அணியப் பெற்ற அணிகளைத் தாங்க இயலாமற் சோர்கின்ற இடையைப் போல; குழீயின மலர் பொருக் கொடிகள் ஊசல் கொண்டு - குழுமியுள்ள பூக்களைத் தாங்க இயலாமல் கொடிகள் ஊஞ்சற் கயிறுகளாக; எழீயின கனிபொரு வளை இபங்கள் மேல் - தோன்றிய பழங்களைத் தாங்க இயலாமல் வளைந்த கொம்புகளின் மேல்; இணை பொரு முல்லை விளங்க விழீயின - இணையற்ற முல்லை நிலம் விளங்கும்படி விழுந்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி—ரை) சழீஇயின, குழீஇயன முதலிய நான்கும் அளபெடை யான் வந்த பெயரெச்சங்கள். இவைமுறையே கலன், மலர், கனி, வினை ஆகிய பெயர்களைக் கொண்டு முடிந்தன. விளங்க — கடை குறைந்து வந்த வினைமுற்று. முல்லை — பால்பகா அஃறிணைப் பெயர். இபம் - மரக் கொம்பு. முல்லை - முல்லை நிலம். மலர்களின் பாரத்தினுல் வளைந்த கொடிகளுக்கு, அணிகளைத் தாங்காமல் வளைந்த மகளிரின் இடைகள் உவமை. இது தொழில் பற்றிய உவமை. விழீஇன - விழிந்திருந்தன. கொடிகள் கீழ்நோக்கி வளைந்திருந்தமையால் அவைக்கு ஊஞ்சலை உவமை கூறினர். நுசுப்பு — இடை.

39\. காவின்மீ தாடிய கனத்தி னார்ப்பெனப்
பாவின்மீ தாடிய பரிசி னாரவண்
மேவின்மீ தாடிய மிஞிறு விம்மின
பூவின்மீ தாடிய புதுக்கண் ணாடியே.

(ப—ரை) காவின் மீது ஆடிய கனத்தின் ஆர்ப்பு என - சோலையின் மேல் செல்லும் மேகங்களின் இடி ஒலியைப் போல; பாவின் மீது ஆடிய பரிசினார் - பாக்களில் அடங்காத சிறப்புத் தன்மையராகிய இம் மூவரும்; அவண் மேவின் மீது ஆடிய மிஞிறு விம்மின - அங்கே வந்தமையின் மேல் செல்லும் வண்டுகள் பெருமிதம் அடைந்த: புதுக்கள் நாடி பூவின் மீது ஆடிய - பூக்களின் மேல் வட்டமிட்டு ஒலி செய்தன.

(வி-ரை) ஆடுதல் - அசைதல். கனம் - மேகம், பரிசினர் - குசைபப்பர் முதலிய மூவர். அவண் - அங்கு. மேவின் - மேவு + இன். மேவு - மேவுதல்; முதனிலைத் தொழிற் பெயர், இன் - வேற்றுமை உருபு மயக்கம்; இன் - ஆல். மிஞிறு — வண்டு. கண்ணாடி = கள் + நாடி- நாடி - விரும்பி. கள் - தேன். ஆடிய - பலவின்பால் படர்க்கை இறந்த கால வினைமுற்று.

40\. ஈய்ந்தகண் ணாடிவண் டியாழ்செய் தார்நிழற்
றோய்ந்தகண் ணாடியொண் மயில்தன் றோகைகள்
வாய்ந்தகண் ணாடிகள் வனப்பென் றாயிர
மாய்ந்தகண் ணாடிவந் தவர்கண் டாடுமால்.

(ப—ரை) ஈய்ந்த கள் நாடி வண்டு யாழ் செய்து - (மலர்கள்) தந்த தேனை விரும்பி வண்டுகள் யாழைப் போல ஒலித்த; ஆர் நிழல் தோய்ந்த கண் நாடி ஒண் மயில் - நிறைந்த நிழல் பொருந்திய இடத்தைத் தேடி அழகியமயில்கள்; தன் தோகைகள் வாய்ந்த கண்ணாடிகள் வனப்பு என்று - தமது தோகைகளைத் தகுந்த கண்ணாடிகளின் தன்மையைப் போல; ஆயிரம் ஆய்ந்த கண் நாடி - ஆயிரம் ஆக உள்ள கண்களினுல் விரும்பி; அவர் கண்டு ஆடும் - அம் மூவரையும் கண்டு மகிழ்ச்சியுல் ஆடின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை) ஈதல் - கொடுத்தல். கண்ணாடி (1) கள் + நாடி. (2) கண் + நாடி. (3) கண்ணாடி = கண் + ஆடி. (4) கண் + நாடி. ஒண் மயில் - பண்புத்தொகை. வண்டுகளின் ஒலிக்கு யாழ்ஒலி உவமை. அவர்கள் வந்தபோது மயில்கள் தோகை விரித்து ஆடின. ஆயிரம் கண்களைக் கொண்டு அவர்களை அவை நோக்கின எனக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி. இதனால் அவர்களின் தெய்வச் சிறப்பினை உணர்த்தினார். ஆல் - ஈற்றசை.

41. பைங்கயற் றிசைத்த பொற்றுவி பற்றெனக்
கொங்கயற் றிமிசுசூழ் குளிரப் பூத்தன
செங்கயற் றடியுறை திரண்ட முத்தென
வங்கயற் றிராமர முகைத்த தாமரோ

ப-ரை) பைங்கயற்று இசைத்த பொற்றுவி பற்று என - பச்சைக் கயிற்றில் கட்டிய பொன்னாற் செய்த தாலியைப்போலத் தோன்றும்படி; திமிசு கொங்கு அயல் சூழ் குளிரப் பூத்தன-வேங்கை மரங்கள் அயலிலே வாசனை நிறையும்படி பூத்திருந்தன; செங்கயற்று அடியுறை திரண்ட முத்து என - சிவந்த கயிற்றின் அருகே பொருந்தி முத்துக்களைப் போல; அங்கு அயல் திராமரம் முகைத்த தாம் - அங்கே அயலிலே பவள மல்லிகைகள் மலர்ந்திருந்தன.

(வி-ரை) பைங்கயற்று = பசுமை + கயிறு. கயிற்றிசைத்த = கயிறு + இசைத்த. பற்று - பிணைப்பு. கொங்கு - வாசனை. திமிசு - வேங்கை. செங்கயற்று = செம் + கயிற்று. அங்கயற்றிரா = அங்கு + அயல் + திரா. அரோ - ஈற்றசை. வேங்கை மரங்களின் பூக்களுக்கு பொற்றுவிப் பற்றுகள் உவமை. பொதுத்தன்மை - பொன்னிறம். பவள மலிகைகளின் பூக்களுக்கு முத்துக்கள் உவமை. பொதுத்தன்மை - வெண்மை நிறம். முகைத்த - பலவின்பால் வினைமுற்று.

42. சிந்துரம் விழித்தெனச் சினைத்த 'பாடலஞ்
சிந்துர முகைமணித் றுகளிற் றீர்த்தன
சிந்துர மணந்தநீர் குளித்தசீர் மைபோற்
சிந்துர மணந்தோடு முகைத்த சிலமே.

(ப-ரை) சிந்துரம் விழித்து என பாடலம் சினைத்த — யானை பார்த்ததுபோலப் பாதிரி மரங்கள் பூத்திருந்தன; சிந்துர முகை மணித் துகளிற் தீர்த்தன — புளிய மரப் பூமொட்டுகள் மணிகளின் கூட்டம் போலத் தோன்றின; சிந்தூர மணந்த நீர் குளித்த சீர்மைபோல் — வாசனைப் பொடி கலந்த நீரிலே நீராடிய தன்மையைப் போல; சிலம் சிந்துர மணத்தொடு முகைத்த — வெட்சி மரங்கள் மிக்க வாசனையுடன் பூத்திருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை) சிந்துரம் — (1) யானை, (2) புளியமரம், (3) குங்குமம், (4) அழகு. பாடகம் — பாதிரி மரம். சிலம் — வெட்சி மரம். சீர்மை — சிறப்பு. இனைத்த, முகைத்த — படர்க்கைப் பலவின்பால் வினைமுற்றுகள். பாதிரி மரங்களின் பூக்கள் யானையின் கண்களுக்கும், புளிய மரங்களின் பூக்கள் மணிகளுக்கும், வெட்சி மலர்கள் குங்குமத்திற்கும் உவமைகள். இவை பண்புவமைகள்.

43. மீன்பரப் பெனமுகை விண்ட மத் றையும்
வான்பரப் பெனவிரி வனத்தி லெங்கணுந்
தேன்பரப் பெனக்குளிர் செலவைச் சென்றுசெல்
கான்பரப் பனைத்தையுங் கடந்து போயினூர்.

(ப-ரை) மற்றை மீன்பரப்பு என முகை விண்ட — ஏனைய மரங்களும் விண்மீன் கூட்டங்களைப் போலப் பூக்களைப் பூத்தன; வான் பரப்பு என விரி வனத்தில் எங்கணும் — ஆகாயப் பரப்பைப்போலப் பரந்த சோலையிலே எங்கும்; தேன் பரப்பு எனக் குளிர் செலவைச் சென்று — தேனைப் பரப்பிய இடம் போலக் குளிர்ந்த வழியிலே நடந்து; செல்கான் பரப்பு அனைத்தையும் கடந்து போயினூர் — செல்லவேண்டிய காடு முழுவதையும் கடந்து அவர்கள் சென்றனர்.

(வி-ரை) சோலைக்கு ஆகாயமும், மலர்களுக்கு விண்மீன்களும் உவமைகள். விண்ட — படர்க்கைப் பலவின்பால் வினைமுற்று. விரிவனம் — வினைத்தொகை. மீன்பரப்பு, வான் பரப்புமுதலிய நான்கும் ஆறும் வேற்றுமைத் தொகை. இழமைப் பொருள். செலவு — செல்லுதல்.

இரவில் ஒரு மரத்தடியிற் றுஞ்சுதல்

44. வீங்கு தங்குல மெலிவுறுத் தாங்குயர் நீரார்
ஓங்கு தங்குணத் தொத்தசூழ் விழுதே
தாங்கு தொன்மரத் தடிமணத் திண்ணையிற் றங்கி
யாங்கு வெங்கதிர் சாய்ந்தபின் னின்றுசெல் வயர்ந்தார்.

(ப-ரை) வீங்கு தம்குலம் மெலிவு உறுத் தாங்கு உயர் நீரார் — உயர்ந்த தம் குலம் தளராதபடி காக்கின்ற உயர்ந்த தன்மையுள்ளவரின்; ஓங்கு தம் குணத்து ஒத்த — உயர்ந்த பண்பைப் போன்ற; சூழ் நிலத்தில் விழுதே தாங்கு தொன் மரத்து அடி மணல் திண்ணையில் தங்கி — சூழ் நிலத்திலே விழுதுகள் தாங்குகின்ற முதுமையான ஆலமரத்தின் கீழ் மணலாலாகிய திண்ணையிலே இளைப்பாறி; ஆங்கு வெம் கதிர் சாய்ந்த பின் — அங்கே வெப்பமையான கதிர்களையுடைய சூரியன் மறைந்த பின்; நின்று செலவு அயர்ந்தார் — அங்கு நின்று செல்லுதலை மேற்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை) நீரார் = நீர்மை + ஆர். தொன்மையான ஆலமரத்தைத நாற்புறமும் தாங்கும் அதன் விழுதுகள், உயர்குலப் பெருமையைக் காத்து நிற்கும் உயர் குலத்தவர்க்கு உவமை. பகலிலே வெப்மை மிக்கு இருந்ததாதலின் பகலில் மரநிழலில் தங்கி இரவிலே நடந்தனர். செலவு என்பது சீர் நோக்கி இடைக்குறையாயிற்று. மணறிண்ணை = மணல் + திண்ணை.

மருத நிலத்தை அடைதல்

45. விண்வி ளக்கொளி வேந்தனைப் பொற்புறத் தெளித்துக்
கண்வி ளக்கிய கவின்மணி மேனியைப் பூண்டு
மண்வி ளக்கிட வந்தநா தனைப்புகழ்ந் தும்பர்
பண்வி ளக்கிசை பாடிப்போய் மருதமே சேர்ந்தார்.

(ப-ரை) விண் விளக்கு ஒளி வேந்தனை பொற்புறத்தெளித்து — ஆகாயத்திலே விளக்காக ஒளி செய்யும் சூரியனின் சிறப்புத் தன்மையை நினைவுறுத்தி; கண் விளக்கிய கவின்மனி மேனியைப் பூண்டு — கண்களை விளங்கச் செய்யும் அழகுமிக்க பனிதத் திருவுடலை அணிந்த; மண் விளக்கிட வந்த நாதனைப் புகழ்ந்து — பூவுலகு உய்யும்படி வந்த திருக்குமாரரைத் துதித்து; உம்பர் பண் விளக்கு இசை பாடிப் போய் — தேவர்களின் இசையிலும் மேலான இசைகளைப் பாடிக்கொண்டு; மருதமே சேர்ந்தார் — மருத நிலத்தினை அடைந்தனர்.

(வி-ரை) விண் விளக்கிய வேந்தனைப்போல மண் விளக்கவந்த நாதன் எனவும், கவின்மணி மேனி பூண்டுவந்த நாதன் எனவும் இணைக்க. நாதனைப் புகழ்ந்து இசைபாடி மருதம் சேர்ந்தனர். பொற்பு — சிறப்புத்தன்மை. மணி — ஒளி.

மருத நில வளம்

46. ஆறு பாயொலி யடற்றகர் பாயொலி தெறிக்கொம்
பேறு பாயொலி பெருமைநீர் பாயொலி கரும்பின்
சாறு பாயொலி சங்கொலி வயிரொலி மற்ற
மாறு பாயொலி மயக்குறி யெதிர்கொண் டார்த்தனவே.

(ப-ரை) ஆறு பாய் ஒலி — ஆறுகள் பாய்கின்ற ஒலிகளும்; அடல் தகர் பாய் ஒலி — வலிமையுள்ள ஆட்டுக்கடாக்கள் பாய்கின்ற ஒலியும்; எருமை நீர் பாய் ஒலி — எருமைகள் நீரிலே பாய்கின்ற ஒலியும்; சங்கு ஒலி வயிர் ஒலி — சங்கு ஒலி கொம்புக் கருவிகளின் ஒலி முதலியனவும்; மற்ற மாறு பாய் ஒலி — ஏனைய பல்வகைகளின் ஒலிகளும்; மயக்குறி — கலந்து; எதிர்கொண்டு ஆர்த்தன — அவர்கள் முன்னே ஒலித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை) வயிர் — கொம்பு வடிவான இசைக்கருவி. மயக்குறி — மயக்குற்று: கலந்து. நீர்நிலைகளிலே சங்கு ஒலியும், கலை நிலையங்களில் வயிரொலியும் ஒலிக்கும்.

47. உறைசெய் காரணி யுயர்மலை முலைபொழி பாலாய்
நறைசெய் தேனொடு நனிமலி புனல்வயல் பாயச்
சிறைசெய் காலது சிலைத்தலே யிவரடி சேர்ந்தோர்
குறைசெய் நோயறக் கூவுவு கூப்பிடல் போன்றே.

(ப-ரை) உறைசெய் கார் அணி — நீர்த்துளிகளைப் பெய்யும் கார்முகில் நிரைகள்; உயர்மலை முலை பொழி பாலாய் — உயர்ந்த மலைகள் ஆகிய முலைகள் பொழிந்த பால் ஆகி; நறைசெய் தேனொடு — வாசனை பொருந்திய தேனோடு; நனிமலி புனல் வயல் பாய — மிக்க நீரையுடைய வயல்களிலே செல்ல; சிறைசெய் காலது சிலைத்தல் — தடைசெய்கின்றபோது அந்நீர் ஒலித்தல்; இவர் அடி சேர்ந்தோர் — இவர்களது பாதங்களை அடைந்தோர்; குறைசெய் நோய் அற — தம்மை வருத்தும் நோய் நீங்கும்படி; கூவுவு கூப்பிடல் போன்றே — அழைத்துக் கூப்பிட்ட செயல் போன்றது.

(வி-ரை) காரணி சிலைத்தல் கூப்பிடல் போன்றது. மலை முலை — உருவகம். சிறை செய்தல் — தடுத்து வைத்தல். செய்கால் — செய்யும்போது; வினையெச்சம். கால் — வினையெச்சவிகுதி. சிலைத்தல் — ஒலித்தல். கூவுவு — வினையெச்சம். போன்றது என்னும் முற்று, சீர் நோக்கிப் போன்றே எனத் திரிந்தது.

48. நடிப்ப நாண்மலர் நறும்புனற் றடத்திலாங் குழுநர்
இடுப்ப நீணிறத் தழும்பக முரப்பலா லெழுமீன்
றுடிப்பு வாமைக டுப்பிடை தலைசுரித் தொளித்தல்
உடிப்ப மூவரே யுலகிட ரொளிக்குவ போன்றே.

(ப — ரை) அங்கு நறும்புனல் தடத்தில் நாண்மலர் நடிப்ப — அந்த மருத நிலத்தில் நல்ல நீர் உள்ள குளங்களிலே பூக்கள் அசையும்படி; உழுநர் நீல் நிறத்து உழும்பகடு இடிப்ப உரப்பலால் — உழவர் கரிய நிறமுள்ள உழுகின்ற எருதுகளை உரத்து நடத்துதலினால்; எழுமீன் துடிப்ப — அங்குள்ள மீன்கள் துடிக்க; ஆமைகள் துப்பு இடை தலை சுரித்து ஒளித்தல் — ஆமைகள் மடைகளின் துளைகளுள் தலையை மறைத்து இருத்தல்; மூவர் உடிப்ப உலகு இடர் ஒளிக்குவ போன்றே — இம்மூவர் வருதலால் உலகின் துன்பம் மறைதல் போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி - ரை) மவர் நடிப்ப உழுநர் பகடு உரப்பலால், மீன் துடிப்ப ஆமை ஒளித்தல்' மூவர் உடிப்ப உலகிடர் ஒளிக்குவ போன்றது- நடித்தல் — அசைதல். உழுநர் — தொழிலாகு வருபெயர், தூம்பு - நீர் ஓடை; ஒளித்தல் - எழுவாய்; போன்றே - பயனிலை.

49. செழித்த பூவயல் கிழிபடச் சிலரவணி கீறி
வீழ்த்த தாமரை மெலிவொடு வரம்பின்மேல் வாடல்
நீழ்த்த மாண்பிவர் நிழலடி வணங்கிலா நீக்கி
வாழ்த்த மாண்பிலர் வருத்தியுள் வாடுவர் போன்றே.

(ப - ரை) செழித்த பூவயல் கிழிபட — நிறமுள்ள பூக்களுள்ள வயல் பிளவுபட; சிலர் அகண் கீறி - உழவர் சிலர் அங்கு உழுதலால்; வீழ்த்த தாமரை மெலிவொடு வரம்பின்மேல் வாடல் - பெயர்ந்த தாமரை வரண்டு வரம்பின்கண் வாடுதல்; நீழ்த்த மாண்பு இவர் நிழல் அடி வணக்கிலா நீக்கி—நீண்ட சிறப்பினையுடைய இவர்களின் குளிர்ந்த அடிகளை வணங்காமல் நீங்கி; வாழ்த்த மாண்பிலர் - துதிக்கும் தன்மை இல்லாதார்; உள்வருந்தி வாடுவர்போன்றே-உள்ளம் துன்புற்று வாடுதலைப் போன்றது.

(வி-ரை) செழித்த - முதலிய நான்கும் பெயரெச்சங்கள். கீற என்பது கீறி எனத்திரிந்தது. வயல்களில் நிறப்பூக்கள் உள. வயல்களை உழவர் உழுகின்றனர். தாமரைகள் பெயர்ந்து வரம்பின்மேல் கிடந்து வாடுகின்றன. சூசையப்பர் முதலிய மூவரையும் வணங்காமல் துன்புற்று வாடுவோருக்கு வரம்பில் வாடும் தாமரை உவமை. நீக்கி — வலித்தல் விகாரம். வணங்கிலா வாழ்த்த மாண்பு இலர் எனச் சேர்க்க. இதனால் மூவரதும் தெய்வ அருட்பெருமையை உணர்த்தினர்.

50. புரிந்த வோகையிற் பொருவிலா விவரருட் போன்று
பிரிந்த மேதிதன் பிள்ளையை யுள்ளலிற் கனைந்து
சொரிந்த பாலுண்டு துஞ்சிய வோதிமம் வெருவி
யிரிந்த தாகவார்த் தெழுகென வித்தினர் சிலரே.

(ப — ரை) புரிந்த ஓகையில் பொருவு இவர் அருள்போன்று - பொருந்திய மகிழ்வினால் ஒப்பு இல்லாத இவர்களது அருளைப்போன்று; பிரிந்த தன் பிள்ளையை மேதி உள்ளலில் கனைத்து - பிரிந்த தன் கன்றை எருமை நினைந்து சத்தமிட்டு; சொரிந்த பால் உண்டு - சொரிந்தபாலை உண்டு; துஞ்சிய ஓதிமம் வெருவி - நித்திரை செய்த அன்னம் பயந்து; இரிந்ததாக ஆர்த்து - பறந்து போகும்படி ஆரவாரித்த; சிலர் எழுக என வித்தினர் — உழவர் சிலர் நன்கு வளர்க என நினைத்துத் தானியங்களை விதைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி — ரை) பேதி தன் கன்றை உள்ளல் இவர்களின் அருளலுக்கு உவமை. பேதிகள் கன்றுகளை நினைத்துச் சத்தமிட்டுப் பாலைச்சொரி கின்றன. அப்பாலை அன்னப்பறவைகள் உண்டு தாமரை மலர்களிலே துயில்கின்றன. அவை அஞ்சி ஓடும்படி உழவர் சத்தமிட்டு விதைகளை விதைத்தனர். கனைத்தல் — ஒலித்தல். எழுகென = எழுக + என. 'துஞ்சிய ஓதிமம் வெருவி யிரிந்த' என்பது அச்சச்சுவையை உடையது.

51. இங்கண் பாவியாப் பிசைபயன் விரித்துரைத் தென்ன
வங்கண் மாதர்கட் டவிழ்த்துச் செந்நெல்முடி நடுவார்
திங்க ளுண்முகத் திவர்க்கிணை யலவெனச் சினந்தே
யங்க ணம்பலோ டலரெலாங் களையெனப் பறிப்பார்.

(ப — ரை) இங்கண் பாவு யாப்பு இசை பயன் விரித்து உரைத்து என்ன — ஓரிடத்தில் சொல்லிய பாவிலே பொருந்திய பயனை விரித்து உரைத்தாற்போல; அம்கண் மாதர் கட்டு அவிழ்த்துக் செந்நெல் நல் முடி நடுவார் — அழகிய கண்களையுடைய பெண்கள் கட்டை அவிழ்த்துச் செந்நெல்லின் நாற்றுகளை நடுகின்றனர்; திங்கள் நாள்முகத்து இவர்க்கு இணை அல எனச்சினந்து — பூரண சந்திரன் போல முகம் உள்ள இம்மூவர்க்கும் ஒப்பு இல்லைஎன வெறுப்புற்று; அம்கண் ஆம்பல் ஓடு அலர் எலாம் களை எனப் பறிப்பார் — அழகிய கண்போன்ற ஆம்பல் முதலிய பூக்கள் யாவையும் களைப்பூண்டுகளைப் போலப் பிடுங்கினர்.

(வி — ரை) பாவியாப்பு = பாவு + யாப்பு. யாப்பு - பா. கட்டை அவிழ்த்துத் தனித்தனி நெல்நாற்றை நடுதல் பாட்டைத் தனித்தனிச் சொற்களாகப் பிரித்துப் பொருளுரைத்தலுக்கு உவமை. மூவர்களது முகத்திற்கு அம்மலர்கள் ஒப்பாகாமையால் அவைகளைப் பெண்கள் பிடுங்கினர். இஃது உவமேயத்திற்கு உயர்வு தோன்றக்கூறியது.

52. படியொ ருங்கிவர் பயந்தநன் றியல்பென வொருபால்
நெடிதோ ருங்குசெந் நெல்வளர்ந் தவர்தொழு தொருபால்
கடிதொ ருங்குகை கூட்பெனக் கதிர்நெறித் தொருபால்
அடிவெ ருங்குற வுளைதலை விளைந்தன வகணி.

(ப—ரை) பஅரணி — வயல்களில்; படி ஒருங்கு இவர் பயந்த நன்று இயல்பு என — பூவுலகின் கண் இம்மூவர் அருளிய நன்மைகளின் தன்மையைப்போல; ஓர்பால் நெடிது ஒருங்கு செந்நெல் வளர்ந்த — ஓரிடத்தில் உயர்ந்து தொகுதியாகச் செவ்விய நெற்பயிர்கள் வளர்ந்து நின்றன; ஒரு பால் அவர் தொழுது கடிது ஒருங்கு கைகூப்பு என கதிர் நெறித்து — ஓரிடத்தில் அவர்களைத் துதித்தற்காக விரைந்து ஒருமித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக் கைகளைக் குவித்த தன்மைபோல நெற்கதிர்கள் நிரையாக விளங் கின; ஒருபால் அடி ஒருங்கு உற வளைதலை விளைந்தன - ஓரிடத்தில் அவர்களது பாதங்களை ஒருங்கு பொருந்துதற்காக நெற்கதிர்கள் தலையை வளைத்து நின்றன.

(வி - ரை) இம்மூவரும் பூவுலகிற்கு ஆற்றிய நன்மைகளைப்போல செந்நெற்கள் செழித்து வளர்ந்திருந்தன எனவும், அவர்களைத் துதித் தற்காகக் கதிர்கள் குவிந்திருந்தன எனவும், அவர்களின் பாதங்களைத் தொடுதற்காகக் கதிர்கள் வளைந்தன எனவும் கூறியமை தற்குறிப் பேற்ற அணி. வளைதலை - வினைத்தொகை. நெல், கதிர், தலை என் பன பால்பகா அஃறிணைப் பெயர்கள். வளர்ந்த நெறித்த என்னும் வினைமுற்றுகள் வளர்ந்து, நெறித்து எனத் திரிந்தன. அவர்தொழு - இரண்டாம் வேற்றுமைத்தொகை. அகணி - வயல். வளைதலை - நெற்கதிர்.

53. மீனி ருங்கொடி வேந்துதன் னருள்வளங் காட்டத்
தேனி ருந்தலைக் கரும்புற மாடிய செந்நெல்
வானி ரும்புலத் தரிவைதா ளணியிள மதிபோற்
கூனி ரும்பினிற் குறைத்தரி பகுத்தன ரொருபால்.

(ப - ரை) மீன் இரும்கொடி வேந்துதன் அருள் வளம் காட்ட — விண்மீனைப் பெரும் கொடியாகக்கொண்ட தேவகுமாரரின் சிறப்பை உணர்த்தற்காக; தேன் இரும் தலைகரும்பு உறம் ஆடிய செந்நெல் - தேனைத்தரும் சிறந்த கரும்பினை ஒத்த செந்நெல்; வான் இரும் புலத்து அரிவை தாள் அணி இளமதி போல் — வானம் ஆகிய பெரிய இடத்தினையுடைய மேரி அன்னையின் பாதங்களை ஒத்த இளம் பிறையைப் போல; ஒருபால் கூன் இருப்பினில் குறைத்து அரி பகுத்தனர் - ஓரிடத்தில் வளைந்த அரிவாளினால் அரிந்து வகுத்தனர்.

(வி - ரை) இரும்கொடிவேந்து - தேவகுமாரன். அவரின் அருள் வளத்தைச் செந்நெல் வளம் காட்டிற்று. நெல் கரும்புபோல வளர்ந் திருந்தது. மேரியன்னையின் பாதத்திற்குப் பிறையும், பிறைக்கு அரி வாளும் உவமைகள். இவை வடிவ உவமை. கூன் இருப்பு - வளைந்த அரிவாள். இளமதி - பிறை. அரிவை — மேரி. புலம் - இடம்.

54. குறைக்கு வார்சிலர் கூமகட் குழலெனச் சேர்த்தி
யிறுக்கு வார்சிலர் இவள்புணர் முலையெனப் பலபோர்
நிறைக்கு வார்சிலர் நீளிறப் பாட்டிஞ றெணிப்ப
வுறக்கு வார்சில ருறைந்தவை நீக்குவார் சிலரே.

(ப-ரை) குறைக்குவார் சிலர் — சிலர் நெல்லை அரிவார்; சிலர் கூ மகள் குழல் என சேர்த்தி இறுக்குவார் — சிலர் பூமகளின் கூந்தல் போல அரித்தவைகளைச் சேர்த்துக் கட்டுவர்; இவள் புணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முலை என சிலர் பல போர் நிறைக்குவார் — இவனது அழகிய முலையைப் போலச் சிலர் பல நெற்குவியல்களை அமைப்பர்; சிலர் நீல்நிறப் பகட்டினால் தெளிப்ப உறுக்குவார் — சிலர் கருநிற எருமைகளை நடாத்திக் குவியலை மிதிக்கச் செய்வர்; சிலர் குறைந்தவை நீக்குவார் — சிலர் மிதிப்பித்த நெல்லை வைக்கோலிலிருந்து வேருக்குவர்.

(வி-ரை) குறைத்தல் — அரிதல். கூ — பூமி. புணர் — புதுமை. முலை — உவமேயம்; நெற்போர் — உவமை. நீனிறம் = நீல + நிறம். மருத நிலத்துத் தொழில்களைக் கூறினார்.

55. மாரி மல்கிய மதிதோறு மும்மழை பெய்ய
வேரி மல்கிய விளைபுலத் தெனைப்பக றோறும்
பூரி மல்கியத் தொழிலெலாம் பொருந்திய மூவர்
சீரின் மல்கிய செல்வநாட் டலர்பணை நடந்தார்.

(ப-ரை) மதிதோறும் மும்மழை பெய்ய மாரி மல்கிய — மாதந்தோறும் மூன்று மழை பெய்தலினால் நீர் மிகுந்தது; ஏரி மல்கிய — குளங்கள் நிறைந்தன; விளைபுலத்து எனைப் பகல் தோறும் — வயல்களிலே ஒவ்வொரு பகல் நாளிலும்; பொருந்தி தொழில் எலாம் பூரி மல்கிய — உரிய தொழில்கள் யாவும் மிக நிறைந்திருந்தன; சீரின் மல்கிய செல்வ நாட்டு அலர் பணை — இவ்வகைச் சிறப்புகள் நிறைந்த செல்வம் மிக்க நாட்டிலே உள்ள மருத நிலத்திலே; அம்மூவர் நடந்தனர் — அந்த மூவரும் நடந்து சென்றனர்.

(வி-ரை) மதி — மாதம். பூரி — நிறைவு. சீர் — சிறப்பு. விளைநிலம் — வயல். பணை — மருத நிலம். மல்கிய — வினைமுற்று. உழுதல், விதைத்தல் முதலிய பல தொழில்களையும் குறித்துத் 'தொழில் எலாம்' என்றார்.

எருசலேம் நகரை அணுகுதல்

56. காரி வாயென நிறவிய கமுகுயர் காவு
நாரி வாயென நனிநால் தெங்கெழு காவும்
பூரி வாய்வளை புலவர்போ லரப்பையின் காவும்
வேரி வாய்மலர்க் காவுநீந் தணிநகர் மிடைந்தார்.

(ப-ரை) காரி வாய் என நிறுவிய கமுகு உயர் காவும் — குதிரையின் தன்மையைப் போல வளர்ந்த கமுகுகள் உள்ள சோலையையும்; நாரி வாய் என நனி நால் தெங்கு எழு காவும் — பெண்களின் வாயைப்போல மிக ஒலிக்கும் தென்னை உள்ள சோலைகளையும்; பூரி வாய் வலை புலவர்போல் அரப்பையின் காவும் — செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த இடத்து பணிவை வெளிக்காட்டும் அறிஞர்போல் உள்ள வாழைமுகளின் சோலைகளையும்; வேரி ஊாய் மலர்க்காவும் — வாசனை பொருந்திய மலர்கள் உள்ள சோலைகளையும்; நீத்து — கடந்து; அணி நகர் மிடைந்தார் — அழகிய எருசலேம் நகரை அணுகினர்.

(வி-ரை) காரி — தீய குணமுள்ளவர், நாரி — பெண். நரல்—ஒலி. பூரி — நிறைவு. கா — சோலை. வேரி — வாசனை. மிடைதல் — அணுகுதல். வாய்: (1) தன்மை. (பண்புப்பெயர்) (2) வாய் (உறுப்புப்பெயர்) (3) இடம் (ஏழாம் வேற்றுமை உருபு) (4) பொருந்திய (பெயரெச்சம்). உயர்ந்து வளர்தலின் கமுகு குதிரைக்கும், தென்னையின் ஓலைகள் எப்போதும் சலசல என ஒலித்தலால் அவைகள் அத்தன்மைப் பெண்களுக்கும், குலை வந்தபோது வாழை வளைந்து நிற்றலின் செல்வம் நிறைதலின்போது பணிவை வெளிப்படுத்தும் அறிஞர்க்கும், உவமை ஆயின. உம் — என்னும் பொருள்.

எருசலேம் நகர்ச் சிறப்பு

57. விருந்தி ஞர்முகம் விரும்பினர் கண்டென மலர்ந்து
வருந்தி ஞர்முகம் கண்டழு நீரென மதுப்பெய்
தருந்தி ஞர்முகம் தவாவறக் கனிமலி காவிற்
பொருந்தி ஞர்முகம் பொலிநகர்ப் புரிசையைக் கண்டார்.

(ப-ரை) விருந்திஞர் முகம் விருப்பினர் கண்டென மலர்ந்து — விருந்தினரது முகத்தை அன்புடையவராய் நோக்கி மகிழ்வதைப் போல மகிழ்ந்து; வருந்திஞர் முகம் கண்டு அழு நீர் என — துன்புறுவார் முகத்தைக் கண்டு துன்புறும் தன்மையைப் போல வாடி; மதுப் பெய்து அருந்திஞர் முகம் தவா அற — தேனை நிறைந்து உண்டவரிடத்து ஆசை தீரும்படி; கனி மலி காவிற் பொருந்திஞர் முகம்பொலி — கனிகள் நிறைந்த சோலையை ஒத்த மக்களின் இருப்பிடங்கள் உள்ள; நகர்ப் புரிசையைக் கண்டார் — எருசலேம் நகரின் புற மதில்களை அவர்கள் கண்டனர்.

(வி-ரை) பூக்கள் மலர்தல் விருந்தினரை உபசரிப்பவரின் முகம் மலர்தலுக்கும், அவை வாடல் அவர்கள் வாடற்கும், கனிமலி சோலை நகர மக்களுக்கும் உவமைகள். 'அருந்திஞர் முகம் தவாவறக் கனி' காண்பது சோலையின் சிறப்பையும், 'காவிற் பொருந்திஞர் முகம் பொலி நகர்' என்பது நகரின் சிறப்பையும் உணர்த்தின. புரிசை — மதில். தவா — ஆசை. மது — தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58. மின்னிய முகில்சூழ் பொன்மலை தழுவி வேய்ந்தென விசும்பினைத் [தாவுங்
கன்னிய புரிசை சூழ்தரத் தோன்றிக் கசடுறு மெரோதனென் [றரசன்
துன்னிய கொடுங்கோல் துயர்செய வுளைந்து தொன்மறை வழுவில [காத்து
மன்னிய வளங்கொ ளெருசலே மென்னு மாநகர் தோன்றிய [தன்றே.

(ப-ரை) மின்னிய முகில் சூழ் பொன்மலை தழுவி வேய்ந்து என — மின்னுகின்ற முகில்கள் சூழுகின்ற மேருமலை ஒப்ப அமைந்தாற்போல; விசும்பினைத் தாவும் கன்னிய புரிசை சூழ்தரத் தோன்றி — ஆகாயத்தை அளாவுகின்ற அழகிய மதில்கள் சூழும்படி அமைந்த; கசடு உறும் எரோதன் என்று அரசன் துன்னிய — குற்றம் பொருந்திய எரோதன் என்னும் அரசன் செய்த; கொடுங்கோல் துயர்செய உளைந்து — கொடுமையான ஆட்சி துன்பத்தைச் செய்ய வருந்தி; தொன்முறை வழுவில காத்து — பழைய மரபுகளை வழுவாமல் நிலை பெறச் செய்த; மன்னிய வளம்கொள் எருசலேம் என்னும் — நிலையான வளத்தினையுடைய எருசலேம் என்னும்; மாநகர் தோன்றியது — பெருமையுள்ள நகரம் தெரிந்தது.

(வி-ரை) உயர்ந்த தோற்றத்தினால் மதில்கள் மேருமலைக்கு உவமையாயின. விசும்பினைத் தாவுதல் மதில்களுக்கும், கன்னிய புரிசை சூழ்தல் — தொன்முறை காத்தல் — மன்னிய வளம் கொள்ளல் — அரசனின் கொடுங்கோல் உளைதல் என்பன எருசலேம் நகருக்கும் சிறப்புகள். பொன்மலை — மேருமலை. வேய்தல் — அமைதல். கன்னி — இளமை. கசடு — குற்றம். எரோதன் என்னும் அரசன் கொடுங்கோலனாக எருசலேம் நகரத்து இருந்து ஆட்சி செய்தான். தனது ஆட்சிக்குத் தேவகுழந்தை ஒன்றினால் தீமை வரும் என்பதைத் தீர்க்கதரிசன வாக்கால் அறிந்த அவன் அக்காலத்துப் பிறந்த குழந்தைகள் யாவரையும் கொல்லுவித்தான்; ஆனால் தேவகுழந்தை காப்பாற்றப் பட்டது (விவிலிய வேதம், மத்தேயு அதி. 2:16)

59. அல்லுமி ழிருளி னிருண்ட நெஞ்சகன் செய்வ தந்தையின் [வெவ்வழ லாற்ற
வில்லுமிழ் பசும்பொன் மாடங்க ளெற்றி விரிந்தபூங் [கொடிகட மீட்டம்
எல்லுமிழ் மூவர் வருவகண் டரச னியற்றிய வஞ்சனைக் கஞ்சி
நில்லுமி னின்மி னெனவிடை விடாது நீண்டகை காட்டுவ [போன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப-ரை) அல் உமிழ் இருளின் இருண்ட நெஞ்சவன் — இரவு தரும் இருளிலும் இருண்ட மனத்தினனான ஏரோதன் என்னும் அரசன்; செய் அரத்தையின் வெவ் அழல் ஆற்ற — செய்கின்ற கொடுமைகளின் கொடுந் தன்மையைத் தணித்தற்காக; வில் உமிழ் பசும்பொன் மாடங்கள் நெற்றி — ஒளிவீசும் பசிய பொன் பதித்த மாடிகளின் உச்சியிலே; விரிந்த பூங்கொடிகள் தம் ஈட்டம் — பறக்கின்ற பொலிவாகிய கொடிகளின் தொகுதி; எல் உமிழ் மூவர் வருவ கண்டு — ஒளி விளங்கும் அம்மூவரும் வருதலைக் கண்டு; அரசன் இயற்றிய வஞ்சனைக்கு அஞ்சி — அவ் அரசன் செய்யும் தீமைகளுக்குப் பயந்து; நில்லுமின் நில்லுமின் என இடைவிடாது — நில்லுங்கள் வராதீர் என இடைவிடாது; நீண்ட கை காட்டுவ போன்றே — நீண்ட கைகளைக் காட்டுவது போன்றதாகும்.

(வி-ரை) அல் — இரவு. அரத்தை — கொடுமை. எல், வில் — ஒளி. நெற்றி — உச்சி. ஈட்டம் — கூட்டம். 'இருளின் இருண்ட நெஞ்சவன்' என்பது அரசனின் கொடுமைகளையும், 'வில்லுமிழ் பசும்பொன் மாடம்' என்பது மாடங்களின் சிறப்பையும் உணர்த்தின. மாடங்களின் கொடிகள் நில்மினெனக் கை காட்டுவ போன்றன. இது தற்குறிப்பேற்ற அணி.

60. மண்புடை வான மன்னனை வணங்கி வளம்பெறும் பசிய
[பொற் கோயில்
விண்புடை தீண்டி மின்மணிக் கோட்டின் மீதொளிர்
[பதாகைநின் றாடல்
ஒண்புடைக் கொடிகா ளில்லுமி னின்மி னுயிரடுந்
[துயரற வந்த
எண்புடை காக்கு மருட்புரி நாத னிவனென
[வயர்ந்திடல் போன்றே.

(ப-ரை) மண்புடை வான மன்னனை வணங்கி — பூவுலகின்கண் தேவ உலக அரசனாகிய திருக்குமாரரைத் தொழுது; வளம் பெறும் பசிய பொற்கோயில் — வளம் உடைய பசுமையான அழகிய கோயிலின்கண்; விண்புடை தீண்டி — ஆகாயத்தை அளாவி; மின்மணிக் கோட்டின் மீது ஒளிர் பதாகை நின்று ஆடல் — மின்னும் அழகிய உச்சியின்கண் விளங்குகின்ற கொடியானது நின்று அசைதல்; ஒண்புடை கொடிகாள் நில்லுமின் நின்மின் — அழகிய கொடிகளே நில்லுங்கள் நில்லுங்கள்; உயிர் அரும் துயர் அற வந்த — உயிர்களை வருத்தும் துன்பங்கள் நீங்கும்படி தோன்றிய; எண்புடை காக்கும் நாதன் இவன் — எட்டுத் திசைகளையும் காக்கும் தலைவன் இவனே; என அமர்த்திடல் போன்றே — என்று தெரிவித்தல் போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி-ரை) புடை :- (1), (2) ஏழாம் வேற்றுமை உருபு. (3) பொருந்துதல். (4) இடம். வான மன்னவனைப் பூவுலகில் வணங்குதற்கு இடமாவதனாலே வளம்பெறுகின்ற பொற்கோயில் என்க. கோடு — கோபுர உச்சி. மீது — ஏழனுருபு. பதாகை — கொடி. ஒண் — ஒளி. வந்தவெண் = வந்த + எண். ஆடல் — எழுவாய்: போன்றே — பயனிலை. கொடிகாள் நில்லுமின் எனப் பதாகை ஆடியதாகக் கூறியமை தற்குறிப்பேற்ற அணி.

61. சுதைநலம் ஞாயின் முலைநிறை வரைந்து துகிலென
[அகழியைச் சூடிப்
புதைநல விருள்கொள் முகிலெடுங் கூந்தல் பொருந்துயர்
[கோபுர முகத்திற்
றதைநலங் கொணரிம் மூவரைக் காணத் தடம்விழி
[திறந்தெனத் திறந்த
வதைநல மணிகள் குயிற்றிய வாயி லருமறை வடிவினர்
[புக்கார்.

(ப-ரை) சுதைநலம் ஞாயில் முலைநிறை வரைந்து — அந்நகரானது சாந்து பூசிய அழகிய கோட்டையின் ஏவறைகளை முலைகளாகக்கொண்டு; துகிலென அகழியைச் சூடி — ஆடையைப்போல அகழியை அமைத்து; புதை நல இருள்கொள் முகில்நெடும் கூந்தல்பொருந்து — செறிந்த நல்ல இருள் நிறத்தையுடைய முகிலை நீண்ட கூந்தலாகக் கொண்டு; உயர் கோபுர முகத்தில் — உயர்ந்த கோபுரம் ஆகிய முகத்திலே; ததை நலம் கொணர் இம்மூவர்க் காண — நிறைந்த நன்மைகளைத் தருகின்ற இம்மூவரையும் காணும்படி; தம் விழி திறந்தது என — விசாலமான கண்களைத் திறந்தாற்போல; திறந்த வதை நல மணிகள் குயிற்றிய வாயில் — தேன் கூடுபோன்று அழகிய மணிகள் பதித்த வாயிலில்; அருமறை வடிவினர் புக்கார்.

(வி-ரை) அந்நகரை ஒரு பெண்ணாக உருவகித்தார். காவலறைகள் — முலைகள்; அகழி — ஆடை; கருமுகில் — கூந்தல்; கோபுரம் — முகம்; வாயில் — கண். இம்மூவரையும் காணத்தடம்விழி திறந்தாற்போல வாயில் திறந்திருந்ததெனக் கூறியமை தற்குறிப்பேற்ற அணி. நகரைப் பெண்ணாக உருவகித்தமை உருவக அணி. அருமறை வடிவினர் என்பது மூவரின் சிறப்பை உணர்த்துகிறது. சுதை — சாந்து. ததைதல் — நிறைதல். வதை — தேன்கூடு. நலம் — நன்மை. ஞாயில் — கோட்டையின் காவற்கூடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. நூலினும் வழுவாச் செம்மையி னொழுகி நோக்கினு
[மகன்றொளித் தோடி
நூலினு மலிசீர்ச் சிறப்பணித் தெருவி னுண்மணிக்
[கொடிஞ்சிவண் சேருங்
காலினுங் காலிற் பாய்பரி மாவுங் கடாங்கழி கரிகளு நெருங்கக்
காலினும் பருஞ்சூ ழியாவையு நீக்கிக் கதிபுரி
[வேந்தர்போ யினரே.

(ப-ரை) நூலினும் வழுவாச் செம்மையின் ஒழுகி — நூல் அள வேனும் தவறுமற் செவ்விய தன்மையில் அமைந்து, நோக்கினும் அகன்று ஒளித்து ஓடி — கண் பார்வைக்கு அகப்படாமல் மறைந்து சென்று; நூலினும் மலிசீர்ச் சிறப்பு அணி தெருவின் — கற்ற நூலி லும் மிக்க சிறப்புள்ள அழகிய தெருக்களிலே; நுண் மணிக் கொடிஞ்சி வண் தேரும் — நுண்ணிய மணிகளாற் செய்த கொடிஞ் சியினை யுடைய வளமான தேரும்; காலினும் காலிற் பரிமாவும் — காற்றினும் விரைந்து செய்யும் கால்களையுடைய குதிரைகளும்; கடாம் கழி கரிகளும் — மதத்தினைப் பொழியும் யானைகளும்; நெருங்க — நெருங்கிவர; உம்பரும் சூழ் யாவையும் நீங்கி — தேவர் சூழ்ந்துள்ள அனைத்தையும் கடந்து; கதிபுரி வேந்தர் மூவரும் காலின் போயினர் — நெறியை அருளுதற்குரிய அந்த மூவரும் நடந்து சென்றனர்;

(வி-ரை) நூலினும் வழுவாச் செம்மையுடைமை, அகன்று நீண்டிருத்தல், கற்ற நூலினும் சீர் உடைமை, தேர், பரி கரி நெருங்கிவருதல் என்பன தெருவின் சிறப்புகள். நுண்மணிக் கொடிஞ்சி உடைமை தேருக்கும், காற்றிலும் விரைந்து பாயும் காலு டைமை குதிரைக்கும், மதம் உடைமை யானைக்கும் உரிய சிறப்புகள். தேவர் சூழ்தல் இடங்களின் சிறப்புகள், கதி புரிதல் மூவர்க்கும் உரிய சிறப்பு. நூலின் சீராவது நவில் தொறும் நயம் பயத்தல், அதுபோல் அத்தெரு ஆய் தொறும் சிறப்பு உடையது. சிறப்பணி தெருவிலே தேரும் மாவும் கரியும் நெருங்க யாவையும் நீங்கி மூவ ரும் போயினர். நூலினும், காலினும், உம்பரும் — இவைகளில் உள்ள உம் உயர்வு சிறப்பு. வழுவாச் செம்மையை மூவர்க்கும் கொள்க.

63. அகிலடும் புகையும் வாசபூம் புகையு மடர்ந்தநல்
[விருள்செயுந் தெருவின்
முகிலடுங் குன்றித் துணையமயில் திரிந்த முகமென
[விருவரே நடந்து
துகிலொடு மேந்தும் ஒழுவியம் முகிலுட் டோன்றிய
[மதியெனத் தோன்றி
யிகலடு மின்பத் தேவருமுட் குளிர விளங்கதிர்
[பரப்பியே போனார்.

(ப-ரை) அகில் அடும் புகையும் — அகிலிலிருந்து வரும் புகையும்: வாச பூம் புகையும் — வாசமுள்ள பொரிலாகிய ஏனைய புகைகளும்; அடர்ந்து நல் இருள் செயும் தெருவின் — நெருங்கி மிக்க இருளை உண்டாக்கும் வீதியிலே; முகில் அடும் குன்றில் இணைமயின் முகம் என — முகில்கள் படியும் மலையிலே இரு மயில்களின் வடிவம் போல; இருவரே நடந்து — சூசையப்பரும் மேரியன்னையும் நடந்து; துகிலொடும் ஏந்தும் குழவியும் — ஆடையுள் ஏந்திய திருக்குமாரரும்; முகிலினுள் தோன்றிய மதி என தோன்றி - முகில்களினுள் தோன்றுகின்ற சந்திரனைப் போல விளங்கி; இகல் அடும் இன்பத்து எவரும் உள்குளிர — ஒப்பு இல்லாத மகிழ்வொடு அனைவரும் மனம் மகிழ; இளம் கதிர் பரப்பியே போனார் — இளமையான ஒளி பரவும் படி சென்றனர்.

(வி-ரை) அகிற்புகையும் பூம்புகையும் கலந்து இருளைச் செய்வீதியில் இருவரும் எவரும் மகிழும்படி குழந்தையை ஆடையுள் ஏந்திக் கொண்டு சென்றனர். புகைகளின் மிகுதி நோக்கி இருள் செய்யும் என்றார். வீதியில் அவர்கள் நடந்துசென்றமைக்கு முகில்படியும் மலையிலே மயில்கள் நடந்துசென்றமை உவமை. ஆடையுள் இருந்த திருக்குமாரருக்கு முகிலுட் தோன்றும் சந்திரன் உவமை. ஒளி — தெய்வ ஒளி. இருவரே, பரப்பியே — ஏகாரங்கள் தேற்றம். இகல் — ஒப்பு.

64. தேனலம் பயின்று நறுமழை துளித்துச் சீர்கெழு தூங்
[கிசை திருத்திப்
பாலலம் பயின்று பாடிய வண்டின் பக்கின மூசலா டுதற்கே
கானலம் பயின்ற மலர்கடோ ரணத்திற் கதிர்மணித்
[தோரணந் தயங்க
வானலம் பயின்ற வேந்துலந் தமையால் வானவில் வீழ்ந்
[தெனப் போன்றே.

(ப-ரை) தேன் நலம் பயின்று - தேனின் நன்மையைப் பெற்று; நறுமழை துளித்து - வாசனையாகிய மழையைச் சொரிந்து; சீர்கெழு தூங்கு இசை திருத்தி - சிறப்புப் பொருந்திய ஒலிக்கின்ற இசையைச் செவ்விதாக்கி; பால் நலம் பயின்று - பாலின் இனிய தன்மையை உடையதாய்; பாடிய வண்டின் - பாடல்களைப் பாடிய வண்டினங்கள்; ஊசல் ஆடுதற்கே கான் நலம் பயின்ற - சுற்றி வட்டமிடுதற்கான வாசனைச் சிறப்பையுடைய; மலர்கள் தோரணத்தில் - மலர்களாகிய தோரணங்களுடன்; கதிர்மணித் தோரணம் தயங்க - ஒலியுள்ள மணிகளையுடைய தோரணங்கள் விளங்கின; வான் நலம் பயின்ற வேந்து - விளங்குகின்ற அந்தத் தேவஉலக நன்மைகளையுடைய வேந்தராகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குமாரர்; வந்தமையால் - அந்நகருக்கு வந்தமையினாலே; வானவில் வீழ்ந்து எனப் போன்று - வானவில் தோன்றியமைப்போன்று ஆகும்.

(வி-ரை) தேன்நலம் பயிலல், வாசமழை துளித்தல், இசைதிருந்தல்; பால்நலம் பயின்று பாடல், ஊசல் ஆடுதல் என்பன வண்டிற்கு உரியன. மலர்த்தோரணங்களும் மணித் தோரணங்களும் வானவ வேந்தன் வந்தமைக்காகத் தோன்றிய வான வில்லைப் போன்று விளங்கின. இவ்வாறு கூறியமை தற்குறிப்பேற்ற உவமையணி. தேனலம் = தேன் + நலம். பானலம் = பால் + நலம், கானலம் = கான் + நலம். வானலம் = வான் + நலம். நலம் - தன்மை. தன்மை - நறு. கான் - வாசனை. தோரணத்தில் - வேற்றுமை மயக்கம். தயங்க - தயங்கின.

65. தூமமேய்ந் திருண்ட குழலினார் மார்பிற் றூங்கிய
[முத்தணி வடமேற்
காமனே களிப்புற் றூசலா டியகாற் கசடறு மிவர்வரக் கண்டு
வீமமே யுற்று நடுக்கொடு வழுவி வீழ்ந்துளத் தழற்றழ லாறித்
தாமமே யளிபோற் குளிரவுட் களித்துத் தயவொடு திதறப்
[புகழ்ந்தார்.

(ப-ரை) தூமம் ஏய்ந்து இருண்ட குழலினார் — அகிற் புகையைப் பொருந்தி இருண்ட கூந்தலையுடைய மகளிர்; மார்பிற் தூங்கிய முத்து அணி வடமேல் — மார்பிலே தொங்குகின்ற முத்துகள் அணிந்த கயிற்றின்கண்; காமனே ஊசல் ஆடியகால் கசடு அற — மன்மதன் இனிது ஊஞ்சல் ஆடி மகிழ்ந்திருக்கும்போது; கசடு அற இவர் வரக்கண்டு — பாபத்தை அறுக்கும் இந்த மூவரும் வருதலைக் கண்டு; வீமமே உற்று நடுக்கு ஒரு வழுவி வீழ்ந்து — பயந்து நடுங்கி தவறி விழுந்து; உளத்து அழல் தழல் ஆறி — மனத்தில் உண்டான நெருப்புத் தணிதலுற்று; தாமம் ஏய் அளிபோல் குளிர உள் களித்து — மாலைமேல் வண்டுபோலக் குளிர்ந்து உள்ளம் மகிழ்ந்து; தயவொடு திது அறப் புகழ்ந்தார் — அன்பு கொண்டு தீமை நீங்கும்படி துதித்தனர்.

(வி-ரை) குழலினார் இவர் வரக்கண்டு புகழ்ந்தார். இவர் வருமுன் அவர்களது மனதில் ஊஞ்சல் ஆடிய காமன் இவர்கள் வந்தமையால் நீங்கினான் ஆதலின் புகழ்ந்தனர். ஊஞ்சலாடிய இடம் மார்பு; அதனை வடத்தின்மேற் கூறினார். இவ்வாறு கூறியமை அபாவ அணி. அபாவம் — இல்லாத இயல்பை உள்ளதுபோற் கூறுதல். வீமம் — அச்சம். ஆசையைத் தழலாக உருவகித்தார். அழற்றழல் — அழல் + தழல். ஏய் — பொருந்திய.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. விடுந்திரை கொழித்த விம்மொலி போன்ற விற்பவர்
[கொள்பவரொலியு
நெடுந்திரை கொழித்த திருத்திரள் போன்ற நிதியொடு
[நிறமணி பலவும்
படுந்திரை கொழித்த மயங்கலை போன்ற பரிகரி
[யீட்டமு மமையின்
கடுந்திரை கொழித்த கருங்கடல் போன்ற நடைவழி
[போயினர் மாதோ.

(ப-ரை) விடுந்திரை கொழித்த விம்மு ஒலி போன்ற — கடலின் திரைகள் உண்டாக்குகின்ற ஒலியைப்போல; விற்பவர் கொள்பவர் ஒலியும் — விற்பனை செய்பவர்களதும் வாங்குபவர்களதும் ஒலிகளும்; நெடுந்திரை கொழித்த திருத்திரள் போன்ற நிதியொடு நிறமணி பலவும் — நெடிய திரைகள் தருகின்ற செல்வக் குவியல் போன்ற பொருள்களும் நிறமுள்ள மணிகளும்; படும் திரை கொழித்த மயங்கு அலை போன்ற பரிகரி ஈட்டமும் — கடலின் உண்டாகிவரும் அலைகளைப்போன்ற குதிரைகள், யானைகளின் கூட்டங்களும்; அமையின் கடுந்திரை கொழித்த கருங்கடல் போன்ற நடைவழி போயினர் — அமைந்த கடுந்திரைகளையுடைய கரிய கடலைப்போன்ற பாதையின் வழியே சென்றனர்.

(வி-ரை) பொருள்களை விற்பவர் — வாங்குபவர் ஒலிக்குக் கடலின் ஒலியும், நிதி நிறமணிகளுக்குக் கடல் தரு பொருட்குவையும், குதிரை - யானைகளின் கூட்டங்களுக்குக் கடலின் அலைகளும்; நடைவழிக்குக் கடலும் உவமைகள். கொழித்தல் — தருதல், திரை என்பது காரணப் பெயர். விம்மொலி — விம்மு + ஒலி. மயங்கலை = மயங்கு + அலை. மயங்குதல் — கலத்தல். மாதோ — அசைச்சொல்.

67. மோயிசன் றன்கைச் சூரலிற் பிரிந்த மொய்கடல் வழிவிடுத்தன்ன
மீயிசை தளங்க ளியாவருங் காணு மிடைந்துசூழ்
[வந்து செய்நெறியாற்
போயிசை பொருட்சேர் நகையெனுந் திரையுட் புக்கிலர்
[மூழ்கிலர் கடந்து
சேயிசை கடர்போன் றக்கட லிக்கிச் செயிரிருட் சிக்கவாங்
[குதித்தார்.

(ப-ரை) மோயிசன் தன்கைச் சூரலிற் பிரிந்த மொய்கடல் வழி விடுத்த அன்ன — மோசே என்பவனின் கையிற் பிரம்பினாலே பிரிந்து கடல் வழிவிட்டாற் போல; மீ இசை தளங்கள் யாவரும் காணு மிடைந்து சூழ்வந்து செய் நெறியால் போய் — மேலேயுள்ள வானவர்

பிறரெவரும் காணாமல் நெருங்கிச் சூழ்ந்து ஆக்கிய வழியினால் சென்று; இசை பொருள்சேர் நசை எனும் திரையுள் புக்கிலர் மூழ்கிலர் நடந்து — உவகைப் பெருநன்கவிசேல செல்லும் ஆசை ஆகிய திரையுள் புகாமலும் அழுந்தாமலும் நடந்து; சேய் இசை சுடர் போன்று அக்கடல் நீங்கி செயிர் இருள் சீக்க ஆங்கு உதித்தார் — சிவந்த கதிர்களையுடைய சூரியனைப்போல அக்கடலை விட்டு நீங்கி நெருங்கிய அஞ்ஞான இருளை நீக்க ஆங்கே தோன்றினர்.

(வி-ரை) மோயீசன் — முந்தகாலத்தில் இருந்த தீர்க்கதரிசிகளுள் ஒருவர். அவர் பாலஸ்தீனியரைக் கானானிலிருந்து அழைத்துவந்தபோது அவரது பிரம்பினாலே கடல் நீர் பிரிந்து வழி விட்டது (விவிலிய வேதம்)- தேவர்கள் யாவரும் இம்மூவரும் செல்லும் வழியின் இருபுறமும் சூழ்ந்து நின்றார்கள். அவர்களின் எண் மிகுதியை உணர்த்த அவர்களைக் கடலாகவும், அவ்வழியைக் கடல்விட்ட வழியாகவும் உவமித்தார். உலக ஆசையைக் கடற் திரையாகவும் அஞ்ஞானத்தை இருளாகவும் உருவகித்தார். அவர்களுக்குச் சூரியனை உவமையாகக் கூறினார். மீ — மேல். சேய்—சிவந்த. செயிர் — குற்றம். நசை — ஆசை. மிடைதல் — நெருங்குதல். புக்கிலர். மூழ்கிலர் — முற்றெச்சங்கள். அன்ன — உவமையுருபு. செயிரிருட் சீக்க வாக்குதித்தான் என ஏது கூறுதலின் ஏதுவணி.

சிறு குடிசையிற் தங்கியிருத்தல்

68. உதித்தன ரென்ன வாயிரங் கதிரோ னுவமையிற் றோர்த்தெனவொளித்துக்
குதித்தனன் கருந்தண் புணரியுட் புதைப்பக் கோதையுங் கொழுந்தவத் தவனும்
புதித்தன மிழைத்த மணிக்கலத் துயிரைப் புரியமு தேந்தியபோன்றே
விதித்தநன் மறையி னுதனை யேந்தி விருப்பொடு சிறுமனை புக்கார்.

(ப-ரை) உதித்தனர் என்ன — இவர்கள் தம்மினும் மிக்குத் தோன்றினர் என; ஆயிரம் கதிரோன் — ஆயிரம் கதிர்களையுடைய சூரியன்; உவமை இற்று ஓர்த்து என ஒளித்து — அவர்க்கு ஒப்பாகாமையை நினைந்து மறைந்து; கருந்தண் புணரியுட் குதித்தனன் — கரிய தண்ணிய கடலுள் புகுந்தனன்; புதைப்ப — அவ்வாறு மறைய; கோதையும் கொழுந்தவத்தோனும் — பெரியன்னையும் சூசையப்பரும்; புதித்தனம் இழைத்த மணிக்கலத்து உயிரைப் புரி அமுது ஏந்திய போன்று — புதிதாகச் செய்த அழகிய கலனிலே உயிரைத் தரும் நல் அமிர்தத்தை ஏந்தினாற் போல; விதித்த நல்மறையின் நாதனை —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப் பெற்ற நல்ல வேதம் போற்றும் திருக்குமாரனை; ஏந்தி விருப்பொடு சிறுமனை புக்கார் — கையில் ஏந்தி விருப்பத்துடன் சிறிய வீட்டிலே தங்கினார்.

(வி-ரை) இம்மூவர்க்கும் ஒப்பாகாமையை உணர்ந்து சூரியன் கடலிடை மறைந்தான் என்பது தற்குறிப்பேற்ற அணி. பகற்பொழுது கழிந்து இரவாயிற்று என்பதாம். அப்போது இவர்கள் அந்நகரிலே ஒரு சிறு மனையிலே தங்கினர். புணரி — கடல். இற்று — அற்று. உவமை — ஒப்பு. ஓர்தல் — நினைத்தல், புதித்தனம் = புது + தனம். கைக்குக் கலனும், திருக்குமாரருக்கு அமிர்தமும் உவமைகள்.

பெற்றோர் தேவாலயத்திற்குக் காணிக்கை கொடுத்தல்

69. கோணிக ருணர்விற் கைப்பொருட் டந்து குறும்புகழ்
[கோடலே சிறிய
வாணிகர் தொழிலா மிங்குமா றுணரார் வழங்குமொன் றுயிர மாகச்
சேணிகர் பயனை விளக்குமென் றுன்னிச் செல்வர்மூன்
[றளித்தவர் னிதியம்
பூணிகர் மறைநூ லணிவள னிருளின் போர்வை போர்த்
[தாலயத் தளித்தான்;

(ப-ரை) கோணிகர் உணர்வின் கைப்பொருள் தந்து — வளைவு ஒத்த அறிவினாலே தம்மிடம் உள்ள மிக்க பொருளைக் கொடுத்து; குறும்புகழ் கோடலே சிறிய வாணிகர் தொழிலாய் — பிறரிடமிருந்து சிறு புகழைப் பெறுதலே வணிகரின் தன்மையாம்; ஈங்கு மாறு உணரார் வழங்கும் ஒன்று - இங்கே மாறுபாடில்ல நல்லோர் வழங்குகின்ற ஒருபொருள்; ஆயிரமாகச் சேண் நிகர் பயனை விளக்கும் — ஆயிரம் பொருளாகத் தேவ உலகை ஒத்த பயனைக் கொடுக்கும்; என்று உன்னி — என நினைத்து; செல்வர் மூன்று அளித்த நிதியம் - மூன்று அரசர் கொடுத்த பொருளை; பூண் நிகர் மறை நூல் அணி வளன் — அணிகலனுக்கு ஒப்பாக வேதத்தை அணிந்த சூசையப்பர்; இருளின் போர்வை போர்த்து ஆலயத்து அளித்தான் — இருளாகிய போர்வையினாலே பிறர் அறியாதபடி தேவாலயத்துக்குக் கொடுத்தார்.

(வி-ரை) நல்லோர் இங்கு கொடுக்கும் ஒன்று தேவ உலகில் ஆயிரமாகப் பெருகிப் பயன் கொடுக்கும் என்பதை உணர்ந்தவராதலின், மூன்று அரசர் கொடுத்த பொருளைத் தேவாலயத்திற்குக் கொடுத்தார். பிறரறியாதபடி அதனைக் கொடுத்தார் என்பார் 'இருளின் போர்வை போர்த்து அளித்தான்' என்றார். அறம் முதலியவை பிறரறியாதபடி செய்தலே சிறந்தது என்பர். கோண் — வளைவு. பூண் - அணிகலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பூணிகர் மறைநூலணி வனன்' என்பது சூசையப்பரின் பெருமையை உணர்த்தி நிற்கிறது. மூன்று செல்வர் — திருக்குமாரனைக் காண வந்த அரசர்கள். சேண் தேவ உலகு.

தேவாலயத்துட் செல்லுதல்

70. விண்டிறந் துதைத்த பூசனை யன்றே விழிப்பதற் கருத்தியோ
[டுயர்வான்
கண்டிறந் தென்னக் கதிரவன்முந்நீர் கடிந்தெழுங் காலையி
[னினிதாய்
பண்டிறந் துவைப்ப வார்க்குநற் சுடர்செய் பசியபொற் கோயிலை
[விருப்பங்
கொண்டிறந் திருவர் கோதறு பலியாய்க் குழவியை யேந்தியெய்
[தினரே.

(ப-ரை) விண் திறம் துதைந்த பூசனை — தேவ உலகிற்கு ஏற்ற பூசையை; அன்று விழிப்பதற்கு அருத்தியோடு — அன்று பார்ப்பதற்கான விருப்பத்தோடு; உயர்வான் கண் திறந்து என்ன — உயர்ந்த தேவ உலகு கண்ணைத் திறந்தது போல; கதிரவன் முந்நீர் கடிந்து எழும் காலையில் — சூரியன் கடலை விட்டு மேலெழும் வேளையில்; இனிதாய் பண் திறம் துவைப்ப ஆர்க்கும் — இனிமையாக இசை வகைகளை அதற்குரிய கருவிகள் இசைத்து ஒலிக்கும்; நல் சுடர் செய் செம் பொற் கோயிலை — நல்ல ஒளி செய்கின்ற செவ்விய பொன் பதித்த தேவாலயத்தில்; விருப்பம் கொண்டிறந்து இருவர் — விருப்பம் கொண்ட இயல்புள்ள மேரியன்னையும் சூசையப்பரும்; கோது அறு பலி ஆய் குழவியை ஏந்தி எய்தினர் — குற்றம் அற்ற காணிக்கையாகத் திருக்குமாரரைக் கைகளிலே தாங்கிக் கொண்டு அடைந்தனர்.

(வி-ரை) அங்கு அன்று நடந்த பூசை மிக உயர்ந்தது என்பார் 'விண் திறம் துதைந்த பூசனை' என்றார். அதனைத் தேவ உலகு பார்ப்பதற்குக் கண்ணைத் திறந்தது போலச் சூரியன் தோன்றினான் என்பது தற்குறிப்பேற்ற அணி. 'கதிரவன் எழும் காலையில்' என்பதனால் பூசை காலை நேரத்தில் நடைபெற்றது. அவர்கள் ஆலயத்திற்குச் சென்ற போது இசைக்கருவிகள் பல ஒலித்தன. 'நற்சுடர் செய் பொற் கோயில்' என்பது கோயிலின் பெருமையை உணர்த்தும். விண்டிறம் = விண் + திறம். திறம் — தன்மை. பண்டிறம் = பண் + திறம். திறம் - வகை. துவைத்தல் — இசைத்தல். முந்நீர் - கடல். ஆற்றுநீர், மழைநீர், ஊற்று நீர் ஆகிய மூன்று நீர் உடையாய் வந்த காரணப் பெயர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. மேனிலா வெறிக்குங் குருமணி குயிற்றி விழுத்தக [நிரை நிரை திட்டிப்
பானிலா வெறிக்கும் பளிக்குயர் கோயில் பற்பல சாளர [விழிகள்
வானிலா வெறிக்கு மகவினை நோக்க மலர்ந்தபின் வம்மினென் [றழைப்பத்
தூனிலா வெறிக்கு மணிக்கத வகற்றிச் சுருதிவாய் [திறந்தவர் புக்கார்.

(ப-ரை) மேல் நிலா எறிக்கும் குருமணி குயிற்றி — மேலே ஒளியை வீசும் நிறமணிகள் பதித்து; விழுத்தக நிரை நிரை திட்டி — சிறந்ததான சித்திரங்களை நிரை நிரையாக எழுதி; பால் நிலா எறிக்கும் பளிக்கு கோயில் — பால் போலும் ஒளி வீசும் பளிங்கு உள்ள உயர்ந்த கோயில்; பற்பல சாளர விழிகள் — பலப்பல சாளரங்களாகிய விழிகளும்; வான் நிலா எறிக்கும் மகவினை நோக்க — மிக்க ஒளியை வீசும் திருக்குமாரரைப் பார்க்க; மலர்ந்தபின் வம்மின் என்று அழைப்ப — பார்த்தபின் வருக என அழைப்பதுபோல்; தூநிலா எறிக்கும் மணிக்கதவு அகற்றி — தூய ஒளியை வீசும் மணிகள் பதித்த கதவைத் திறந்து; சுருதிவாய் திறந்து அவர் புக்கார் — வேதத்தின் வாயைத் திறந்தது போல அவர்கள் உள்ளே புகுந்தனர்.

(வி-ரை) நிலா எறிக்கும் குருமணி குயிற்றியமை, விழுத்தகு ஓவியங்கள் நிரை நிரை திட்டியமை, நிலா எறிக்கும் பளிங்கு உடையதாதல் என்பன கோயிலின் சிறப்பு உணர்த்துவன. சாளரங்கள் கோயிலின் கண்களாக நோக்கின. கோயிலை வேதமாக உருவகித்தார். சுருதிவாய் — சுருதியின் வாய். சுருதி — வேதம்; வாய் — வாசல். சுருதியைத் தம் வாயிலே சொல்லி எனினுமாம். மேனிலை = மேல் + நிலை. பானிலா = பால் + நிலா. வானிலா = வான் + நிலா. நிலா — ஒளி. மகவு - திருக்குமாரர். குரு — நிறம். குயிற்றல் — பதித்தல்.

72. தேக்கிய புகையும் வாமத் தெருட்சியு மருளினோக்கிற்
காக்கிய விருந்தின் விம்ம வணிமணிக் கோயிற்புக்கு
விக்கிவ துவங்கட் கொன்று மெய்யனை வினையின் தீமை
போக்கிய பலியென் றுகப் போற்றிவைத் திருவர் நின்றார்.

(ப-ரை) தேக்கிய புகையும் — அவ்விருவரும் நிறைத்த நறும் புகையும்; வாமத் தெருட்சியும் — அங்கு உள்ள பலவகை அழகுகளின் தெளிந்த தன்மையும் அருளின் நோக்கிற்கு ஆக்கிய விருந்தின் விம்ம — அருளை விரும்பும் உணர்வுக்கு ஆக்கந்தரும் விருந்தாக மிக்கு விளங்க; அணிமணிக் கோயில் புக்கு — அழகிய மணிகளையுடைய கோயிலுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று: விக்கிய துவங்கட்கு ஒன்றாகும் மெய்யனை — வகுக்கப் பெற்ற மக்கள் தேவர் ஆகிய இருவகைத் தன்மைகளையும் ஒன்றாக்கிய பின் என்றாக — பாவச் செயல்களின் துன்பங்களை நீக்குதற்கு காணிக்கையாக; போற்றி வைத்து — துதித்துக் கொடுத்த: இருவர் நின்றார் — தந்தையும் தாயும் ஆகிய இருவரும் நின்றனர்.

(வி-ரை) அங்கு இட்ட தூபம் புகையும், உட்புறத் தெய்வ ஒளியும் அருளை விரும்பி அங்கு செல்பவர்க்குத் தெய்வ உணர்வை மிக்கு ஊட்டுவதாதலின் 'விருந்தின் விம்ம' என்றார். துவம் - இருவகைத் தன்மை. அவை மக்கள், தேவர் (இகம், பரம்). தேவகுமாரர் மனித உருவில் வந்தார் ஆதலின் 'துவங்கட்கு ஒன்றாகும் மெய்யன்' என்றார். உலக பாவங்களின் தீமை தீரப் பிறந்தவர் ஆதலின் 'வினையின் தீமை நீக்கப் பலியாக அவரை வைத்துத் தந்தையும் தாயும் துதித்தனர்' என்றார்.

ஆலயக் குரவர் வருதல்

73. வாய்மையோர் புகுங்கால் கோயில் வணக்குரி பணியில் [வைகுந்
தூய்மையோ ரனைவுட் கோட்டம் துறந்தனர் அவையின் [மூத்தோர்
மெய்ம்மையோ டுயர்ந்த வேத மேற்படர் கொழுகொம் [மன்னான்
சேய்மையோ னென்னும் வாய்ந்த சீர்கெழு முனியும் [வந்தான்.

(ப-ரை) வாய்மையோர் புகுங்கால் — உண்மை நெறியினராகிய அவர்கள் கோயிலினுட் சென்றபோது; கோயில் வணக்கு உரி பணியில் வைகும் தூய்மையோர் என — கோயிலை வணங்குதற்கு உரிய கடமையில் உள்ள தூயவர்கள் என; உட்கோட்டம் துறந்தனர் — மன அழுக்கு இல்லாத; அவையின் மூத்தோர் — குருமார் சபையின் மூத்த; மெய்ம்மைபோடு உயர்த்த வேதம் மேல் படர் கொழு கொம்பு அன்னான் — உண்மையினால் உயர்ந்த வேதம் மேலே தழைத்தற்கு உறுதுணையான; சேய்மையோன் என்னும் வாய்ந்த சீர்கெழு முனிவன் வந்தான் — சேய்மையோன் என்னும் பெயர் பொருந்திய குரவர் வந்தார்.

(வி-ரை) அவர்கள் கோயிலுட் சென்றபோது கோயிற்பணி செய்பவரும் மன அழுக்கற்ற குரவர் கூட்டத்திற்குத் தலைமையானவரும் வேதம் வளர்தற்குத் துணையானவருமான சேய்மையோன் என்னும் குரவன் வந்தான். புகுங்கால் — வினையெச்சம்; கால் — எதிர்கால வினையெச்ச விகுதி. உரிய என்பது உரி என நின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதமேற்படர் கொழுகொம்பு என்பதனால் அவன் பெருமை புலனாகிறது. கொழு - உரிய; உரிச்சொல். சிமையோன் வயதில் மிகமுதிர்ந்தவனும் திருக்குமாரர் பூவுலகில் பிறக்கும் வரை பூவுலகில் வாழ்வதற்கு ஆண்டவன் அருளைப் பெற்றவரும் ஆவர். (லூக்கா அதி. 2: 25-27)

74. வணங்கிய மரத்திற் காரீந்த வுயிர்வரு மாரி போன்று
இணங்கிய விருளைச் சீக்கு மிரவியே போன்று நாதன்
பிணங்கிய வினைக டீர்ப்பப் பிறந்திவண் மனுவாய்க்காண
வணங்கிய முனிவன் நாளும் வரந்தர வேண்டு வானே.

(ப-ரை) வணங்கிய மரத்திற்கு ஆர்ந்த உயிர்வரு மாரி போன்றும் — வாடிய மரத்திற்கு நிறைந்த உயிராக வருகின்ற மழையைப் போலவும்; இணங்கிய இருளைச் சீக்கும் இரவியே போன்றும் — மூடிய இருளை நீக்கும் சூரியனைப் போலவும்; பிணங்கிய வினைகள் தீர்ப்ப நமன் பிறந்து இவண் மனுவாய்க் காண வணங்கிய — உயிர்களைப் பற்றிய பாவங்களை நீக்கத் திருக்குமாரர் பிறந்து இங்கே மக்கள் உருவிலே கண்டு வணங்குதற்கு; வரந்தர நாளும் முனிவன் வேண்டுவான் — வரந்தரும்படி நாள்தோறும் சிமையோனாகிய குரவன் பிரார்த்தித்தான்.

(வி-ரை) உலகின் பாவங்களை நீக்க ஆண்டவன் மக்கள் உருவில் வரவேண்டுமென நாள் தோறும் அந்தேவாலயத்தில் சிமையோன் பிரார்த்தித்தான் என்க. பாவங்களுக்கு இருளும், உயிர்களுக்கு மரங்களும், ஆண்டவனுக்கு மழை சூரியன் ஆகியவைகளும் உவமைகள். வணங்குதல் — வாடுதல். பிணங்குதல் - மாறுபடல். வினைகடீர்ப்ப = வினைகள் + தீர்ப்ப. சீத்தல் — நீக்குதல்.

75. வம்பலர்ச் சுனையி னீருள் வலம்புரி பிறத்தல் போன்றும்
கொம்பலர் தருவி னுச்சி குவளையே பூத்தல் போன்றும்
அம்பலர்க் கன்னி விள்ளா தளித்ததோர் மகவாய் தாதற்
கம்பலர்க் கண்கள் பூப்பக் காண்டையென் றிறைவன் சொன்னான்.

(ப-ரை) வம்பு அலர் சுனையின் நீருள் வலம்புரி பிறத்தல் போன்றும் — வாசனையுள்ள பூக்கள் உள்ள குளத்து நீரிலே வலம்புரிச் சங்கு தோன்றுதல் போன்றும்; கொம்பு அலர் தருவின் உச்சி குவளையே பூத்தல் போன்றும் — கிளையுள்ள மரத்தின் நுனியிலே குவளை மலர் பூத்தல் போலவும்; அம்பு அலர் கன்னி விள்ளாது அளித்தது ஓர் மகவாய் — நீர்மலராகிய தாமரை போன்ற பெண் தம் கன்னிமை நீங்காது தந்த ஒப்பற்ற குழந்தையாக; தாதற்கு — திருக்குமாரனை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்பு அலர் கண்கள் பூப்பக் காண்மை என இறைவன் சொன்னான் — மலர் போன்ற கண்கள் மகிழும்படி காண்பாய் எனக் கடவுள் அறிவித்தார்.

(வி-ரை) நாதனை மனுவாய்க் காண நாளும் வேண்டிய சீமையோனுக்கு அவ்வாறு காண்பாய் என இறைவன் அறிவித்தார். கடலிற்குரிய வலம்புரி குளத்திலும், குளத்திற்குரிய குவளை மரத்திலும் தோன்றுதல் போலத் தேவ உலகிற்குரிய தேவகுமாரர் பூவுலகிற் தோன்றுவார் என்பதாம். தேவகுமாரருக்கு வலம்புரி குவளை என்பனவும், பூவுலகிற்குக் குளம் மரம் என்பனவும் தேவ உலகிற்குக் கடல் குளம் என்பனவும் உவமைகள். வம்பு — வாசனை. அலர் — மலர். தரு — மரம். அம்பு — நீர். அலர் — தாமரை. விள்ளல் — விரிதல். நாதற்கு — வேற்றுமை மயக்கம். காண்மை — முன்னிலை ஒருமை வினைமுற்று.

76. நம்பிய இன்ன வாய்மை நல்லுயி ராக நின்றான்
அம்பிய மலரின் சாயல் அவதரித் துதித்த நாதன்
கொம்பிய வினைகள் தீர்ப்பக் கோயிலைந் தடைந்தானென்ன
பம்பிய காட்சி தோன்றிப் பறந்தென வன்று வந்தான்.

(ப-ரை) நம்பிய இன்ன வாய்மை நல் உயிராக நின்றான் — நம்பிக்கைக்குரிய இத்தேவவாக்கைத் தன் நல்ல உயிராகப் போற்றி வாழ்ந்த சீமையோன் என்னும் குரவன்; அம்பிய மலரின் சாயல் அவதரித்து உதித்த நாதன் — தேனுள்ள மலரின் சாயலைப்போன்று பூவுலகில் வந்து பிறந்த தேவகுமாரர்; கொம்பிய வினைகள் தீர்ப்பக் கோயில் வந்து அடைந்தான் என்ன — உலகினைப் பற்றிய பாவங்கள் நீங்கும்படி தேவாலயத்திற்கு வந்தான் என்று; பம்பிய காட்சி தோன்றி பறந்து என அன்று வந்தான் — உயர்ந்த காட்சி உள்ளத்திலே தோன்றப் பறந்தாற்போல விரைந்து அவ்வேளை அங்கு வந்தான்.

(வி-ரை) அவர்கள் அங்கு வந்தமையைச் சீமையோன் தன் உள்ளக் காட்சியிலே கண்டு விரைந்து அவ்வேளை அங்கு வந்தான். தேவவாக்கைத் தன் உயிராகக் கொண்டவன் என அக்குரவனது பெருமையை உணர்த்தினார். தேவ வாக்கு என்றும் உண்மையாக நிலைத்தலின் அதனை 'வாய்மை' எனவும், தேவ வாக்கில் நம்பிக்கை கொண்டமையால் 'நல்லுயிர்' எனவும், விரைந்து வந்தானாதலின் 'பறந்தென வந்தான்' எனவும் கூறினார். கொம்பி — சனி; துன்பஞ் செய்வது. கொம்பிய — துன்பம் செய்கின்ற. பம்புதல் — பரத்தல் ஒலித்தல். பறந்தென — பறந்தது + என. என உவமை உருபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரவர் வணங்கி மகிழ்தல்

77. விண்டன மலர்போல் விண்ட விருப்பினன் வெய்தென்றெய்திக்
கண்டனன் கனிந்த கண்ணாற் கறவைகாண் கன்றின் வெஃகி
உண்டன வுருவிற் குன்றா வுயர்குணத் திறைவன்றாளைக்
கொண்டன தலையிற் சூடிக் குணக்கடற் குளித்துத்தாழ்ந்தான்:

(ப—ரை) விண்டன மலர்போல் விண்ட விருப்பினன் வெய்து என்று எய்திக் கண்டனன் — மலர்ந்த மலர்போல மலர்ந்த மகிழ்ச்சியுடன் மிக விரைந்து சென்று சிமையோன் அவர்களைக் கண்டான்; கனிந்த கண்ணால் கறவைகாண் கன்றின் எய்தி — அன்புடன் கூடிய கண்களால் தாய்ப்பசுவைக் கண்டு மகிழ்ந்து செல்லும் கன்றைப்போலச் சென்று; உண்டு ஆன உருவில் குன்றா உயர்குணத்து இறைவன் தாளை — உண்டாற்போன்ற விருப்பத்தோடு குறையாத உயர்ந்த இயல்புகளையுடைய தேவ குமாரரின் பாதங்களை; தலையிற் சூடி கொண்டு என — தலையிலே மலரைச் சூடிக்கொண்டாற் போல; குணகடற் குளித்துத் தாழ்ந்தான் — மகிழ்ச்சிக் கடலிற் திளைத்து வணங்கினான்.

(வி-ரை) சிமையோன் மிக்க பெருமகிழ்ச்சியுடன் திருக்குமாரரின் பாதங்களிற் தாழ்ந்து வணங்கினான். தேவகுமாரருக்குத் தாய்ப்பசுவும் சிமையோனுக்குக் கன்றும் உவமைகள். சிமையோனது உள்ளத்திற்கு மலர் உவமை. விரைந்துசென்று வணங்கினான் என்பார். 'வெய்தென் றெய்தி' எனவும், அவனது விருப்பத்தை 'மலர்போல் - விண்ட விருப்பு' எனவும், மலரைப்போலப் பாதங்களைச் சூடினான் என்பார், 'தலையிற் சூடி' எனவும், மிக்க மகிழ்ச்சி கொண்டமையைக் 'குணகடற் குளித்து' எனவும் கூறினார். விள்ளல் — விரிதல். விண்ட என்பதன் பகுதி 'விள்', உண்டு ஆன் — உண்டாற்போன்ற. மிக்க ஆர்வத்தை இஃது உணர்த்திற்று.

78. தொழுதுன்னு ளத்தின் பாற்றாத் துணையடி மலரையேற்றி
யழுதுதன் கண்ணீ ராட்டி யருட்கொழுந் துகிலினீவி
முழுதுதன் கண்கட் கையான் முகக்கவின் முகந்துண்டார்வத்
திழுதுதன் சுவையிற் காய்த்த விருங்கனி சுவைத்துவிள்ளான்.

(ப—ரை) தொழு துன் உளத்து இன்பு ஆற்றா துணை அடி மலரை ஏற்றி — தொழுது நெருங்கிய உள்ளத்திலே மகிழ்ச்சியைத் தடுக்கமுடியாமையால் இரு பாத மலர்களைத் துதித்து; அழுது தன் கண்ணீர் ஆட்டி — ஆனந்த அழுகையுற்றுக் கண்ணீராற் பாதங்களைக் கழுவி; அருள் கொழும் துகிலின் நீவி — அருளாகிய நிறைந்த ஆடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறும்பல நீரைத் துடைத்து; முழுதுதன் கண்கள் கையால் முகக் கவின் முகந்து உண்டு — முழுமையாகக் குளிர்ந்த தன் கண்களாகிய கைகளினால் அவரின் முக அழகை நிறையப் பருகி; ஆர்வத்து இழுது தன் சுவையில் காய்த்த — ஆர்வமாகிய சாறு உள்ள சுவையுடன் காய்த்த; இரும் கனி சுவைத்து வின்னான் — பெரிய பழத்தைச் சுவைத்து நீங்கான் ஆயினான்.

(வி-ரை) சிமையோன் தன் உள்மகிழ்வினால் ஆனந்தக் கண்ணீர் விட்டுத் திருக்குமாரரின் பாதங்களைக் கழுவி அருளாகிய ஆடையினால் துடைத்துக் கண்களால் அவரின் தேவ அழகைப் பருகி நீங்காமல் நின்றான். அடிகளை மலர்களாகவும், ஆடையை அருளாகவும், கண்களைக் கைகளாகவும் கூறினார். துணையடி மலர், கண்கட்கை என்பன உருவகங்கள். இழுது — நெய்; சாறு. வின்னல் — நீங்குதல், நீவுதல் — துடைத்தல், கண்கட்கையான் = கண்கள் + கையான்.

குரவர் துதிபாடல்

79. பாருடம் புயிராய் வந்த பரமனைக் கரத்தி லேந்தி
யீருடம் புயிரொன் றாக வெழுந்தவன் புவப்பிற் பொங்கிச்
சேருடம் பிரண்டொன் றாகச் சேர்த்துத் தழுவி யன்பின்
நேருடம் பெழீஇவீ டுற்ற நிலைமையிற் பாட லுற்றான்.

(ப-ரை) பார் உடம்பு உயிராய் வந்த பரமனைக் கரத்தில் ஏந்தி — பூவுலகில் மக்கள் உடலிலே தேவ உயிரைத் தாங்கி வந்த திருக்குமாரரைச் சிமையோன் தன் கைகளிலே தாங்கி; ஈர் உடம்பு உயிர் ஒன்றாக எழுந்த அன்பு உவப்பிற் பொங்கி — இரு உடல்களும் உயிர் ஒன்றுமாக வந்த அன்பு மகிழ்ச்சியால் மிக்கு; சேர் உடம்பு ஒன்றாக சேர்த்து தழுவி — பொருந்திய இரு உடம்புகளும் ஒன்றாகச் சேர்த்து அணைத்து; அன்பின் நேர் உடம்பு எழீஇ வீடு உற்ற நிலைமையில் — அன்பொடு பொருந்திய உடல் வீடு பெற்றுத் போன்ற நிலையில்; பாடல் உற்றான் — பாட ஆரம்பித்தான்.

(வி-ரை) சிமையோன் திருக்குமாரரைத் தம் கைகளில் ஏந்தி மிக்க பேரன்புடன் தேவ உலகை அடைந்த உணர்வுடன் துதிப்பாடல் களைப் பாடினான். சிமையோன் திருக்குமாரரைக் கைகளில் ஏந்தியதும் உணர்வுமிக்குத் தேவனுடன் ஒன்றானான் என்பார் 'ஈருடம்பு உயிரொன் றாக எழுந்த அன்பு உவப்பிற் பொங்கி' எனவும், தம் சுய உணர்வு அற்றுத் தேவ உணர்வு பெற்றார் என்பார் 'வீடுற்ற நிலைமையில்' எனவும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. பாற்கடலென் னுள்ளப் பதுமமல ரரும்ப
நூற்கடலே யீங்குதித்தாய் நும்மலர்க்கண் முத்தரும்ப
நும்மலர்க்கண் முத்தரும்ப நோய் செய் வினை செய்தேம்
எம்மலர்க்கண் முத்தரும்ப வின்றுவினை தீர்த்தாய்.

(ப - ரை) பாற்கடல் என் உள்ளப் பதும மலர் அரும்ப - பாற்கடலில் மலர்ந்தது போல என் உள்ளம் ஆகிய தாமரை மலர் மலரும்படி; நூற்கடலே நும் மலர்க்கண் முத்து அரும்ப ஈங்கு உதித்தாய் - மறைநூல் முதலியவைகளை அடக்கிய கடல் போன்றவரே! மலர்போலும் உமது கண்களிலே முத்துப்போன்று கண்ணீர் துளிர்க்கும்படி இங்கே வந்தீர்; நும் மலர்க்கண் முத்து அரும்ப நோய் வினை செய்து - உமது மலர்போலும் கண்கள் முத்துப்போல நீர் துளிர்க்கத் துன்பம் செய்யும் பாவங்களைச் செய்தேம்; எம் மலர்க்கண் முல்லை அரும்ப இன்றி வினை தீர்த்தாய் - எங்கள் கண்களிலே முத்துப்போல நீர் வர இன்று எங்களின் பாவங்களை நீக்கினீர்.

(வி - ரை) தேவாலயத்தைப் பாற்கடலாகவும் தமது உள்ளத்தைப் பதும மலராகவும், கண்களை மலராகவும், கண்ணீர்த்துளிகளை முத்துகளாகவும் உருவகித்தார். உலகத்துள்ளவர் பாவங்களைச் செய்வதையிட்டு ஆண்டவன் இரங்குகின்றார் என்பார் 'நும்மலர்க்கண் முத்தரும்ப' எனவும், தேவகுமாரர் மனிதர் மனித உருவில் வந்து மனிதரின் பாவங்களை நீக்குவதனுல் மனிதர் ஆனந்தமடைகின்றனர் என்பார் 'எம்மலர்க்கண் முத்தரும்ப' எனவும் கூறினர். திருக்குமாரர் அவதாரத்தினுல் வேதம் முதலிய நூல்கள் விளக்கமுற்றன ஆதலின் 'நூற்கடலே' என உருவகத்தார். இச்செய்யுள் சொற்பின்வருநிலையணி.

81. வினைதீர்ப்ப வெய்தி வினைகொண்டாய் பாவப்
புனை தீர்ப்ப வீங்குமனுப் பூட்சிச் சிறை கொண்டாய்
பூட்சிச் சிறைகொண்ட புல்லென்னுயிர் போயுன்
காட்சிச் சிறை கொண்டு கண்டேன்கதி நிலையே

(ப - ரை) வினை தீர்ப்ப எய்தி வினைகொண்டாய் - பாவங்களை நீக்குவதற்காக வந்து நீ துன்பங்களை ஏற்கிருய்; பாவப்புனை தீர்ப்ப ஈங்கு மனுப்பூட்சி சிறைகொண்டாய் - என்பாவ விலங்குகளை நீக்குவதற்காக மனித உருவத்தைச் சிறையாக ஏற்ருய்; பூட்சிச் சிறை கொண்ட புல் என் உயிர் போய் - மனித உடலைச் சிறையாகக் கொண்ட புல்லிய என் உயிரும் சென்று; உன் காட்சிச்சிறை கொண்டு கதிநிலையே கண்டேன் - உமது தேவக் காட்சியைச் சிறகாகக்கொண்டு பரமண்டல நிலையைக் கண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி - ரை) தன் பாவங்களை நீக்கத் தேவகுமாரர் அங்கு வந்தார் எனவும் அவரைத் தரிசித்ததனால் தனக்கு உயர்ந்த தேவநிலை கிடைத்தது எனவும் தன்னை பாவத்தினின்றும் நீக்குதற்காகத் தன் பாவங்களை அவர் ஏற்றார் எனவும், மனித உடல் அவருக்கு ஒரு சிறை எனவும் கூறினர். பூட்சி - உடல். சிறை - 1. மறியல் 2. சிறகு. கதி - மோட்சம். புலை - விலங்கு; குளை. புல்லென் - இழிந்த. பாவப் புலை என்பது உருவகம்.

82. கண்டேன் கதிநிலையே கண்டுயிரென் பூண்பவினி
யுண்டே னுயிராவன் புன்னடியைச் சூடினேன்
உன்னடியைச் சூடி டனையணுகான் றன்வினையே
தன்னடியை சூழ்ந்துதைப்ப சுட்டெரி வீழ்ந்தாழ்வானே.

(வி - ரை) கதிநிலையேகண்டேன் - உன்னைக்கண்டதால் பரமண்டல நிலையைக் கண்டேன்; கண்டு உயிர் இனி என் பூண்ப - கண்டபின் என் உயிர் இனி ஏன் இங்கு தங்குகிறது; அன்பு உயிராய் உண்டேன்; உமது அன்பை உயிராக உண்டேன்; உன் அடியைச் சூடினேன் - உமது பாதங்களை என் தலையிலே அணிந்தேன்; உன் அடியைச் சூடி - உனது பாதங்களைத் தன் தலையிலே அணிந்து; உனை அணுகான் - உம்மை அணுகாதவன்; தன் அடியைச் சூழ்ந்து உதைப்ப - அவனது பாவமே அவனைச் சூழ்ந்து வருத்த; சுட்டு எரி வீழ்ந்து ஆழ்வான் - எரியுண்டு எரியுள் விழ்ந்து வருந்துவான்.

(வி - ரை) உம்மை அடைந்து உமது பாதங்களைத் தலையிலே சூடாதவன் அவனது பாவமே அவனைச் சூழ்ந்து வருத்தப் பாவ உலகிலே வீழ்ந்து துன்புறுவான் எனச் சிமையோன் கூறினன். பூண்ப - செய்யும். என் என்பது வினாப்பொருளில் வந்து இனி எதுவும் வேண்டுவதில்லை என்னும் விடையைத் தந்தது. அணுகான் - வினையாலணையும் பெயர். சூழ்ந்துதைப்ப = சூழ்ந்து + உதைப்ப.

83. ஆசையெழு மின்னவை யருந்தவனும் பாடி
யோசையெழும் வீணைகுழல் யாழொடிசை பாடப்
பூசையெழும் பூப்புகை பொலிந்தினி திறை
மாசையெழு மாலயமும் வானுலகு போலாம்

(ப - ரை) ஆசை எழும் இன்னவை அருந்தவனும் பாடி - ஆசையோடு எழுகின்ற இவைகளை அரிய தவத்தினையுடைய சிமையோன் சொல்லித் துதித்து ஓசை எழும் வீணைகுழல் யாழ் ஆகியவைகளோடு துதிகளைப் பாட; பூசை எழும் பூப்புகை பொலிந்து இனிதின் நாற - பூசையின்போது எழுகின்ற பொலிவாகிய நறும்புகை நிறைந்து இனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக மணம்வீச; மாசை எழும் ஆலயமும் வான் உலகு போலாம் - பொன்னொளி வீசும் தேவாலயமும் தேவ உலகைப் போன்றதாயது.

(வி - ரை) தேவ குமாரரின் பெருமைகளைப் பற்றிய துதிப் பாடல்களை இசைக்கருவிகளுடன் சிமையோன் பாடினன். துதிப்பாடல்களும், பூசையின் நறும் புகையும், பொன்னொளியும் அத்தேவாலயத்தைத் தேவ உலகாக ஆக்கின. அருந்தவன் - சிமையோன், பூசையெழும் – ஏழாம் வேற்றுமைத் தொகை. மாசை – பொன். இனிதினாற = இனிதின் + நாற. நாறுதல் – மணம் வீசல்.

யாவருந் துதித்தல்

84. கொங்கடரும் பூமழையும் பாமழையுங் கூர்ப்பச்
சங்கடரும் வாய்த்தரள வெண்குடைக டாங்கத்
திங்கடருந் திங்கதிரின் சேர்கவரி பொங்க
வங்கடரும் யாவரும் அருச்சனையின் மிக்கார்.

(ப-ரை) கொங்கு அடரும் பூமழையும் — வாசனை நிறையும் பூக்களின் மழையும்; பாமழையும் கூர்ப்ப — பாக்களின் மழையும் மிகுதியாக; சங்கு வாய் அடரும் தரள வெண்குடைகள் தாங்க — சங்குகளின் நிறைந்த முத்துகள் பொருந்திய வெண்ணிறக் குடைகளைப் பிடிக்க; திங்கள் தரும் திம்கதிரின் சேர் கவரி பொங்க — சந்திரன் தரும் இனிய கதிர்களைப்போதப் பொருந்திய சாமரை வீச: அங்கு அடரும் யாவரும் அருச்சனையின் மிக்கார் — அங்கே நெருக்கமாக வரும் அனைவரும் துதித்தலைச் செய்தனர்.

(வி-ரை) சிமையோன் தேவகுமாரருக்காகப் பூசையைச் செய்தபோது பலர் பூக்களைச் சொரிந்தனர்; பலர் பாக்களைப் பாடினர்; சிலர் சாமரை வீசினர்; சிலர் வெண்குடையைத் தாங்கினர்; ஏனைய அனைவரும் அருச்சனை செய்தனர். பூக்களினதும் பாக்களினதும் மிகுதியால் அவைகளை முறையே பூமழை, பாமழை என உருவகித்தார். கவரிக்குத் திங்களின் கதிர்களும், குடைக்குத் தரளமும் உவமைகள். கூர்ப்பு — மிகுதி; அருச்சனை — இறைவனின் திருப்பெயர்களைச் சொல்லிப் பூக்களை இட்டு வணங்குதல். கொங்கடரும் = கொங்கு + அடரும். கொங்கு — நறுமணம்.

85. ஒருவரடி பேற்றிமல ரோன்னொளியல் சூட
ஒருவரகி லோடுமல குறுபுகை காட்ட
ஒருவர்புக ழுந்தொடை யுணர்ந்திசை பாட
ஒருவர் வியப் போடுருக வாழுவ ரொருங்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப-ரை) ஒருவர் அடி ஏத்தி மலர் ஒன் ஒலியல் சூட—ஒப்பற்ற ஏகத் தலைவராகிய தேவனது பாதங்களைத் துதித்து மலர்களால் ஆன அழகிய மாலைகளைச் சூடவும்; ஒருவர் அகிலோடும் அலர் உற புகை காட்ட — ஏகனுகிய தேவனை அகிற்புகையுடன் பூம்புகையும் காட்டவும்; ஒருவர் புகழுந் தொடை உணர்ந்த இசை பாட — தேவனைப் புகழ்ந்து பாடல்களை இசையுடன் பாடவும்; ஒருவர் வியப் போடு உருக — தேவனைப் பக்தியுடன் நினைந்து துதிக்கவும்; ஒருங்கே வாழுவர் — நிறைவுடன் வாழுவர்.

(வி-ரை) தேவனுக்கு மாலை சூடுவோரும், நறும்புகை காட்டு வோரும், இசை பாடுவோரும், அன்புசெய்வோரும் ஒருங்கு வாழ்வர் என்பதாம். சூட, பாட, காட்ட, உருக என்னும் செயவென் எச் சங்கள் காரணப் பொருளில் வந்தன. ஒலியல் — மாலை, தொடை — பா.

86. வான்றவழு மீன்கதிரன் பூத்ததெனை மல்கி
காண்வழு மாலையொடு கன்மணிகள் கண்பூத்
தூன்றவழும் யாக்கையுடை நாயகனை நோக்க
மீன்றவழும் வெண்மதியின் மெய்யனுரு மிக்கான்

(ப-ரை) வான் தவழும் மீன்கள் திரள் பூத்தது என மல்கி — ஆகாயத்தில் உள்ள விண்மீன் பூத்தமையைப் போல நிறைந்து; கான்தவழு மாலையொடு கன்மணிகள் கண்பூத்து — வாசனை உள்ள பூமாலைகளும் மணிவகைகளும் கண்களைத் திறந்து; ஊன்தவழும் யாக் கையுடை நாயகனை நோக்க — தசை பொருந்திய உடலைப் பொருந் திய தேவகுமாரனைப்பார்க்க; மீன்தவழும் வெண்மதியின் மெய்யன் உருமிக்கான் — விண்மீன்களினூற் சூழப்பெற்ற திங்களைப்போலத் திருக்குமாரர் அழகுடன் விளங்கினார்.

(வி-ரை) தேவாலயத்து மாலைகளும் மணிகளும் விண் மீன்களைப் போல விளங்கத் தேவகுமாரர் திங்களைப்போல அழகுடன் விளங்கி னார். மீன்கதிரன் = மீன்கள் + திரள், கான் - வாசனை. கன்மணி = கல் + மணி; இருபெயரொட்டுப் பண்புத் தொகை; தொழிற் பெயர். கண்பூத் தூன்ற = கண் பூத்து + ஊன்ற. யாக்கை — உடல். மதியின் — இன் ஒப்புப் பொருளில் வந்தது.

87. தும்மிய பொறிச்சுடர் துறைந்தெரிவு செந்தீ
விம்மிய விருட்புகை விளைத்தநர வெய்தாப்
பம்மிய வினைப்பகை பரிந்துயிர்கள் காம்பப்
பொம்மிய துயர்க்கிறைவ பொன்றுவையொ வென்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப-ரை) தும்மிய பொறிச்சுடர் துதைந்து எரிய — வெளிப்பட்ட பொறிகளும் சுடர்களும் நிறையும்படி எரிகின்ற; செந்தீ விம்மிய இருட்புகை விளைத்த — சிவந்த நெருப்பானது தந்த இருளும் புகையும் நிறைந்த; நரகு எய்தா — நரகத்தை எய்தாதபடி; பம்மிய வினைப் பகை பரிந்து உயிர்கள் காப்ப — பொருந்திய பாவப் பகைமைக்கு இரங்கி, உயிர் களைக்காத்தற்காக; பொம்மிய துயர்க்கு இறைவன் பொன்றல கொல் என்பார் — மிக்க துயரை இறைவன் தாங்குகின்றாரே என்று சிலர் கூறினர்.

(வி-ரை) மனுக்குலத்தின் துன்பங்களை நீக்குவதற்காகத் தேவன் துன்பங்களைத் தாங்குகின்றாரே என இரங்கிச் சிலர் கூறினர். தும்முதல் — வெளிப்படல், விம்முதல் — மிகுதல், இருட்புகை — உம்மைத் தொகை, பொம்முதல் — பொலிதல், பம்முதல் — பரவுதல். ஒன்றுதல் — பொருந்துதல். கொல் — வினாப்பொருளில் வந்த இடைச் சொல். துயர்க்குறைவின் — வேற்றுமை மயக்கம்.

88. தீய்வினைசெய் நாமகிழ வும்பர்தொழு செல்வா
நீய்வினைசெய் மெய்க்கொடு நிலத்திலுல வாயோ
வீய்வினைசெய் மெய்யுளைய விண்ணிலெமை யுய்க்கும்
தாய்வினைசெய் யுன்றனையை யாரறிவ ரென்பார்.

(ப-ரை) உம்பர் தொழு செல்வா — தேவர்கள் வணங்குகின்ற செல்வனே; தீய்வினைசெய் நாமகிழ — தீய பாவங்களைச் செய்கின்ற மனிதராகிய நாம் மகிழும்படி; நீய்வினைசெய் மெய் கொடு நிலத் தில் உலவாயோ — நீ துன்பத்தைத் தருகின்ற மனித உருவத்தைக் கொண்டு பூவுலகில் உலாவ விரும்பினாயே; வீய் வினைசெய் மெய் உளைய—தீமை தரும் பாபங்களைச் செய்யும் உடலை எடுத்து வருந்தி; விண்ணில் எமை உய்க்கும் — தேவ உலகில் மனிதராகிய எங்களை வாழும் படி செய்யும்; தாய் வினை செய் உன் தனையை யார் அறிவார் — தாய்போலும் தன்மையுள்ள உமது கருணையை மனிதர் யாரே அறி வார்? அறியார்; என்பார் — எனச் சிலர் கூறினர்.

(வி-ரை) மனிதரை விண்ணில் வாழச்செய்தற்காகத் துன்பந் தரும் மனித உடலுடன் வந்திருக்கின்றீர்; தாயனைய உமது கருணையை மனிதர் அறியார்' எனச் சிலர் அவரைத் துதித்தனர். தீய்தல் — கெடுதல், நீய் — நீ; எதுகை நோக்கி யகரமெய் பெற்றது; வீய்தல் — அழிதல்; உளைதல் — வருத்துதல். மெய் — உடல்; வினை— (1) தொழில், (2) துன்பம் (3) பாவம் (4) தன்மை. 'தீய்வினை செய் நாமகிழ ......நீய்வினை செய் மெய்கொடு' என்பது பரிவர்த்தனை அணி பரிவர்த்தனை — ஒன்றைக் கொடுத்து இன்னொன்றை வாங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. தீயவமை தீயரெரி சென்றெரிவ ரென்றாற்
காயவமை யோர்குறைநின் கண்ணமைவ துண்டோ
தூயவமை வீட்டிவகை தோய்ந்தமனு வாழ்தல்
ஆயவமை திக்குநயன் யாதுநினக் கென்பார்.

(ப-ரை) தீய அமை தீயர் எரி சென்று எரிவர் என்றால் — தீயவை அமைந்த தீயோர் பாவ உலகிற் சென்று எரிந்து துன்புறுவர் ஆயின்; காய அமை ஓர் குறை நின் கண் அமைவது உண்டோ — வருந்துதல் அமைந்த ஒரு குறைவு உம்மிடத்தில் வந்து சேருமோ? இல்லையே; தூய அமை வீட்டு வகை தோய்ந்த மனு வாழ்தல் ஆய — தூய்மை அமைந்த வீட்டு நெறிக்கு உரியராய் மனிதர் வாழ்தல் ஆகிய; அமைதிக்கு நயன் நினக்கு யாது என்பார் — அந்நிலையினும் உமக்கு நன்மை உண்டா இல்லையே எனச் சிலர் துதித்தனர்.

(வி-ரை) தீயவர் நரகத்திற் சென்று துன்பம் பெறுதலும், தூயோர் தேவ உலகைப் பெற்று இன்புறலும் முறையே. உமக்குக் குறைவும் இல்லை, நிறைவும் இல்லை. ஆகவே தீயவர்களுக்காகவும் தூயவர்களுக்காகவும் எதுவும் செய்ய வேண்டியதில்லை என்பதாம். இவ்வாறு கூறியமை தேவகுமாரரின் அளவிடற்கரிய கருணையைப் புலப்படுத்தற்காக ஆகும். அமைதல் — பொருந்துதல், எரி — பாவ உலகு. மனு — மனுக்குலம். நயன் — பயன்.

90. வெவ்வினை யறுத்துயிர் விளைத்த கனியாக
வுய்வ்வினை யெமக்கருள வுற்றன பிரானை
யெவ்வினை யுமற்றமுறை யின்றவ ருடாயே
மைவ்வினை யைநாங்கழிய வாழிநனி யென்பார்.

(பதை) வெவ் வினை அறுத்து உயிர் விளைத்த கனியாக — கொடிய பாவத்தை நீக்கி உயிருக்கு நன்மை உண்டாகும்படி கனியைப் போல; உய்வினை எமக்கு அருள உற்ற பிரானை — உய்வதற்காய நல்வினையை மனிதராகிய எங்களுக்குத் தருதற்குத் தோன்றிய தேவகுமாரனை; எவ் வினையும் அற்ற முறை பெற்ற அருட் தாயே — எந்த மனித செயலும் இல்லாதவகையாகத் தேவகுமாரரைத் தந்த அருளால் மிக்க அன்னையே; மை வினையை நாம் கழிய நனி வாழி என்பார் — பாப வினைகளை நாங்கள் நீங்கும் உலகிலே என்றும் நிலை பெற்று வாழ்வீராக எனச் சிலர் துதித்தனர்.

(வி-ரை) தேவகுமாரனை மகனாகப் பெற்றுப் பூவுலகிற்குத் தந்த மேரி அம்மையாரை அவர்கள் வாழ்த்தினர். தேவகுமாரர் தாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவே மேரி அம்மையாரிடம் மகவாகத் தோன்றினர் என்பதை உணர்த்தினர். வெவ்வினை = வெம்மை + வினை; வெவ் — கொடிய. உய்வு — உய்தல்; தொழிற்பெயர். எதுகை நோக்கி வகரம்பெற்றது; விரித்தல் விகாரம். மை — குற்றம்; ஆகுபெயர். 'வாழிநனி' என வாழ்த்துதல் வாழ்த்தணி.

91. ஆரணமெழுந்துபடர் கொம்பனை யமார்ப
காரணனோர் மைந்தனை வளர்த்திடு கைத்தாதைப்
பூரணவ ரத்தமரர் நிற்புக ழின்ப
வாரணம மிழ்ந்தினி வாழிநெ டிதென்பார்.

(ப-ரை) ஆரணம் எழுந்துபடர் கொம்பு அனைய மார்ப — வேதநூல் வளர்ந்து படர்தற்குக் கொழு கொம்பு போன்ற மார்பையுடைய சூசையப்பரே; காரணன் ஓர் மைந்தனை வளர்த்திடு கைத்தாதை — எல்லா உலகிற்கும் காரணனான தேவகுமாரரை மகனாகப் பெற்று வளர்க்கின்ற தந்தையாகிய; பூரண வரத்து அமரர் நிற் புகழ — பூரணமான உயர்ந்த வரத்தின் காரணமாகத் தேவர்கள் உன்னைத் துதிக்க; இன்ப வாரணம் அமிழ்ந்தி நெடிது வாழி என்பார் — இன்பமாகிய கடலில் இருந்து நெடுங்காலம் வாழ்வாயாக எனச் சூசையப்பரைச் சிலர் துதித்தனர்.

(வி-ரை) தேவகுமாரரை மகனாகப் பெற்றுப் பூவுலகிற்குத் தந்த சூசையப்பரைச் சிலர் வாழ்த்தித் துதித்தனர். ஆரணம் — வேதம், சூசையப்பருக்குக் கொழுகொம்பும், வேதத்திற்குக் கொடியும் உவமைகள். மார்பு — உள்ளம்; ஆகுபெயர். ஓர் — ஒப்பற்ற; ஒருவன். எல்லாவுலகங்களும் தோன்றி நிலைத்து வாழ்தல் தேவகுமாரரின் கருணையேயாம் என்னும் உண்மையைக் 'காரணன் ஓர் மைந்தன்' என்பதனால் உணர்த்தினர். கைத்தாதை — வளர்ப்புத்தந்தை, கை — சிறிய, வாரணம் — கடல்.

குரவர் நிகழவிருப்பன கூறுதல்

92. ஏமஞ்சா லின்பத் தங்க ணின்னவை யாகி மூத்தோன்
சேமஞ்சால் வரங்கண் மிக்குத் தெளிந்த முப்பொழுதுத்தாவி
வாமஞ்சாலை காட்டி வாய்ந்த வரும்பொரு ளுணர்த்தித் தாயுஞ்
சோமஞ்சால் கொடிவல் லோனுந் துயருறச் சொற்றினனே

(ப-ரை) ஏமம் சால் இன்பத்து அங்கண் இன்னவை ஆகி — களிப்பு மிக்க மகிழ்வுடன் அத்தேவாலயத்தில் மேற்கூறியவை நிகழ்ந்த போது; மூத்தோன் - வயதினாலும் தெய்வக்காட்சியினாலும் முதுமை

பெற்ற சீமையோன்; சேமஞ் சால் வரங்கள் மிக்கு - நல்வாழ்வுக்கு உரிய வரங்களினுல் மிகுந்து; தெளிந்த முப்பொழுதுந் தானி - தெளிவான முக்காலத்தையும் கடந்து; வாமஞ்சால் காட்டி—தெளிந்த அறிவொளியின் மிகுதியினுல்; வாய்ந்த வரும் பொருள் உணர்த்தி — பொருந்திய நிகழ்ச்சிகளைக் குறியிட்டு; தாயும் சேமம் சால் கொடி வல்லோனும் துயர் உறச் சொற்றினுன் - மேரியன்னையும் மிக்க கொடியையுடைய சூசையப்பரும் கவலையடையும்படி கூறினுன்.

(வி - ரை) முதியோனுன சீமையோன் தான்பெற்ற அனுபவக் காட்சியின் பேறுகத் திருக்குமாரருக்கு வருங்காலத்தில் நிகழ இருப்பனவற்றை அவரது தாயும் தந்தையும் கவலையடையும்படி கூறினுன். ஓமம் - களிப்பு. சேமம் - நல்திறியம். முப்பொழுது - நிகழ்வு. இறப்பு. எதிர்வு. வாமம் - ஒளி. சோமம் - தேன். சொற்றினுன் = சொல் + த் + இன் + ஆன்.

93. திருக்கிள ரின்ன தோன்றல் சிலர்க்குயிர் சிலர்க்குக் கேடாய்ச்
செருக்கிளர் பகைவ ரேவுஞ் சிலைக்கணைக் குறியென் றாவான்
உருக்கிளர் நெஞ்சம் போழ்தற் குறுகண் வாளுருவப் பாய்ந்து
தருக்கிளர் தரும தாயே தளர்ந்திடர் குளிப்பா யென்றான்.

(ப-ரை) திருக்கிளர் இன்ன தோன்றல் சிலருக்கு உயிர் - தேவகருணை நிறைந்த திருக்குமாரர் சிலருக்கு நன்மையாக இருப்பார்; சிலர்க்கு கேடாய் - சிலருக்குத் தீமையாக இருப்பார்; செருக்கிளர் பகைவர் ஏவும் - எதிர்ப்பும் உள்ள பகைவர் ஏவுகின்ற சிலைக்கணைக்குறி என்று ஆவான் - வெறுப்பான அம்புகளுக்கு இலக்காக இருப்பார்; தருக்கிலர் தருமதாயே உருகிளர் நெஞ்சம் போழ்தற்கு உறுகண்வாள் உருவப் பாய்ந்து - அறிவுமிக்க தரும உருவான அன்னையே! உருவுடைய மார்பைப் பிளப்பதுபோலத் துன்பவாள் நீ அஞ்சும்படி பாய; தளர்ந்து இடர் குளிப்பாய் என்றான் - வருந்தித் துன்புறுவாய் என்று கூறினுன்.

(வி - ரை) திருக்குமாரர் சிலருக்கு நன்மையாயும் சிலருக்குத் தீமையாயும் இருப்பார். இதனுல் பகைவரது தீமைகளுக்கு ஆளாவர். அதனுல் நீ துன்புறுவாய் எனச் சீமையோன் மேரி அம்மைக்குக் கூறினுன். திரு - அருட் செல்வம். கிளர்தல் - மிகுதல். 'சிலர்க்கு உயிர்' 'சிலர்க்குக் கேடாய்' என்னும் எச்சத்தும் 'ஆவர்' என்னும் பயனிலை தொக்கது. செரு - எதிர்ப்பு. உரு - அழகு. உறுகண் - துன்பம்.

94. என்றனன் கடுஞ்சொல் வளைவா விருசெவி மூதலீர்த் தங்கண்
நின்றனை விழுவர் நோக நிலத்திலெம் விலேய மூர்ப்பத்
சென்றனை நாதன் றன்றாய் செம்புனத் திந்தி மானவான்
பின்றென வுளத்தி லோர்ந்தார் பிணைநீண் புணரி தாழ்ந்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ப - ரை) என்று அன கடுஞ்சொல் வாளால் இரு செவி முதல் ஈர்த்து - என்று இவ்வாறு சிமையோன் சொன்ன துன்பமான சொற்கள் வாள்களாக இரு காதுகளினூடாக உயிர்களை வருத்தி; ஆங்கண் இருவர் நோக நின்றன - அங்கே மேரி சூசை ஆகிய இருவரும் வருந்தும்படி செய்தன; நிலத்தில் எம் வினைகள் தீர்ப்ப சென்று அன நாதன் - பூவுலகில் மனிதராகிய எங்கள் பாவங்கள் நீங்கும்படி தோன்றிய திருக்குமாரர்; பின்று தன் தூய் செம்புனல் சிந்தி மாள்வான் - பின்பு தனது தூய செவ்விய குருதியைச் சிந்தி மரிப்பார் என - என்று சிமையோன் சொல்ல; உளத்தில் ஓர்ந்து பிடை நீள் புணரி தாழ்ந்தார் - தம் உள்ளங்களில் இவைகளை எண்ணித் துன்பம் ஆகிய நீண்ட சமுத்திரத்தில் ஆழ்ந்தனர்.

(வி - ரை) பூவுலக மனிதரின் பாவங்களை நீக்க வந்த திருக்குமாரர் குருதி சிந்தி மரிப்பார் எனச் சிமையோன் கூறினன். அதனைக் கேட்டு மேரியும் சூசையப்பரும் துன்பக்கடலில் ஆழ்ந்தனர். கடுஞ்சொல்வாள், பிடை நீள்புணரி என்பன உருவகங்கள். உயிரின் முக்கியத்துவத்தினுல் அதனை 'முதல்' என்றார். அன்ன என்பது அன எனத் தொக்கது. ஓர்ந்தார் என்பதன் விகுதியைத் தாழ்ந்து என்பதனுடன் கூட்டுக.

95. நூனிலக் காட்சி மூத்தோன் நுதலியாங் குரைத்த சொல்லை
தேனில முகையி னின்ற திருநர தேவன் கேட்டுக்
கானில முகையின் டன்ன கனிந்தபுன் முறுவல் கொட்டி
மீனிலஞ் சென்னி சாய்த்து விழைந்ததற் கமைந்தான் மன்றே.

(ப - ரை) நூல் நிலம் காட்சி மூத்தோன் - நூல்களுக்கு நிலமாகிய காட்சியையுடைய முதியோனான சிமையோன்; நுதலி ஆங்கு உரைத்த சொல்லை - குறிப்பிட்டு அங்கு சொல்லிய சொற்களை; தேன் நில் அம்முகையின் நின்ற திரு நரதேவன் கேட்டு - தேன் நிலவுகின்ற அழகிய பூவரும்பு போல நின்ற மனித உருவில் வந்த தேவனாகிய குமாரன் கேட்டு; கான் நில் அம்முகை விண்டு அன்ன கனிந்த புன்முறுவல் கொட்டி - வாசனையுள்ள அழகிய பூ அரும்பு மலர்ந்ததாற் போன்ற மகிழ்வான புன்சிரிப்பை வெளிப்படுத்தி; மீன் நில் அம் சென்னி சாய்த்து அதற்கு விழைந்து அமைந்தான் - ஒளி நிலவுகின்ற தலையைச் சாய்த்து அங்கு சொன்னவைகளை விரும்பி ஏற்றார் போலாயினர்.

(வி - ரை) சிமையோன் அங்கு சொல்லிய துன்பங்களைத் திருக்குமாரர் தமக்கு இன்பமாக ஏற்றவர் போலப் புன்சிரிப்புடன் தலையைச் சாய்த்து மகிழ்ந்தார். நூனிலம் = நூல் + நிலம். நரர் - மனிதர். மன், ஓ - அசை நிலைகள். நுதலுதல் - உணர்த்துதல். மீன் - ஒளி. அம் - அழகிய. தேனிலம் = தேன் + நில் + அம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவாலயத்துத் தாயார் வந்து ஆசி கூறல்.

96. இன்னியம் ஒலிக்குங் கோயிலிலை யிவர்ந் தங்கண் வைகும்
கன்னிய மாதர்க் கெல்லாம் களித்தகைத் தாயாய் மீன் செய்
மின்னிய முடியா டன்னை விருப்பிமுன் வளர்த்த மாட்சி
துன்னிய வன்ன மென்பாள் துன்னிவந் திறைவற் கண்டாள்.

(ப - ரை) இன் இயம் ஒலிக்கும் கோயில் - இனிய இசைக் கருவிகள் ஒலிக்கும் அந்தேவாலயத்தில்; இலை இவர்ந்து - மேற்கூறிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்க; அங்கண் வைகும் கன்னிய மாதர்க்கு எல்லாம் - அங்கே வாழுகின்ற கன்னிப் பெண்கள் யாவருக்கும்; களித்த கைத்தாயாய் - கருணையுடன் கூடிய வளர்ப்புத்தாயாக இருந்த; மீக்செய் மின்னிய முடியாள் தன்னை விரும்பி முன் வளர்ந்த - ஒளி செய்து விளங்கும் தலைமையுடைய தலைமுடியினையுடைய மேரி அம்மையை விருப்பத்துடன் முன் வளர்த்த; மாட்சி துன்னிய அன்னம் என்பாள் - மகிமை பொருந்திய அன்னாள் என்பவள்; துன்னி வந்து இறைவற் கண்டாள் - கிட்ட வந்து திருக்குமாரரைக் கண்டாள்.

(வி - ரை) தேவாலயத்தில் மேற்கூறிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது அங்கேயுள்ள கன்னியரின் வளர்ப்புத்தாயார் ஆகிய அன்னாள் என்பவள் வந்து திருக்குமாரரைக் கண்டார். அவள் மேரி அன்னையை வளர்த்தவள்; வயது முதிர்ந்தவள்; தீர்க்கதரிசி. (லூக்கா அதி. 2:36)

97. தேன்றும்மு மாலை சேர்த்தித் திருவடி பணிந்து நம்மால்
ஊன்றும்மு வேல்வாய் பின்னு துரந்துய ருணர்ந்து நொந்து
வான்றும்மு மின்னின் மின்னு மகவினை தெடிது வாழ்த்திக்
கான்றும்மு முகப்பூந் தேனுண் கண்களித் திமைத்தல் செல்லாள்

(ப - ரை) தேன் தும்மு மாலை சேர்த்தித் திருவடி பணிந்து - தேன் துளிர்க்கும் பூமாலையை அணிந்து திருவடிகளை வணங்கி; நம்மால் ஊன் தும்மு வேல்வாய் - மனிதராகிய எங்களுக்காக மனித உடலைப் பொருந்தி வந்து திருக்குமாரர்; பின் தான் உறுந்துயர் உணர்ந்து நொந்து - பிற்காலத்தில் அவருக்கு நிகழவிருக்கும் துன்பங்களை அறிந்து வருந்தி வான் தும்மு மின்னின் மின்னு மகவினை நெடிது வாழ்த்தி - ஆகாயத்தில் எழுகின்ற மின்னலைப்போல ஒளிசெய்யும் திருக்குமாரரை நீண்ட நேரம் வாழ்த்தி; கான் தும்மு முகப்பூந்தேன் உண் கண் களித்து இமைத்தல் செல்லாள் - வாசனை பொருந்திய பூவிலே தேனை உண்பதுபோல மிக மகிழ்ந்து அம்மகிழ்ச்சியினால் கண்களை இமைக்காதிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி - ரை) தேவாலயத்துத் தாயார் திருக்குமாரரை வணங்கிக் கண்ணிமையாமல் நோக்கி மிக மகிழ்ந்தார். திருக்குமாரருக்கு மின்னலும், தேவாலயத்துத் தாயாருக்குத் தேனுண் வண்டும் உவமைகள். தும்முதல் - பொருந்துதல்.

98. ஏற்றினு ளிளவற் றாளை யிணையருங் கன்னித் தாயைப்
போற்றினு ளிருவர் மாட்சி புடையில்வந் தெவருங் கேட்பச்
சாற்றினு ளின்புட் பொங்கித் தாரைநீர் தாரை யாகத்
தூற்றினுள் பெருக்குற் றின்பத் தூய்கட லமிழ்ந் தினுளே.

(ப - ரை) இளவற் தாளை ஏற்றினுள் - திருக்குமாரரது பாதங்களை வணங்கினுள்; இணை அறும் கன்னித் தாயைப் போற்றினுள் - ஒப்பு இல்லாத மேரியன்னையைத் துதித்தாள்; இருவர் மாட்சி புடையில் வந்து எவரும் கேட்பச் சாற்றினுள் - அந்த இருவரதும் மகிமைகளைப் பக்கலிலே சூழ்ந்து யாவரும் கேட்கும்படி கூறினுள்; இன்புள் பொங்கித் தாரைநீர் தாரையாகத் தூற்றினுள் - மகிழ்ச்சி உள்ளத்திலே மிக்குக் கண்ணீரை மழை போலச் சொரிந்தாள்; பெருக்கு உற்று இன்பத் தூய் கடல் அமிழ்ந்தினுள் - மகிழ்ச்சி பெருகி ஆனந்தமாகிய கடலில் மூழ்கினுள்.

(வி - ரை) தேவாலயத்துத் தாயார் திருக்குமாரரையும் மேரி அன்னையையும் வணங்கி அவ் இருவரதும் மகிமைகளை அங்கு வந்த அனைவருக்கும் கூறி மகிழ்ந்தாள். இளவல் - திருக்குமாரர். சாற்றுதல் - கூறுதல். இன்புட் = இன்பு + உள். தாரை (1) கண்ணீர் (2) மழைநீர். தாரை ஆகத்து ஊற்றினுள் எனவும் கொள்ளலாம். ஆகம் - உடல். இன்பத்தூய் கடல் - உருவகம்.

99. எடுப்பரு மின்ன யாவு மின்பமுந் துயரு மாகக்
கெடுப்பரு மாட்சி பூத்த சேழ்கொடித் துணையுந் தாயுந்
தடுப்பரு மறையின் வாய்மை தவறிலா திருக போதங்
கொடப்பரு மூலகை யாலுங் குழவியை மீட்டிட் டாரே.

(ப - ரை) எடுப்பு அரும் இன்ன யாவும் இன்பமும் துயரும் ஆக - சொல்லிய அரிய இவை யாவும் இன்பத்தையும் துன்பத்தையும் கொடுக்க; கெடுப்பு அரும் மாட்சி பூத்த சேழ் கொடித் துணையும் தாயும் - கெடுதல் இல்லாத மகிமைகளைக் கொண்ட பெருமையுள்ள அறநெறிக்கொடியையுடைய சூசைமாமுனிவரும் மேரித்தாயும்; தடுப்பு அரும் மறையின் வாய்மை தவறிலாது - மறைத்தற்கு அரிய வேதநூல் உண்மை தவறாதபடி; இரு கபோதம் கொடுப்ப அரும் உலகை ஆளும் குழவியை மீட்டு இட்டார் - இரு புறாக்களைக்கொடுத்து அரிய உலகை ஆளும் தேவ குமாரரை மீண்டும் பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வி - ரை) சூசைமாமுனிவரும் மேரியம்மையும் வேதமுறைப்படி இரு புருக்களைக் கொடுத்துத் திருக்குமாரரைத் தேவாலயக்குரவரிடம் இருந்து மீண்டும் பெற்றனர். எடுப்பு - எடுத்துக் கூறுதல். கேழ் - பெருமை. கபோதம் - புறா. குழந்தையை நேர்த்தி செய்வோர் ஒரு சோடிப் புறாக்களையேனும், இரு சோடி இளம் புறாக்களையேனும் காணிக்கையாகக் கொடுக்கவேண்டும் என விவிலிய வேதம் விதித்துளது' (லூக்கா அதி. 2:24).

தேவாலயத்திலிருந்து வெளியே வருதல்.

100. பண்டரு தவத்து மூத்தோன் வரைவில வாகி யோத
பண்டரு மறையோர் யாரும் பரிவெழீஇ முகமன் கூற
வண்டரும் புடையிற் சூழ வணிமுகை மகவை யேந்தி
கொண்டருந் தகவி னோர்பொற் கோயிலின் றேகி னாரே.

(ப - ரை) மண் தரு தவத்து மூத்தோன் வரைவில ஆகி ஓத - பூவுலகின் முதுமையுடையவராக அக்காலத்து வாழ்ந்த சிமையோன் என்னும் குரவன் அளவற்ற ஆசிகளைச் சொல்ல; பண்தரு மறையோர் யாரும் பரிவு எழீஇ முகமன் கூற - புகழ் பொருந்திய அந்தணர் யாவரும் அன்புடன் துதிகளைச் சொல்ல; அண்டரும் புடையில் சூழ - தேவர்கள் பக்கங்களிலே சூழ்ந்து நிற்க; அணிமுகை மகவை ஏந்தி - அழகிய பூ அரும்பு போன்ற திருக்குமாரரைக் கைகளிலே தாங்கி; கொண்டரும் தகவினோர் பொற்கோயில் நின்று ஏகினார் - மதித்தற்கு இயலாத தற்குணத்தினரான சூசையப்பரும் மேரியன்னையும் அழகிய தேவாலயத்திலிருந்து வெளியே வந்தனர்.

(வி - ரை) தேவாலயக் குரவரதும் ஏனைய குரவர்களதும் ஆசிகளைப்பெற்றுத் திருக்குமாரருடன் சூசையப்பரும் மேரி அன்னையும் தேவாலயத்திலிருந்து வெளியே வந்தனர். மண்டரு = மண் + தரு. பண்டரு = பண்டு + அரு. பரிவு - அன்பு. எழீஇ - எழுந்து. புடை - பக்கம். தகவினோர் - சூசைமா முனிவரும் மேரியும். கோயினின்று - ஐந்தாம் வேற்றுமை. முகை மகவு - உவமைத்தொகை. அவர்கள் அங்கிருந்து நாசரேத்துக்குச் சென்றனர். இஃது உவமைச்சுவை உள்ளது.

வினாக்கள்

1. மகனேர்ந்த படலத்திற் கூறியுள்ளவைகளைச் சுருக்கி எழுதுக.

2. மகனேர்ந்த படலத்துக் கூறியுள்ள குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலவனங்களை எழுதுக.

3. தேம்பாவணி கிறித்த சமயப் பிரசாரத்தைக் கொண்டது என்பதை மகனேர்ந்த படலத்தை ஆதாரமாகக்கொண்டு விளக்குக.

4. மகனேர்ந்த படலத்தில் வந்துள்ள அணிகளையும் அவைகளின் நயங்களையும் எடுத்துக் காட்டுக.

5. தேம்பாவணி சமயச்சார்பு நூல் எனினும் சிறந்த இலக்கிய நூல் என்பதை மகனேர்ந்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

6. அக்காலப் பாலத்தினச் சமூகம், அரசியல், கலை ஆகியவைகளை மகனேர்ந்த படலத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

7. தேம்பாவணியிலே தமிழ் மரபுகள் பெரிதும் பேணப்பட்டுள என்பதை ஆராய்க.

8. சிறு குறிப்பு எழுதுக: சீமையோன்; மலர்க்கோல்கு மாதவன், கன்னி மேரி, அன்னாள், எரோதன், மோயிசன், எருசலேம்,

9. பின்வரும் பாடல்களை உரை நடையில் எழுதுக.
'திறை நீத்தெதிர்த்தார்', 'காண்டுறேய் மலர்மேல்', 'கண்டுனி புணர்த்திலோங்க', 'தாவ நீ வெற்றி தூங்கு', 'தழீயின கலன் பொரு', 'இன்கன் பயியாப்பினை', 'திருக்கிளவிலுள்ள தோன்றல்.'

10. பின்வரும் சொற்றொடர்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக: அருள் மறவாமுறை கொண்டு, கடுகி வீசிக் கடுத்தனனே, எதிரெதிரே விருந்துசெய, உண்டுளி யுயிரைத் தந்த. புடைத்தருள் செவிகால்வீச, விழுப்பட மூகத்துக்கண், இன்பருந்தின் கூய்க்குயில், இன்னரம்புளர வென்பவே, தழீயின கலன்பொரு, உலகிட ரொழிக்குவ போன்றே, நீழ்த்த மாண்பிவர்.

11. பின்வரும் தொடர்கள் குறிப்பிடும் வரலாற்று நிகழ்ச்சிகளை எழுதுக:
'அழுதொழுகும் திருநாடளித் தருள் செய்தான்".
'ஏரோதனென்றரசன் தன்னிய கொடுங்கோல் துயர்செய'
'செல்வர் மூன்றணித்த வாணிதியம்'
'மோயிசன் தன்கைச் சூரலிற் பிரிந்தமொய் கடல் வழிவிடுத்தவ்வ'

12. வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகனேர்ந்த படலம்

இது முதற்காண்டத்தள் பன்னிரண்டாம் படலம் ஆக உள்ளது. மகன் + நேர்ந்த படலம். பெற்றோர் திருக்குமாரனை இறைவனுக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தமையைக் கூறும் பகுதியாகும். நேர்தல் — ஒப்புக்கொடுத்தல். அந் நாட்டினர் முதற் குழந்தையை எருசலேமில் இறைவனுக்கு நேர்த்திசெய்தற்கான காரணமும் திருக்குமாரருடன் பெற்றோர் எருசலேமுக்குப் புறப்படுதலும், குறிஞ்சி—முல்லை- மருதம் ஆகிய நிலங்களின் வளங்களும், இன்னொருவருக்குத் தீங்கு நினைப்பவன் தண்டிக்கப்படுவான் என்பதை விளக்கும் ஒரு நிகழ்ச்சியும், எருசலேம் நகரின் காட்சியும், அவர்கள் தேவாலயத்தை அடைதலும், காணிக்கை கொடுத்தலும், தேவாலயக் குரவர் திருக்குமாரரை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தலும் திருக்குமாரரின் மகிமைகளைக் கூறுதலும், அன்னாள் என்னும் பரிசுத்த தாயார் திருக்குமாரரைத் தரிசித்தலும், பெற்றோர் இரு புறாக்களைக் கொடுத்துக் குழந்தையை மீண்டும் பெற்றமையும் பெற்றோர் திருக்குமாரருடன் தம் ஊருக்குத் திரும்புதலும் கூறப்படுகின்றன.

முன்கதைத் தொடர்பு

யூதேயா நாட்டிலே தாவீது அரசன் மரபிலே வந்த சூசையப்பர் இளமையிலேயே உலக வாழ்வை வெறுத்துக் கானகத்திற்குச் சென்று தவத்தில் ஈடுபட்டார். வானவன் ஒருவனின் அறிவுரைப்படி நகரை அடைந்து அனைவரும் மதிக்கும்படி கடவுள் நெறியொழுகினார். மக்கட் குலத்தின் துன்பங்கள் நீங்கக் கடவுள் மக்களுருவில் வரவேண்டுமென வேண்டினார். இக்காலத்தில் மேரி அம்மையார் எருசலேம் நகர்த் தேவாலயத்தில் இருந்தார். அவர் திருமணம் செய்யவேண்டுமென வானவன் ஒருவன் அறிவுரை வழங்கினான்.

ஆண்டவன் கட்டளைப்படி தேவாலயப் பிரதம குருவாகிய சிமையோன் சூசையப்பருக்கும் மேரி அம்மைக்கும் திருமணத்தை நிறைவேற்றினார். ஆண்டவன் கட்டளைப்படி சூசைமுனிவர் தம் மனைவியுடன் நாசரேத்திற்குச் சென்று வாழ்ந்தார். ஆண்டவன் அருளால் தேவகுமாரர் பூவுலகு உய்ய அவர்களுக்கு மகவாகத்தோற்ற அருள்கொண்டார். அக்காலத்தில் ஒத்தவியான் என்னும் அரசனின் கட்டளைப்படி குடிசனக் கணிப்புக்குக் கணக்குக் கொடுத்தற்காகப் பெத்தலகேம் நகருக்குத் தம் மனைவியுடன் சூசையப்பர் சென்றார்.

அவர்கள் நகர்ப்புறத்திலே ஒரு குகையிலே தங்கியிருந்தனர். அப்போது இரவு பதினைந்து நாழிகையளவில் திருக்குமாரர் அவதரித்தார். அங்கு வாழ்ந்த இடைக்குல மக்கள் திருக்குமாரரை வணங்கினர். அவர் அவதரித்தநேரத்தில் ஆகாயத்திலே தோன்றிய புதிய நட்சத்திரத்தை வழிகாட்டியாகக்கொண்டு மூன்று அரசர்கள் திருக்குமாரர் இருந்த இடத்தை அடைந்து அவரை வணங்கினர். பின்பு அவர்கள் அந்நகரில் ஒரு வீட்டிலே தங்கியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவருகின்றன !

க. பொ. த. (உயர்தர) வகுப்புப் பாட நூல்கள்

★ திருவெம்பாவை-திருவம்மானை

★ பாரதி பாடல்

★ திருக்குறள்

வெளியிடுவோர் :

விஜயலட்சுமி புத்தகசாலை

248, காலி வீதி : : வெள்ளவத்தை

கொழும்பு-6.

தொலைபேசி : 88930

குமரன் அச்சகம், கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org